அறைவு 04 இயம் 06 Sept 5-11, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS FOR FOREIGN VISA

Contact 0770203201

HELLO MOBILE WORLD



122, NC Road Trincomalee

0777154663 - 0712674050

சுயாதீனச் சர்வதேச விசாரணையைக் கோரி கிழக்கிலும்

# கையெழுத்துப் போர்!

## சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு



உள்ளக விசாரணையை எதிர்த்து சர்வதேச விசாரணையே வேண்டும் என்பதை வலியுறுத்தி வடக்கில் நேற்று ஆரம்பித்துள்ள கையெத்துப் போரினைக் கிழக்கிலும் பரவலாக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு ஆரம்பித்துள்ள இக்கையெழுத்துத் திரட்டும் முயற்சியினைக் கிழக்கிலும் முன்னெடுப்பதன் ஊடாக தாயகப் பிரதேசம் எங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை தமிழர் செயற்பாட்டுக் குழுவின் பிரதிநிதிகள் ஆரம்பிக்கவுள்ளனர்.

17

## அரசியலமைப்புச் சட்டம் விரைவில் திருத்தப்படும்

### த.தே.கூ பேச்சாளர் சுமந்திரன்



இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் திருத்துவதற்கான முடிவை பிரதமர் ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவுற்ற பின்னர் ஆதவன் செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள....

17

## பிராந்தியங்களை உருவாக்கி அதிகாரங்களைப் பகிரலாம்

### எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்



அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை விட இலங்கையில் பிராந்தியங்களை உருவாக்கி அப்பிராந்தியங்களுக்கு அதிகளவு அதிகாரங்களைப் பகிர்வதன் ஊடாக நல்லாட்சியை முன்னெடுக்கலாம் என இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.....

17

## மத்தியஸ்த சபைக்கான நிதிச்சட்டத்தை உருவாக்குக!

### கிழக்கு மாகாணசபையிடம் வேண்டுகோள்

கிழக்கில் இயங்கிவரும் மத்தியஸ்த சபைகளுக்கான நிதியத்தை உருவாக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்திக்கான மாற்றுக் கொள்கை நிறுவனம் இக்கோரிக்கையினை மாகாண சபைக்கு முன்வைத்துள்ளது.

இந் நிறுவனம் அனுப்பிவைத்தள்ள கடிதத்தில் ''கிழக்கு மாகணத்தை பொருத்த வரை மாகாணத்தின் நிருவாகத்திற்கு

17

## தங்கருபன் விசாரணை திசைதிருப்பப்படுகின்றதா?

### புதிய கோணத்தில் விசாரணைகள் ஆரம்பம்!!



மீன் பிடிக்கச் சென்று காணாமல் ஆக்கப்பட்டுள்ள சல்லி கிராமத்தைச் சேர்ந்த மீனவ இளைஞனான தங்கரூபன் தொடர்பான உண்மைத் தகவல்கள் எவையும் தற்போதுவரை வெளிவராத நிலையில், காவல்துறை புதிய கோணத்தில் இக் காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுதிருப்பதாக மலைமுரசிற்கு நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

திருகோணமலை, சல்லி கிராமத்தைச் சேர்ந்த தங்கரூபன் (முத்தன்) கடந்த 24ம் திகதி முதல் காணாமல் ஆக்கப் பட்டுள்ள நிலையில் அவரிடம் இருந்து இறுதியாகக் கிடைத்த

17

## தேர்தல் ஆணையாளர் திருகோணமலையில்!

ஸ்ரீலங்காவின் தேர்தல் ஆணையாளர் திருகோணமலையில் எதிர்வரும் 8ம் திகதி தேர்தல் திணைக்களத்தில் 60வது வருடக் கொண்டாட்டத்திற்கு வருகை தருவார் என்ற செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அன்றைய தினம் மாலை 5மணிக்கு திருக்கோணேஸ்வரத்தில் விசேட பூசைகளில் ஈடுபடவுள்ளார்.

(கதிரவன்)

## இராணுவப் பயிற்சியில் 53 வெளிநாட்டுப் படையினர்

கிழக்கில் ஆரம்பித்துள்ள நீர்க்காக இராணுவப் பயிற்சி - 6ல் ஐம்பத்து மூன்று சர்வதேசப் படையினர் கலந்துகொண்டிருப்பதாக ஸ்ரீலங்காவின் இராணுவ வலைத்தளம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்காவின் இராணுவத்தினர் இரண்டாயிரத்து இருநூறு பேர், இருநூற்று நாற்பத்தைந்து கடற் படையினர் மற்றும் நூற்று நாற்பது வான்படையினர் உட்பட வங்காளதேசம், சீனா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க படையினர் இப்பயிற்சியில்

17





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தீர்விற்கான உறுதிமொழியும் நிபந்தனையும்!

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமிழரின் அரசியல் தலைவர்களுள் ஒருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தனுக்கு வழங்கி வைத்திருப்பதன் ஊடாக புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பித்து வைக்க இலங்கையின் நல்லாட்சிக்கான அரசு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் ஊடாகவும் அதனைத் தமிழ்த் தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளதன் ஊடாகவும் முன்னெடுக்கப்படக்கூடிய சாதக பாதக விடயங்களை பக்கச்சார்புடனும், பக்கச்சார்பற்றும் பலர் விமர்சித்து வருகின்றார்கள்.

ஆனால் இலங்கையின் பேரினவாத வரலாறு ஆரம்பித்த காலம்முதல் தமிழ்த் தலைமைகள் காலம் காலமாக ஏமாற்றப்பட்டிருப்பதும் அவ்வாறு தாம் ஏமாற்றப்பட்டதைக் காலந்தாழ்த்தி வெளியிட்டு வைப்பதும் நடைபெற்றுக் கொண்டிருப்பது தனியொரு வரலாறாகத் தொடர்கின்றது. இந்நிலையில் திடீரென எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமிழ்த் தலைமைக்கு விட்டுக் கொடுத்திருப்பதால் தமிழர்களுக்குப் பாரிய நன்மை நிகழும் என எதிர்பார்ப்பது சரியா?

நடந்து முடிந்த விடயங்களைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும் போது தமிழர்களுக்குப் பாரிய நன்மைகளைச் செய்யக்கூடிய எந்தவொரு வாய்ப்பையும் சிங்கள அரசுகள் தமது ஆட்சியின் ஊடாக விட்டுக்கொடுத்ததில்லை என்பதே பாடமாக உள்ளது. இந்நிலையில் தமிழ் அரசியல் தலைமையொன்றுக்கு எதிர்கட்சித் தலைவர் பதவியை வழங்கும் போது இவ்விடயம் கவனத்திற் கொள்ளப்படாமலே வழங்கப்பட்டிருக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்துடன் இவ்வாறு பதவியை வழங்கும் போது அப்பதவியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கத்தக்கதான பொறிமுறையொன்றை உருவாக்காமலே சிங்கள அரசு அதனை விட்டுக் கொடுத்திருக்குமா? என்பதையும் ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள இப்பதவியின் ஊடாக எவ்வகையான நன்மைகளை எதிர்காலத்தில் நாங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எதிர்வு கூறுவதை விட சிங்கள அரசு இப்பதவியை வழங்கியதன் ஊடாக உடனடியாகப் பெற்றுக்கொண்டுள்ள நன்மை எது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்கள் சம அந்தஸ்த்துடன் இத் தேசத்தில் வாழ வாய்ப்பளிக்கப்படுகின்றார்கள் என்பதைச் சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவதன் ஊடாக இவ்வாறு எழுந்துள்ள இனங்களிடையேயான நல்லிணக்கத்தை எவ்வகையிலும் சர்வதேசப் பொறிமுறைகள் குழப்பி விடக்கூடாது என்பதையும் அறிவுறுத்தும் நன்மை யொன்றை உடனடியாக இலங்கையின் அரசு பெற்றுக்கொண்டுள்ளது.

ஒரு இனம் நீதியற்ற முறையில் அழிக்கப்பட்டிருந்தால் அந்த இனம் நிரந்தர சமாதானத்திற்குச் செல்லக்கூடிய படிமுறைகளான முதலில் நிலைமாறுகால நீதி, இரண்டாவது நல்லிணக்கம், மூன்றாவது நிரந்தர சமாதானம் ஆகிய படிநிலைகள் சர்வதேசச் சட்டங்களால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில் ஸ்ரீலங்கா தேசத்தில் நிலைமாறுகால நீதிக்கு முன்னரே நல்லிணக்கத்தை அடைவதற்கு தமிழ் இனம் தயாராகிவிட்டது என்பதையும் அந்த நல்லிணக்கத்தை பகிர்ந்துகொள்ள தமிழினத்தை அழித்தவர்களும் தயாராகி விட்டார்கள் என்பதையும் இந்தப்பதவிப் பகிர்வுகள் வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன.

அதெவேளை வழங்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைமைப்பதவியை ஒரு ஊசலாடும் நிலையில் வைத்திருப்பதை சிங்கள அரசு உறுதிப்படுத்தியும் உள்ளது. சுமார் ஐம்பத்தியாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லாட்சிக்கான தேசிய அரசில் இணையாதிருக்கும் அதேவேளை தனித்தொரு எதிர்க்கட்சியாகவும் தொழிற்படப் போவதாக அறிவித்துள்ளனர். இவர்கள் முதலில் தாமே எதிர்கட்சித் தலைவர் பதவியைப் பெறத் தகுதியுடையவர்கள் எனக் கோரிய போதும் அக்கோரிக்கைக் கடிதத்தைத் திடீரெனத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியிலுள்ள தமிழ்த் தரப்பு எப்போது சிங்கள அரசிற்கு எதிரான அல்லது அதன் நலன்களுக்கு எதிராக எதிர்க்கட்சிப் பதவியைப் பயன்படுத்த முனைகின்றதோ அச்சந்தர்ப்பத்தில் மேற்கூறிய உறுப்பினர்கள் தன்னிச்சையாகத் தாமே எதிர்க்கட்சியாகத் தொழிற்படப்போவதாக அறிவித்து எதிர்க்கட்சித் தலைமையப் பதவியை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம் என்றி நிலையில் இப்பதவி ஒரு ஊசலாடும் பதவியாகவே இருக்கப் போகின்றது.

எனவே தேசிய நலனை முன்னிறுத்தும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழர் நலனில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## செம்பீஸ்வரர் ஆலய தாபகரின் நினைவு

வரலாற்றுப் புகழ்பெற்ற திருகோணமலை குச்சவெளி செம்பிமலை ஸ்ரீ செம்பீஸ்வரர் ஆலய ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய சுவாமிஜீ ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி அவர்களின் 38வது நினைவுதினமும், ஆவணிமாத பௌர்ணமி தினமும் 29.08.2015ம் திகதியன்று உணர்பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

இப்பூசை நிகழ்வினை செட்டிபாளையம் சிறீசோமகலாநாயகி சமேத சோமநாத லிங்கேஸ்வரர் ஆலய திருவருள் சங்கத்தினர் நடாத்தியிருந்தனர். (அச்சுதன்)





## “தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு”

### திருகோணமலை ரோட்டறி கழகம் நடவடிக்கை

தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையினை ஏற்படுத்து- வதற்குமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சிசிசி 1333 என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப் படுத்துவதனை நோக்காக கொண்டும், ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம் திருகோணமலையை கடந்த 03.09.2015 வியாழக்கிழமை (05) வந்தடைந்தது.

இவர்களை வரவேற்கும் நிகழ்வு தைரியம், இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயரையுடைய, நிறுவனமும், திருகோணமலை ரொட்டறி கழகமும் இணைந்து ஏற்பாடு செய்தன.

அத்துடன் இந்த நிகழ்வை ஒட்டி "பேச்சு சுதந்திரம்" என்ற தலைப்பில் ஒரு ஓவிய போட்டியும் நடைபெற்றது.. இந்த நிகழ்வில் கலந்து முதல் 3 இடங்கலை பெற்ற பாடசாலை மானவர்களுக்கு ஒரு வருடத்துக்கான கற்றல் உபகரனங்கள் வழங்கப்பட்டது. பங்குபற்றியவர்களுக்கு இலங்கை கிரிக்கட் அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார கையெழுத்து இட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





## வேல் நடை பஜனைப் பவனி 07ம் திகதி !

சின்னக்கதிர்காமம் எனப்போற்றப்படும் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கொட்டியாபுரபற்று இந்து சமய அபிவருத்தி ஒன்றியம் நடாத்தம் வேல் நடை பஜனை 9வது ஆண்டாக இவ்வாண்டும் இடம்பெற உள்ளது. 07.09.2015 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கடற்கரைச்சேனை கற்பா விநாயகர் ஆலயத்தின் புனித வேலுக்கு அபிசேகம் இடம்பெற்று வேல் நடை பஜனை குழுவினருக்கு சின்ம் சூட்டப்பட்டு வேல் நடை பஜனை ஆரம்பமாகும். அன்றைய நாள் சேனையூர் நாகம்மாள் ஆலயம், வர்ணகுல விநாயகர் ஆலயம், சாலையூர் முத்துமாரியம்மன் ஆலயம், கட்டைப்பறிச்சான் சற்பக விநாயகர் ஆலயம், கணேசபுரம் திருமுருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களை தரிசித்து அன்று இரவு தங்கபுரம் தங்க விநாயகர் ஆலயத்தில் பஜனைக் குழுவினர் தங்கி மறுநாள் 08.09.2015 செவ்வாய்க்கிழமை மூதூர் கிழக்கில் உள்ள பல ஆலயங்களை தரிசித்து அன்று இரவு வீரமாநகர் நாகம்மாள் ஆலயத்தில் தங்கி மறுநாள் 09.09.2015 புதன்கிழமை நல்லூர் பகுதிகளில் உள்ள ஆலயங்களை தரிசித்து அன்று இரவு உப்பூறல் விநாயகர் ஆலயத்தில் தங்கி மறுநாள் 10.09.2015 வியாழக்கிழமை இலங்கைத்துறை பகுதியில் உள்ள ஆலயங்களை தரிசித்து அன்று இரவு செண்பகநாச்சியம்மன் ஆலயத்தில் தங்கி மறுநாள் 11.09.2015 வெள்ளிக்கிழமை ஈச்சிலம்பற்று பிரிவில் உள்ள ஆலயங்களை தரிசித்து அன்ற இரவு புன்னையடி லம்போதரர் ஆலயத்தில் தங்கி மறுநாள் 12.09.2015 சனிக்கிழமை வெருகல் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களை தரிசித்து அன்று இரவு முத்துச்சேனை சித்திவிநாயகர் ஆலயத்தில் தங்கி மறுநாள் 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை இரவு வெருகல் பகுதியை வேல்நடை பஜனைக் குழுவினர் சென்றடைவார்கள். மறுநாள் 14.09.2015 திங்கட்கிழமை வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா ஆரம்பம் ஆகும் என கொட்டியாபுரபற்று இந்து சமய அபிவிருத்து ஒன்றியத்தின் செயலாளர் அ. குகராஜா தெரிவித்தார். (அச்சுதன்)

## மாவட்டப் பெண்கள் சமாச உறுப்பினர்கள் தெரிவு

திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் மூதூர் திரிசீடி கட்டிடத்தில் இடம் பெற்றது.

சமாசத்தின் மாவட்டத் தலைவியாக கணேஸ் லேன் கிராமத்தின் எம்.என்.இல்முநிஸா அவர்களும் செயலாளராக மூதூர் பெருவெளியை சேர்ந்த ரா.சாந்தாதேவி அவர்களும் பொருளாளராக பாலையூற்றை சேர்ந்த ரா.சோபியாமேசி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அச்சுதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் விளாவட்டவான் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்திற்குட்பட்ட விளாவட்டவான் கிராமத்தில் மீனவ வீதியில் வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினர் வாழ்வதற்கு வீட்டு வசதி இல்லாமலும், குளிப்பதற்கு நீர் வசதி இல்லாமலும் பொதுக் கிணறுகளை வழக்கமாகப் பாவித்து வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பகுதியான இப்பகுதியில் இதுவரையில் தற்காலிக வீடுகளிலேயே மக்கள் வசித்துவருவதுடன் மலசல வசதிகூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

நல்லாட்சி நடாத்திவரும் புதிய அரசாங்கம் வீடு இல்லாத அனைவருக்கும் வீட்டினை வழங்கி வருகின்ற நிலையில் இப்பகுதியையும் நோக்கவேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

விளாவட்டவான் மீனவர் வீதியில் வசிக்கும் இம்மக்களின் பிரச்சினைகளை அரசியல்வாதிகள் தீர்த்து வைக்க நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## மீண்டும் எலிக்காய்ச்சல் அபாயம்

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதார பிரிவில் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையின் போதே அவர் இதனைக் கூறினார். குறிப்பாக விவசாயிகள், செங்கல் தொழில் செய்வோர், கால்நடை வளர்ப்போர் இந்த எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்படுகின்றனர். எலிக்காய்ச்சல் பரவும் முறை, எலிக்காய்ச்சலுக்கான அறிகுறிகள், சிகிச்சை பெறும் முறை, எலிகளை கட்டுப்படுத்துதல் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

## "நாம் புறக்கணிக்கப்பட்டோம்"

கடந்த வருடம் அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள்களை சலுகை அடிப்படையில் வழங்கும் திட்டத்தின் ஊடாக உள்வாங்கப்பட்ட ஆண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட போதிலும் ஒரு பகுதி பெண் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளமையால் ஏனைய பெண் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

## வாசிகசாலையைக் கையளிக்குமாறு வேண்டுகோள்




போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட சின்னவத்தைக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள வாசிகசாலைக்கான நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்து பாவனைக்குக் கையளிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

"தெயட்டகிருள" திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த வாசிகசாலை கட்டடத்தை சூழ மரங்களும் செடிகளும் வளர்ந்து பற்றையாக காட்சியளிக்கின்றது. போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குபேரனிடம் கேட்டபோது, "தெயட்டகிருள" திட்டத்தின் கீழ் எமது பிரதேசத்தில் பூர்த்தி செய்யப்படாமலுள்ள திட்டங்கள் தொடர்பில் சம்மந்தப்பட்ட அமைச்சுக்கு நாம் அறிவித்துள்ளோம். இதில் சின்னவத்தை வாசிகசாலையும் அடங்குகின்றது. எனவே, இந்த வாசிகசாலைக்கும் நிதியொதுக்கீடு செய்யப்படுமென்று எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

(நன்றி - தமிழ்மிரர்)

## கடதாசி ஆலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்


வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்களின் கடந்த இரண்டு மாதமாக நிலுவையிலுள்ள சம்பளத்தை வழங்குமாறு கோரி ஊழியர்கள் கடந்த வியாழக்கிழமை கடதாசி ஆலை முன்னால் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். கடந்த மார்ச் மாதம் தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டே எங்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது. மேலதிகாரிகளால் எங்களுக்கான சம்பளம் நிலுவை இல்லாமல் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தும் கடந்த ஜுலை மாத சம்பளம் இரண்டு தடவைகளில் 50 வீதம் வழங்கப்பட்டதுடன் ஒகஸ்ட் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படவில்லை. எங்களுக்கு தொடர்ச்சியாக சம்பளம் நிலுவை இல்லாமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## சிறுவர் மகளிர் பணியகம் திறப்பு

காவல் தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை காவல் நிலையத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் மகளிர் பணியகம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இங்கு கருத்து தெரிவித்த வாழைச்சேனை காவல் நிலைய பொறுப்பதிகாரி திப்புட்டுமுன, சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சின் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வாழைச்சேனை காவல் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட இக் கட்டடம் இப்பிரிவுக்குள் ஏற்படும் சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலகங்களோடு இணைந்து தீர்வை பெற்றுக் கொடுப்பதே சிறுவர் மகளிர் பணியகத்தின் சேவையாக இருக்கும் என்றார்.

## பாம்புக்கடிக்குள்ளாகி மரணம்

வெல்லாவெளி காவல் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தை சேர்ந்த இளையதம்பி வைரமுத்து (வயது 62) என்பவர் பாம்புக்கு கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.. இவரது வீட்டுத் தோட்டத்திலேயே இவர் பாம்புக் கடிக்குள்ளானதாகவும் இதனைத் தொடர்ந்து விஷகடி வைத்தியரிடம் இவர் சிகிச்சை பெற்றுவந்ததாகவும் காவல்துறையினர் கூறினர்.



## அபிவிருத்திக் குழு தலைமைப் பதவிக்கான சமிக்ஞை

மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் தலைவர் நியமனங்கள் அடுத்த வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்ற இச் சந்தர்ப்பத்தில் 22 தேர்தல் மாவட்டங்களுக்காகவும் குழுக்களின் தலைவர்கள், அமைச்சர்கள் போன்றோரோ அல்லது செயற்குழுக்களின் தலைமைப் பதவி வகிப்போரோ நியமிக்கப்பட மாட்டர்கள் என தெரிய வருகின்றது.

மாறாக நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்டத்தை வெற்றியீட்டிய அரசியல் கட்சி உறுப்பினர் ஒருவர் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்படலாம் என தெரியவருகிறது.

இதன்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை வெற்றி கொண்ட த.தே.கூ உறுப்பினர்களில் ஒருவர் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைமைப் பதவியை வகிக்க சந்தர்ப்பம் உள்ளதாக அனுமானிக்கப்படுகிறது.





## கல் மண் போன்றவற்றால் பல மாதம் தடைப்பட்டுள்ள வீதி


இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி செப்பனிடும் பணியை நிறைவு செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இருதயபுரம் கிழக்கு கி.சே பிரிவுக்குட்பட்ட குறுக்கு வீதி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், வீதியை செப்பனிடுவதற்காக வீதி நடுவில் கொட்டப்பட்ட கல், மண் என்பன அப்படியே கிடப்பில் இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தங்களது வாகனங்களை பிறிதொரு இடத்தில் நிறுத்திவிட்டு நடந்தே தம் வீடுகளுக்கு செல்வதாகவும் மேலும் தெரிவித்தனர். இவ் அசமந்தப் போக்குத் தொடர்பாக பிரதேச செயலகத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பிருக்கும் தெரியப்படுத்தி உள்ளதாகவும் தெரிய வருகின்றது.



## தனியார் நிறுவனம் சேதம்



களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிலையமொன்று இனந்தெரியாதோரினால் கடந்த வியாழக்கிழமை மாலை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்தக் கல்வி நிலையம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டு-வருவதாகவும் காவல்துறையினர் கூறினர். அத்தனியார் கல்வி நிலையம் சேதமாக்கப்பட்டமைக்கு ஏதேனும் தனிப்பட்ட காரணமா அல்லது போட்டியின் நிமித்தம் சேதமாக்கப்பட்டதா என இதுவரையிலும் சரியான காரணம் தெரியவரவில்லை எனவும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய கடவுச்சீட்டை தொடர்ந்து பயன்படுத்தலாம்

புதிய கடவுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பழைய கடவுச்சீட்டை தொடர்ந்து பயன்படுத்த முடியுமென குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. கை விரல் அடையாளம் மற்றும் டிஜிட்டல் புகைப்படத்தின் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.என்.ரணசிங்க குறிப்பிட்டுள்ளார். ஒரே நாளில் கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்வதற்கு 3,500 ரூபாவும் சாதாரண முறையில் பெற்றுக்கொள்வதற்கு 1,500 ரூபாவும் பெற்றுக் கொள்வதாகவும் ரணசிங்க தெரிவித்துள்ளார்.




இதேவேளை வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான கருமபீடங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய 16 கருமபீடங்கள் தற்போது 32ஆக அதிகரிக்க-ப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# கோட்டாவை காப்பாற்றவே பொய் சாட்சி - ஓய்வு பெற்ற மேஜர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ள பாரியளவான நிதிமோசடி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர நேற்று ஆஜராகினார்.

குறித்த ஆணைக்குழு முன்னிலையில் ஏற்கனவே ஆஜராகியபோது கோட்டாபய ராஜபக்சவை காப்பாற்றும் நோக்கில் பொய்யான விடயங்களை சாட்சியமாக தாம் வழங்கியதாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர ஏற்றுக் கொண்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ச மீது தனக்கு தனி மரியாதை இருப்பதாகவும், அதன் காரணமாகவே தாம் பொய்சாட்சி வழங்க நேரிட்டதாகவும் அவர் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று அவர் கூறினார்.

இந்த நிலையில் பொய்சாட்சி வழங்கியமைக்கான காரணம் மற்றும் ஆணைக்குழுவை அவமதித்ததை போன்றவற்றுக்கான காரணங்களை எதிர்வரும் 17ஆம் திகதி ஆஜராகி விளக்கம் தருமாறு ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

# குளவி வளர்க்கப்பட்ட தபாற்பெட்டி

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியின் மல்லிப்பூ சந்தியில் உள்ள தபாற்பெட்டியினுள் காணப்பட்ட குளவிக்கூடு நீண்ட நாட்களின் பின்னர் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக குறித்த தபாற்பெட்டியில் குளவிக் கூடு காணப்பட்டதால் கடிதங்களை அனுப்புவதற்கு பிரதேச மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.



ஹட்டன் தபால் நிலைய பிரதான பொறுப்பதிகாரி தலைமையில் குளவிக் கூட்டை அகற்றுவதற்கான முயற்சிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது பயனளிக்கவில்லை.

இந்த நிலையில் அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரது உதவியுடன் இந்த குளவிக்கூடு நேற்று வெள்ளிக்கிழமை பகல் பிரதேச வாசிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அகற்றப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தபாற்பெட்டியில் இருந்து அகற்றப்பட்ட தேன்கூட்டிலிருந்து 3 போத்தல்களுக்கு தேன் பெறப்பட்டுள்ளது.

# தோட்டம் அல்ல இனி கிராமம்

புதிய அமைச்சராக சத்தியபிரமாணம் செய்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளதாவது, மலையகப் பெருந்தோட்ட மக்களின் லயன் வாழ்க்கை முறையை ஒழித்து தோட்டம் என்ற சொல்லுக்கு பதிலாக கிராமங்களாக அவற்றை மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தை அமைச்சு மட்டத்தில் முன்னெடுக்கவுள்ளோம்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆட்சியில் 1997ல் உருவாக்கப்பட்டது. அதேபோல 2009ல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஆட்சியில் இல்லாதொழிக்கப்பட்டது. இதன்போதும் இதன் பின்னரும் பலர் அந்த அமைச்சுப் பதவிகளை வகித்தார்கள். அது இல்லாமல் ஆக்கப்பட்டபோது யாரும் அதனை மீளப்பெற முயற்சிக்கவில்லை. அந்த அமைச்சு மீள நிறுவப்படவேண்டும் என்பதை இவர் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.






# மத்தள விமான நிலையம் நெல் களஞ்சியசாலை ஆகின்றது

அம்பாந்தோட்டை, சூரியவெவ பகுதியில் தற்போது பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.
மத்தள விமான நிலையத்தை நெல் களஞ்சியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே சுமார் 500க்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
மேலும் அம்பாந்தோட்டை நகரத்தில் உள்ள கடைகளும் மூடப்பட்டு கருப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த கடந்த புதன்கிழமை நெல் மூடைகளை ஏற்றிய முதலாவது தொகுதி லொறி மத்தள விமான நிலையத்திற்குச் சென்ற போது பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்பகுதியிலிருந்து தமிழ் கிராமங்களுக்குள் யானைகள் விடுவிப்பு

**முல்லைத்தீவு - முத்தையன்கட்டு** கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு யானைகள் புகுந்து பயன்தரு மரங்கள் மற்றும் நெற்பயிர்செய்கை என்பன நாசமாகியுள்ளதாக குறித்த பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இரவு வேளைகளில் வீடுகளில் வசிப்பதற்கு கூட அச்சமடைந்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் முறையிட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2009 ஆண்டிற்கு முன்னர் தமது பிரதேசங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்ட மக்கள், போருக்கு பின்னரே இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

யானைகளை துரத்துகின்ற போதிலும் அவை நகருவதில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிப்பதுடன், இவ் யானைகள் தென்பகுதியிலிருந்து கொண்டுவந்து தமது பிரதேசத்தில் விடப்பட்டவை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யானையினைக் கட்டப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை ரணிலுடன் பேச்சு

தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்போன்றை மேற்கொள்ள எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக வட,கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்து வறுமைகோட்டின் கீழ்வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த குறித்த சந்திப்பு ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இந்தச் சந்திப்பானது தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் தலைவர் கேமன் குமார தலைமையில் நடைபெறவுள்ளது. இம்மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள 44 நலன்புரி முகாம்களின் பிரதிநிதிகளும் ஏனைய மாவட்டங்களான மன்னார், திருகோணமலை, மட்டகளப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த ஒரு மாவட்டத்திற்கு தலா 10 பிரதிநிதிகளும் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்யபட்டுள்ளது.



# இரு வருடங்களில் சுத்தமான நீர்

எதிர்வரும் இரண்டு வருடக் காலப்பகுதியில் சிறுநீரக நோய்க்கு அதிகம் முகம் கொடுத்துவரும் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு அரசாங்கம் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒரு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

மெதிரிகிரிய தலாகொலவெல ஸ்ரீ சுதர்ஷனாராம விஹாரையில் நேற்று நடைபெற்ற சிறுநீரக நோயாளிகளுக்கான நாளொன்றுக்கு 24,000 லீட்டர் நீரை வழங்கும் இயந்திரமொன்றை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## வேறு வழியின்றி கெமரூன் ஒப்புதல்



ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் இத்தாலி நாடுகளின் எச்சரிக்கையின் விளைவாக அதிக எண்ணிக்கையில் அகதிகளை குடியமர்த்த பிரித்தானிய நாட்டின் பிரதமரான டேவிட் கெமரூன் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆசிய மற்றும் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் குடியேற வருபவர்கள் சந்திக்கும் இடையூறுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அதிகரிக்கும் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல், டேவிட் கெமரூன் புலம்பெயர்ந்தவர்களை நாட்டிற்குள் அனுமதிக்காமல் இருந்து வந்தது, பிற ஐரோப்பிய நாடுகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதற்கு பிரதமர் உடனடி தீர்வு காண வேண்டும் என ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் இத்தாலி நாடுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன. பிற ஐரோப்பிய நாடுகளின் நெருக்கடி நிலையை ஈடுக்கொடுக்க முடியாது கெமரூன் தற்போது அதிக எண்ணிக்கையில் அகதிகளை குடியமர்த்த முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் வட ஆப்பிரிக்கா, எரித்தியா மற்றும் சிரியா நாடுகளிலிருந்து வரும் புலம்பெயர்ந்தவர்களை குடியமர்த்துவது தொடர்பான கொள்கை முடிவுகளை மறு ஆய்வு செய்ய உள்ளதாக பிரதமர் கேமரூன் தெரிவித்துள்ளார்.

## 3லட்சம் பேரை குறைக்க திட்டம்



இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் வீழ்ச்சியை நினைவு கூறும் அணிவகுப்பில் உரையாற்றிய சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், ஜப்பானினுடைய ஆக்கிரமிப்பை, தயக்கமின்றிக் கடினமாகப் போராடி, தோற்கடித்த சீன மக்களை நினைவு கூருவதாகவும் தனது மக்கள் விடுதலை இராணுவத்திலிருந்து மூன்று இலட்சம் பேரைக் குறைக்கப் போவதாகவும் தெரிவித்தார். இந்த அணிவகுப்பில், அதிகமாக சீனா, ரஷ்யா மற்றும் அதன் சார்பு நாடுகளையும் உள்ளடக்கிய 12,000க்கும் அதிகமாக துருப்புக்கள் அணிவகுப்பை மேற்கொண்டிருந்தன.

இதுவரை பொதுவுக்கு வெளிப்படுத்தப்படாத, பல வீச்சுக்களை கொண்ட பலிஸ்டிக் ஏவுகணைகளும் தாங்கிகள் மற்றும் கவச வாகனங்களும் பங்கேற்றவேளை பல மேம்படுத்தப்பட்ட தாக்குதல் விமானங்களும், குண்டுவீச்சு விமானங்களும் பறப்பில் ஈடுபட்டிருந்தன.

## ரயில் புரண்டதில் 38 பேர் அவதியில்

இந்தியாவின் கடலூர் அருகே இன்று அதிகாலை சென்னை எழும்பூரிலிருந்து புறப்பட்ட ரயில் தடம் புரண்டதினால், 38 பேர் காயமடைந்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தின்-போது, ரயிலின் ஐந்து பெட்டிகள் தடம்புரண்டன. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பள்ளிவாயல் ஒன்றில் தொடர் குண்டுவெடிப்பு

### உரிமை கோரினர் ஐ.எஸ்.ஐ

யேமனிய தலைநகர் சனாவிலுள்ள பள்ளிவாசலொன்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இரட்டைத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 32 பேர் பலியானதுடன் 92 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றி விட்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருந்த வேளை அவர்கள் மத்தியில் பிரவேசித்து தற்கொலைக் குண்டுதாரியொருவர் குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு உதவும் முகமாக அங்கு மக்கள் கூடிய வேளை, காரொன்றைச் செலுத்தி வந்த தற்கொலைக் குண்டுதாரியொருவர் இன்னொரு குண்டை வெடிக்க வைத்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாமே இந்தத் தாக்குதல்களை நடத்தியதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர். அன்றைய தினம் வட யேமனில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு உள்ளூர் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாத இறுதியில் ஹோதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி தலைமையிலான கூட்டமைப்பு நாடுகளின் படையினர் வான் தாக்குதல்களை ஆரம்பித்தது முதற்கொண்டு அந்நாட்டில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

## ஆசிய சுற்றுலா பயணிகள் சுகாதாரம் அற்றவர்கள்:

### ஊடகங்கள் தெரிவிப்பு

சுவிஸிற்கு வரும் சீனா உள்ளிட்ட ஆசிய சுற்றுலா பயணிகள் பொது இடங்களில் அநாகரிகமாக நடந்து கொள்வதால் அவர்களுக்கு மட்டும் சிறப்பு ரயில் சேவையை அறிமுகப்படுத்தியுள்ள சுவிஸ் அரசின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் உள்ள முக்கிய பொழுதுபோக்கு பகுதிகளுக்கு அதிகளவில் வரும் சீனா உள்ளிட்ட ஆசிய சுற்றுலா பயணிகள் பொது இடங்களில் கூட்டம் கூட்டமாக நின்று செல்.ஃபி படங்கள் எடுத்துக்கொள்வது, நடைப்பாதையில் எச்சில் உமிழ்வது, கழிப்பறைகளை சரியாக உபயோகம் செய்யாதது உள்ளிட்ட புகார்கள் சீன சுற்றுலா பயணிகள் மீது சுமத்தப்பட்டது.

தொடர்ந்து வந்த இந்த புகார்களை கருத்தில் கொண்டே, ஆசிய சுற்றுலா பயணிகளுக்கு மட்டும் சிறப்பு ரயில் சேவையை சுவிஸ் ரயில்வே நிறுவனம் சில தினங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியது.

இதையடுத்து ஆசியர்களை சுவிஸ் அரசு அவமதித்துள்ளதாக சீன மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இருப்பினும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக விசேடமாக இவ் ரயில் சேவை அறிமுகப்படுத்தியதாகவும் இச் செய்தியை சர்வதேச முக்கிய ஊடகங்களும் திரித்து வெளியிட்டுள்ளன எனவும் ரயில்வே நிறுவனத்தின் துணை இயக்குனரான மார்செல் வால்டிஸ்.

## என்னையும் புதையுங்கள் – தந்தையின் அலறல்



சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப்போர் காரணமாக, அங்கு வசிப்பவர்கள் அண்டை நாடான துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில், துருக்கி நாட்டின் கடற்கரையில் அகதிகள் வந்த படகு கவிழ்ந்ததில் 12 பேர் உயிரிழந்தனர். குறிப்பாக கடற்கரையில் இறந்து கிடந்த 3 வயது அய்லானின் உடலை கடல் அலைகள் தொட்டு செல்லும் புகைப்படம் உலகையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. உள்நாட்டு யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள், தங்களின் உயிர் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறும் சந்தர்ப்பத்தில் அவர்களின் உயிர் கடலில் காவு கொள்ளப்படுகின்ற அவலம் தொடர்கின்றது.

## ஆத்திரத்தில் தங்கையை கற்பழிக்க முயற்சி

மலேசிய நாட்டை சேர்ந்த 18 வயதான நபர் ஒருவர் சிங்கப்பூரில் நிரந்தர குடியேற்ற அனுமதி பெற்று தனது தாத்தா, பாட்டி ம்ற்றும் 10 வயதான தங்கையுடன் வசித்து வந்துள்ளான்.

அந்த நபரின் பேற்றோர்கள் அமெரிக்காவிற்கு மேல்படிப்பிற்காக செல்ல திட்டமிட்டுருந்த போது 'தன்னையும் அமெரிக்காவிற்கு அழைத்து செல்லுங்கள்' என பெற்றோர்களிடம் வற்புறுத்தியுள்ளான்.

ஆனால், அவரை அழைத்து செல்லாததால் பள்ளிக்கு சென்று திரும்பிய அவன் படுக்கையில் உடல் நலக்குறைவாக படுத்திருந்த தனது தங்கையை கற்பழிக்க முயன்றுள்ளான். பின் சில மணி நேரங்களுக்கு பிறகு வீட்டிற்கு வந்த அவன் 'நடந்தவைகளை யாரிடமும் கூறக்கூடாது' என மிரட்டிருக்கிறா்ன்.

விசாரணையின் பின் அந்த வாலிபர் சீர்த்திருத்தப்பள்ளி ஒன்றில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 25ம் திகதி இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வரவுள்ளது.



## 90,000 பேர் கலந்து கொண்ட தமிழ்த் திருவிழா

உலகிலே முதன் முறையாக ஆசியக் கண்டத்திற்கு வெளியே நடாத்தப்பட்ட தமிழ்த் திரு விழா கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் மிகவும் கோலாகலமாக நடைபெற்று முடிந்தது. கனடியத் தமிழர் பேரவையினால் நடாத்தப்பட்ட இந்த மிகப்பெரும் தமிழ்த் திரு விழாவில் 90 000 மக்கள் கலந்து சிறப்பித்து விழாவை ஒரு வரலாறு படைத்த விழாவாக்கினர்.

சனிக்கிழமை பிற்பகல் கனடாவின் புகழ் பூத்த பல நடன ஆசிரியர்கள் தயாரித்து நெறிப்படுத்திய தமிழர் மரபுக் கலைகளான பரதநாட்டியம், கும்மியாட்டம், கோலாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம் போன்றவைகளுடன் நாதசுரமும் தவிலும் முழங்க நிகழ்ச்சிகள் தொடங்கியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...

31



**– கவிஞர் வி.மைக்கல் கொலின்–**

**–வான வில்லின்
வர்ண ஜாலமாய்
அழகு காட்டியவள் – நீ
மழை தரும் மேகமாய்
குளிர் சுகம் தந்தள் – நீ
இன்று
கந்தகத்தின் கதகதப்பை
உணரச் சொல்கிறாய்
ரோஜா முள் படுக்கை மீது
என்னை உறங்கச் சொல்கிறாய்!–**

**– பிரபஞ்ச ப்ரியன் –**

பரீட்சை முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் செய்த ஆய்வு முயற்சி தொடர்பாக அவர்களை அழைத்து அது தொடர்பான கேள்விகள் கேட்பார்கள். இதனை "வைவா" என்று அழைப்பார்கள். தமது ஆய்வு தொடர்பாக தாம் சமர்ப்பித்த ஆய்வு புத்தகத்தில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவர்கள் பதிலளிக்க வேண்டும்.

ஜெயரதன் "ஈழத்தில் நவீன தமிழ் கவிதையின் வளர்ச்சி போக்கு...." தொடர்பாக தனது ஆய்வினை மேற்கொண்டிருந்தான். அவன் இயற்கையாகவே கவிஞனாக இருந்த படியால் அது தொடர்பாக அவனுக்கு ஆய்வு செய்வதற்கு இலகுவாக இருந்தது.

நிவேதா தனது ஆய்வு முயற்சியாக "ஈழத்தின் சிறு சஞ்சிகை முயற்சி" என்ற தலைப்பில் இலக்கிய சஞ்சிகை, வெளியீடுகள் தொடர்பாக தனது ஆய்வுகளை செய்திருந்தாள். அவளது ஆய்வு முயற்சிகளுக்கு ரதன் பல வழிகளில் உதவி புரிந்திருந்தான். அவனுக்கு தெரிந்த பல இலக்கிய நண்பர்கள் மற்றும் எழுத்தாளர்களை சந்தித்து அவர்களிடம் இருந்த பல இலக்கிய சஞ்சிகைகளின் சேமிப்புகளைப் பெற்று அவளது ஆய்வுக்கு உதவியிருந்தான்.



பரீட்சை முடிந்து வெளியே வந்த ரதன் நிவேதாவை தேடினான். நிவேதா பவித்ராவுடன், சுகந்தியுடனும் கதைத்த படி முன்னே போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

தனது சைக்கிளை சற்று அழுத்தமாக மிதித்து ரதன் அவர்களுக்கு அருகில் போக அவனைக் கண்டதும்..... பவித்ராதான் பேச்சை ஆரம்பித்தாள்.

"ரதன் எப்படி எக்ஸ்சாம்......"

"பரவாயில்லை. செய்திருக்கன்......."

"அவங்களுக்கென்ன..... இரண்டு பெரும் நல்லா செய்திருப்பாங்க... பாரன் வார வருஷம் கணவனும் மனைவியுமாக இருவரும் லெக்சரர்ஸா இங்கு வரத் தான் போறாங்க......"

சுகந்தி கிண்டலாக சொன்னாலும் அவள் அதனை உண்மையாகவே சொன்னாள்......

கடந்த இரண்டு வருட பரீட்சைகளிலும் ரதனுக்கும் நிவேதாவுக்கும் நல்ல பெறுபேறுகள் கிடைத்திருந்தன. இறுதி வருட பரீட்சையிலும் அவர்களுக்கு முதல் தர சித்திகள் இரண்டு கிடைக்குமாக இருந்தால் அவர்களுக்கு லெக்சரராகவோ, டியுட்டராகவோ வரக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறைய இருந்தன. இது அங்குள்ள மாணவர்களுக்கும் தெரியும். பல முறை ரதனுடன் நெருங்கிப் பழகும் விரிவுரையாளர்கள் எடுத்துச் சொல்லியிருந்தனர். "ரதன் உங்க ரெண்டு பேருக்கும் லெக்சரஸாக வரக் கூடிய வாய்ப்பு உண்டு காதல் கீதல் என்று கடுமையாக இறங்கி உங்கட வாழ்க்கையை வீணாக்கிப் போடா-தீங்க." என்று பல முறை சொல்லியுள்ளனர்.

ரதனும் நிவேதாவும் காதலித்துக் கொண்டாலும் தமது கல்வி முயற்சியில் மட்டும் கடும் போக்காகவே இருந்தனர். எத்தனையோ பேர் காதலிக்கத் தொடங்கியதும் தமது கல்வியில் கோட்டை விட்டு விட்டு சுற்றித் திரிந்து, வகுப்புகளுக்கு கட் அடிப்பதாக இல்லாமல் அவர்கள் தமது காதலை ஒரு நேர் கோட்டில் சீரமைத்துக் கொண்டிருந்தனர்.

"நிவேதா...... எப்படி எக்ஸ்சாம்.... செய்தனீரே..." ரதன் கேட்டான்.

"இல்ல ரதன் பெரிதாக செய்யவில்லை....... நேரம் காணாம ஒரு கேள்வியை முழுதாக செய்து முடிக்க கூட முடியல்ல.......".

"இவள் இப்படித்தான் போன வருஷ எக்சாமிலையும் சொன்னவள் ஆனா அந்த பாடத்தில் இவளுக்கு "ஏ" வந்தது தெரியும்தானே" பவித்ரா சொல்ல ரதன் சிரித்துக் கொண்டான்.

முன்னரைப் போல இல்லாமல் ரதனுடன் கதைப்பதில், பழகுவதில் நிவேதா சற்று விலகிப்போவது பவித்ராவுக்கும், சுகந்திக்கும் விளங்கியது. பல முறை அவளிடம் கேட்டும் இருந்தனர். ஆனால் நிவேதா அப்படி ஒன்றும் இல்லை என்று சமாளித்து வந்ததால் தொடர்ந்து அவளை தொந்தரவு செய்து அவளது அந்தரங்கத்தில் தலையிட விரும்பவில்லை. ஆனாலும் நண்பி என்ற உரிமையில் பல முறை அவளை கண்டித்திருந்தனர். அப்படியே கதைத்துக் கொண்டு ரதனும் அவர்களுடன் லேடிஸ் ஹொஸ்டலுக்குச் சென்றான்.

"ரதன் வாங்க டீ குடிச்சிட்டுப் போவம்...." எனக்கொரு கேள்வியில் டவுட் இருக்கு..... என்று சுகந்தியே அழைத்தாள். நால்வரும் ஹொஸ்டலுக்குச் சென்று கதைக்கத் தொடங்கவும் சுகந்தி தனது வினாப் பத்திரத்தைக் காட்டி குறிப்பிட்ட அக் கேள்விக்கு விடைகள் சரியானதுதானா என

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

ரதனிடம் கேட்கத் தொடங்கினாள். பவித்ரா "டீ போட்டு வாரன்" என்றபடி ரூமுக்குள் செல்ல.........

நிவேதா, "எனக்கு தலையிடியாக இருக்கு..... நான் போய் படுக்கப் போறன்" என்று கூறி உள்ளே சென்றாள்.

அவளது செய்கை ரதனுக்கு மட்டுமல்ல, பவித்ராவுக்கும், சுகந்திக்கும் கூட ஒருமாதிரியாக இருந்தது. அவள் வேண்டுமென்றே தலையிடி என்று சொல்லி விட்டுப் போவதாகப் பட்டது ரதனுக்கு..... இருப்பினும் அவன் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் மனசு என்னவோ செய்தது.

டீ போட்டு வந்த பவித்ராவும், சுகந்தியும் ரதனும் முன் ஹோலில் அமர்ந்து கதைக்கத் தொடங்கினர்.

சிறிது நேரம் அவர்களுடன் உரையாடிவிட்டு விடை பெற்றுக் கொண்ட ரதன் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு தனது ஹொஸ்டல் வாசலுக்கு வந்தவன் தான் பைன்- ஆர்ட்ஸ் எக்சாமுக்காகப் படிக்க வேணும் என லைபிரரியில் இருந்து எடுத்து வந்த புத்தகத்தை தவறுதலாக லேடிஸ் ஹொஸ்டலில் வைத்துவிட்டு வந்தது தெரிந்தது. மீண்டும் தனது சைக்கிளைத் திருப்பி லேடிஸ் ஹொஸ்டலுக்கு வந்தவன் உள்ளே நுழைந்த போது தான் அமர்ந்திருந்த இடத்தில் தான் தவறுதலாக வைத்துவிட்டு சென்ற புத்தகத்தை எடுத்து வாசித்துக் கொண்டிருந்த நிவேதாவைக் கண்டான்.

நான் வந்திருந்த போது 'தலையிடி' என தன்னுடன் கதைப்பதைத் தவிர்த்துக் கொண்ட அவள் தற்போது எதுவித சலனமும் இன்றி புத்தகம் வாசித்ததைப் பார்க்க ஆத்திர மாத்திரமாய் வந்தது.

"என்ன நிவேதா..... தலையிடி எல்லாம்.... சரியாயிட்டு போல...." அவனது குரலைக் கேட்டதும் நிவேதா திடுக்கிட்டவளைப் போல எழுந்து கொண்டாள்.

"இப்ப கொஞ்சம் பரவாயில்லை ரதன்" அவளது பேச்சு போலித்தனமாகப்பட்டது அவனுக்கு. உமக்கு உண்மையில் தலையிடிதானா...... அல்லது நான் தான் உமக்கு தலையிடியா..... ரதன் சற்று கோபத்துடனேயே கேட்டான்.

"இல்ல ரதன்..... எனக்கு தலையிடிதான்....." அவள் மேலே சொல்ல அவன் விட வில்லை "எனக்கு தெரியும் நிவேதா.... நீர் எதையோ நினைத்து எதையோ செய்து கொண்டிருக்கிறீர்..... அந்த புத்தகத்தை விட்டுப் போயிட்டன் தாறீரா....." அவளிடம் இருந்த புத்தகத்தை வாங்கிக் கொண்டு "நான் வாறன்......" என மொட்டையாகச் சொல்லிவிட்டு தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த நிவேதா தனது ரூமுக்குள் ஓடிச் சென்று கட்டிலில் விழுந்து விம்மத் தொடங்கினாள். அவள் அழுவதைக் கண்ட பவித்ரா வெளியே எட்டிப்பார்க்க ரதன் போவது தெரிந்தது. அங்கு ஏதோ நடந்திருக்கு என்பது அவளுக்குப் புரிந்தது, "ஏண்டி நிவேதா என்ன நடந்தது?" என விசாரிக்கச் சென்ற சுகந்தியைப் பார்த்து கண்ணைக் காட்டி விட்டு அவளையும் அழைத்துக் கொண்டு ரூமுக்கு வெளியே வந்தாள் பவித்ரா.

உள்ளே தனியாக விடப்பட்ட நிவேதா குலுங்கி குலுங்கி அழுதாள். ரதனின் மனசை வேதனை படுத்தியது அவளுக்கு என்னவோ செய்தது. தனது புறக்கணிப்புகள் மூலம் அவனை மனம் மாறச் செய்து தன் மீது வெறுப்புக்கொள்ள வைத்து அவனை எப்படியாவது விமலாவுடன் சேர்த்து விட வேண்டும் என்ற தனது எண்ணம் நிறைவேறாது விடுமோ என்ற அச்சம் அவளுக்குள் எழுந்தது.

இன்னும் சில நாட்கள் தான் அவர்களது பல்கலைகழக வாழ்க்கை அதன் பின்பு தத்தம் சொந்த ஊரை நோக்கிய பயணம்...... திசை மாறும் வாழ்க்கை முனைப்புகள்.

ரதனை உதாசீனப் படுத்தி, அவனுடன் கதைப்பதைத் தவிர்த்து, அவனை சிந்திக்க வைத்த பல சம்பவங்களை யோசிக்க யோசிக்க நிவேதாவால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

எவ்வளவு இனிமையாக சென்று கொண்டிருந்த அவர்கள் காதல் வாழ்கையில் தனக்கு நேர்ந்த அவலம் ஒரு புயலாக மாறிப் போனதையும் அதனைத் தொடர்ந்து விமலாவின் காதல் ஒரு பூகம்பமாக மாறி தன் மனதில் கொந்தளிப்பை ஏற்படுத்துவதையும் அவளால் உணர முடிந்தது.

தனது ஹொஸ்டலுக்கு வந்த ரதன் தனது பேனாவையும் புத்தகத்தையும் மேசையில் போட்டவன் ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்து எழுதத் தொடங்கினான்.

**செல்வி விமலா அவர்களுக்கு........**

**தாங்கள் எனது பைக்குள் வைத்த கடிதம் வாசிக்கக் கிடைத்தது. அதற்கு உங்களுக்கு உடனடியாக பதில் அனுப்பாததை வைத்தே நீங்கள் ஒரு அனுமானத்திற்கு வந்திருக்க முடியும்.**

**தாங்கள் என் மீது தங்களது காதலை வெளிப்படுத்தி எழுதியிருந்தீர்கள். ஆனால் உங்களுக்கு முன்னரே நான் வேறு ஒருத்தியை காதலிக்கத் தொடங்கி விட்டேன். அவள் வேறு யாருமில்லை. உங்களது தோழி நிவேதா தான். நாம் இருவரும் சந்தித்துக் கொண்டதில் இருந்து இருவரும் காதலிக்கத் தொடங்கி விட்டோம். இன்று அவள் இல்லாவிட்டால் நான் இல்லை. நான் இல்லா விட்டால் அவள் இல்லை என்ற ஒரு நிலைக்கு வந்து விட்டோம்.**

**எனவே, தாங்கள் தொடர்ந்தும் என் மீது நேசம் கொண்டு தங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ள வேண்டாம். என்றும் நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம்......**

**தங்கள் மனதில் என்னைப் பற்றிய நினைவுகள் எழும் வகையில் எனது செயற்பாடுகள் அமைந்திருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.**

நட்புடன் — ஜெயரதன்-

கடிதத்தை எழுதி முடித்ததும் அதனை உடனடியாக விமலாவின் முகவரிக்கு அனுப்பி விட்டு வந்து கட்டிலில் அமரவும் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அ.கௌரிதாசன்,
ஒரு கவிதை எழுதிவிட நூலிலிருந்து...

வீதியின் மருங் கினிலே
வீட்டோரம் கிளை பரப்பி
“நாவல் மரம் விழாக் கோல
நாயகன்” போல் நிற்கிறது!

“நாவற் பழக் காலமிது”
நண்பர்களோ வீடு வந்து
ஆவலுடன் தீரு மட்டும்
அருங்கனிகள் சுவைத்திருப்பார்!

வழிப்போக்கர் அனை வருமே
வாகன நிழலி ருந்து
களிப்புடனே கனி புசித்து
காலாறிச் சென்றிடுவார்!

பள்ளி விட்டு வருகையிலே
பந்தயத்து வீரர்கள் போல்
பிள்ளைகளும் ஓடி வந்து
பழம் பொறுக்கி மகிழ்வடைவர்

பகலினிலே “ காகம், புறா”
பாட்டிசைக்கும் “குயிற் கூட்டம்”
“அணில்” களுடன் “மைனாக்கள்”
அழகாகப் பழம் தின்னும்!

இரவினிலே “வௌவால்கள்”
இனசனத்தைக் கூட்டி வந்து
மரத்தினிலே பேய் ஆடி,
மறுநாளே மனைக் கேகும்!

“குலமணி” க்கோ முற்ற மதைக்
கூட்டுவதில் பெருஞ் சீரமம்
பல மணிகள் இரவு - பகல்
பாவமவள் பணிபு ரிவாள்!

“சித்தப்பா” மரத்தை வெட்டிச்
சிறியதொரு கடை கட்டும்
சித்தமுடன் இருப்ப தென்று
செய்தி யொன்று கசிகிறது!

நடப்பாண்டில் பழம் சொரியும்
நாவல் மரம் நாம் காண -
அடுத்தாண்டில் இருக்காதாம்
அதை நினைக்கப் பெரும் கவலை!

வீதியின் மருங் கினிலே
வீட்டோரம் கிளை பரப்பி
“நாவல் மரம் விழாக் கோல
நாயகன்” போல் நிற்கிறது!

“நாவற் பழக் காலமிது”
நண்பர்களோ வீடு வந்து
ஆவலுடன் தீரு மட்டும்
அருங்கனிகள் சுவைத்திருப்பார்!

வழிப்போக்கர் அனை வருமே
வாகன நிழலி ருந்து
களிப்புடனே கனி புசித்து
காலாறிச் சென்றிடுவார்!

பள்ளி விட்டு வருகையிலே
பந்தயத்து வீரர்கள் போல்
பிள்ளைகளும் ஓடி வந்து
பழம் பொறுக்கி மகிழ்வடைவர்

பகலினிலே “காகம், புறா”
பாட்டிசைக்கும் “குயிற் கூட்டம்”
“அணில்” களுடன் “மைனாக்கள்”
அழகாகப் பழம் தின்னும்!

இரவினிலே “வௌவால்கள்”
இனசனத்தைக் கூட்டி வந்து
மரத்தினிலே பேய் ஆடி,
மறுநாளே மனைக் கேகும்!

“குலமணி” க்கோ முற்ற மதைக்
கூட்டுவதில் பெருஞ் சிரமம்
பல மணிகள் இரவு - பகல்
பாவமவள் பணிபு ரிவாள்!

“சித்தப்பா” மரத்தை வெட்டிச்
சிறியதொரு கடை கட்டும்
சித்தமுடன் இருப்ப தென்று
செய்தி யொன்று கசிகிறது!

நடப்பாண்டில் பழம் சொரியும்
நாவல் மரம் நாம் காண -
அடுத்தாண்டில் இருக்காதாம்

## அன்பு

ஸ்ரீதா




## பாவை என் உள்ளம்!

காதலித்து கைபிடித்தவனை
கண்கள் கண்டு - பல
காலங்களும் செல்லகிறதே!

எங்கே சென்றானோ - ஏதும்
அறியா எனதுள்ளம்
அனலில் விழுந்த புழுவின்
நிலையறியானோ!

பாவை உள்ளம் - உனை
எண்ணி படும் - துயர்
அறியாயோ!



(ஸ்ரீகயல்)

## தோல்வி

ரகு

தோல்வி உன்னை
துரத்துகின்றது
என்றால்!
நீ வெற்றியை
நெருங்குகின்றாய்
என்று அர்த்தம்...!

## பிரிதல்

கண்ணுக்குள் ஏதோவொரு
வர்ண இறகொன்று
வானில் மிதந்தபடி
காற்றில் பயணித்தபடி ..



கால்களுக் கருகினில்
தொட்டும் தொடாமலும் ..

இறகினுள்ள நிறங்கள்
கைதேர்ந்த ஓவியனின்
அதிசயதக்க மூளையினால்

மனதில் படிந்த உணர்வானது
இறகினை விழுங்கி ஏப்பமிட்டு ..
அற்புதம் அதிசயம் ஆகா!

தடவுதலின் குதூகலிப்பில்
இறகினை பிரிந்த அந்த
பறவையினை அறியாத படி .

திருமலை சுந்தா

## அம்மா !

அழகுத் தமிழில் கோர்த்த
தெடுத்த முத்து அம்மா!
உயிர் எழுத்தில் ‘அ’
மெய் எழுத்தில் ‘ம்’
உயிர் மெய் எழுத்தில் ‘மா’



## கெட்டானே!!

தாமரைத்தீவான், (ஈச்சந்தீவு)

நோயைத் தேடிக் கொண்டனே,
நூறிருக்க மாட்டனே?
பாயும் நோயும் நானுமே,
பட்டினத்தார் பாடல் போல்!

காந்தி ஐயா வீட்டிலே
கண்டிப்பாய் இருப்பனேல்
மாந்தனாகி நோயையும்
மாற்றி நூறு காண்பேன!

மரக்கறிகளுக்குச் சென்றனா,
மாற்றி ‘ஐந்தை’ வென்றனா?
குரங்குப் பாய்ச்சல் நெஞ்சிதன்
கொட்டமடக்கி வாழ்ந்தனா?

ஒன்று - மாந்தன் பிறப்பதை
உலக அமைதி மண்ணிலே
நன்று வாழ்ந்து முடித்தனா?
நலிய வைத்துக் கெட்டனே!

## இயேசு அல்ல இவர்கள்

ஜீவ் : பெஸ்ஸியா - சேனையூர் இந்திஜா

நேற்றுப் பெய்த
மழைக்கு
நிலம் மட்டும்
நனையவில்லை
வாழ்க்கைப் பயணத்தைத்
தொலைத்து
வானத்தைக் குடையென
எண்ணி வாழ்ந்தவர்
மேனிகள் நடு நடுங்கின
காய்ந்து போன பூமியெல்லாம்
வற்றாத நதியிடம்
ஆறதல் கேட்கும்
இங்கு
இறையெனும் இயற்கையே
கரைந்து போனால்
இவை எவரிடம்
ஆறதல் கேட்பது

குடிசைகள் மாளிகைகளாகலாம்
ஆனால்
வசந்தங்கள் கோடையாகலாமா?
மாளிகையில் வாழ்ந்தவர்கள்
வறியவர்களாகினரே
இயற்கைகூட இவர்களை
ஏதிலிகளாக்குவதா?

நிலத்தைச் சேறாக்கி
நித்திரையை விளிப்பாக்கி
குழந்தைகளைக் குளிராக்கி
பாலகர்கள்
பரிதவிக்கின்றனரே
இவர்களெல்லாம்
இரட்சிக்கப்படட்டும்
மரணித்தவர் உயிர்த்தெழுந்தபோது
பாவிகள் மன்னிக்கப்படவில்லையா?

இனிமேலும்
சிலுவை சுமக்க முடியாது
இவர்களெல்லாம் இயேசுவல்ல

## உண்மையை கண்டறிய துடிப்பு

கவிக்குயில், சேனையூரான்

வெளிநாட்டு விசாரனைக்கு
மறுப்பு இங்கு,
வெறும் கண்துடைப்பு விசாரனைக்கு
விதந்துரைப்பு,

உண்மையை கண்டறிய
துடிப்பு, பாதிப்புற்றோர்
உறவுகளைத் தேடி இங்கு
உருகிமனம் தவிப்பு:

ஐ.நா. விசாரணை இங்கு
அலக்கழிப்பு : அது
ஆறு மாத காலத்துக்கு
பின்னடிப்பு,

நீதி கேட்டு தமிழ் மக்கள்
கொதிப்பு. நல்லாட்சி
உதிப்பினிலும் ஏற்படுமா
பாதிப்பு ?

சலுகைகளை எதிர்பார்த்தோர்
பூரிப்பு, தமிழ் மக்கள்
சுயகௌரவ வாழ்க்கை வாழ
துடிதுடிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதா?

**தேர்தல்** நடந்த அதே கிழமை கொழும்பில் வத்தளையில் ஒரு நட்சத்திர விடுதியில் ஒரு பயிலரங்கு நடத்தப்பட்டது. தேசியத்தைப் புரிந்து கொள்ளல் என்ற தலைப்பின் கீழான இப்பயிலரங்கில் மூவினத்தைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினார்கள். இப்பயிலரங்கில் ஒரு நாள் ஒரு நாடகம் நிகழ்த்திக் காட்டப்பட்டது. அந்நாடகத்தின் பெயர் 'ஒரு நாடு இரு தேசம்'. அதில் இச்சிறு தீவில் உள்ள எல்லா அரசியல் போக்குளையும் பிரதிபலிக்கும் விதத்தில் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அரசியல் கட்சி பிரமுகர்களை ஒரு நாடு இரு தேசம் என்ற கருத்துத் தொடர்பாக பேச வைப்பதாக அந்த நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது. நாடகம் முடிந்தபின் வளவாளர்கள் அந்நாடகம் தொடர்பாக அபிப்பிராயங்களைத் தெரிவித்ததோடு அதைப்பற்றி கலந்துரையாடவும்பட்டது. இதன் போது ஒரு வளவாளர் அந்நாடகத்தில் வரும் பாத்திரங்களில் பொதுபலசேனாவைத் தவிர ஏனைய எல்லா அரசியல் தலைவர்களும் வேடிக்கை மனிதர்களாகச் சித்திரிக்கப்படுவதை சுட்டிக்காட்டினார். ஆனால் பொதுபலசேன மட்டும் சீரியசான விட்டுக்கொடுப்பற்ற மூர்க்கமான ஒரு தரப்பாக சித்திரிக்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இப்போதுள்ள கட்சித் தலைவர்களை ஹரிக்கேச்சர்களாக – கேலிச் சித்திரங்களாக உருவகித்த நெறியாளர் ஏன் பொதுபல சேனவை அவ்வாறு கேலிச்சித்திரமாக உருவாக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அதற்கு நாடகக் குழுவினர் பதிலளித்த போது தாங்கள் வேண்டுமென்றே அவ்வாறு பாத்திரங்களை உருவாக்கியதாக கூறினார்கள். பொதுபல சேன போன்ற சிங்கள பௌத்த கடும் போக்குவாதிகள் தமது கொள்கைகளில் விட்டுக் கொடுப்பின்றி உறுதியாகக் காணப்படும் பொழுது ஏனைய அரசியல் கட்சிகள் தமது செயற்பாடுகளைப் பொறுத்தவரை கோமாளிகளாகவே மாறிவிட்டதாகவும் அவர்களுடைய செயற்பாடுகளில் பெருமளவிற்கு கோமாளித்தனமும் அபத்தமும் காணப்படுவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இந்த உரையாடலின் முடிவில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கருத்துத் தெரிவித்தார். பொதுபல சேனாவை முஸ்லிம்களும் தமிழர்களும் அதிகம் சீரியசாகப் பார்ப்பது போல சிங்கள மக்கள் பார்க்கவில்லை என்று அவர் சொன்னார். சிங்கள மக்கள் ஞானசார தேரரை ஒரு வேடிக்கை மனிதராகவே பார்ப்பதால்தான் தேர்தலில் அவரையும் அவரோடு சேர்ந்து நின்ற பிக்குகளையும் தோற்கடித்திருக்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

நடந்து முடிந்த தேர்தலில் பொதுபலசேனாவிற்கு கிடைத்த தோல்வியை சிங்கள பௌத்த கடும் போக்குவாதத்திற்குக் கிடைத்த தோல்வியாக மேற்கு நாடுகள் பார்க்கின்றன. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஒரு பகுதி விமர்சகர்களும் அவ்வாறுதான் கூறுகிறார்கள். யுத்த வெற்றி நாயகரான சரத்பொன்சேகாவையும் இம்முறை சிங்கள வாக்காளர்கள் தோற்கடித்துவிட்டார்கள். இலங்கைத் தீவின் முதலாவது பீல்ட் மார்சல் அவரது சொந்த மக்களாலேயே தோற்கடிக்கப்பட்டு விட்டார். இரண்டாம் உலக மஹா யுத்தத்தின் போது வின்சன்ட் சேர்ச்சிலை ஒரு தலைவராக ஏற்றுக் கொண்ட பிரித்தானியர்கள் யுத்தம் முடிந்ததும் அவரை நிராகரித்ததைப் போலவா இது?. இப்படியாக தெற்கில் பொதுபல சேனா சரத்பொன்சேகா போன்றவர்கள் பெற்ற தோல்விகளை வைத்தும் வடக்கு கிழக்கில் மக்கள் முன்னணி பெற்ற தோல்வியை வைத்தும் இலங்கைத் தீவில் தீவிர போக்குடைய சக்திகள் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக மேற்கு நாடுகள் வியாக்கியானம் செய்கின்றன.

அண்மையில் இச்சிறிய தீவுக்கு வந்த போன நிஷா பிஸ்வால் அவ்வாறுதான் கருத்துத் தெரிவித்துள்ளார். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள மிதப்போக்குடைய விமர்சகரான ஜெயதேவ உயாங்கொடவும் அவ்வாறு தான் எழுதியுள்ளார். அதாவது நடந்து முடிந்த தேர்தலில் முழு இலங்கைத் தீவும் தீவீர நிலைப்பாடுள்ள கட்சிகளை நிராகரித்துவிட்டதாகவும் மிதநிலைப்பாடுள்ள கட்சிகளையே தெரிந்தெடுத்திருப்பதாகவும் இதன் மூலம் இன நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும் இப்பொழுது வியாக்கியானம் செய்யப்படுகின்றது. இது சரியா? மெய்யாகவே இச்சிறுதீவானது நல்லிணக்கத்தின் பாதையில் அடி எடுத்து வைத்துள்ளதா?

முதலில் தெற்கைப் பார்க்கலாம். அங்கு இனவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டதா? அல்லது இனவாத்தின் ஆகப்பிந்திய வடிவமாகக் காணப்பட்ட யுத்த வெற்றிவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டதா?

தேர்தல் முடிவுகளை எடுத்துப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி ராஜபக்ச அணியை மிகப் பெரிய வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கவில்லை என்பது தெரியவரும். சிங்கள கடும் போக்குவாதிகளின் இதயத்தில் இப்பொழுதும் ராஜபக்சக்களே வீற்றிருக்கிறார்கள். பொதுபலசேனாவானது யுத்த வெற்றிவாதத்தின் ஒரு குழந்தைதான். சிங்கள பௌத்த கடும் போக்குவாதத்தை முழுக்க முழுக்க தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ராஜபக்ச சகோதரர்கள் முயற்சித்தார்கள். ஆனால் தனக்கென்று ஒரு தத்துவ அடித்தளத்தைக் கொண்டிருந்த, ஒப்பீட்டளவில் சுயாதீனமான ஜாதிக ஹெல உறுமயவை ராஜபக்சாக்களால் முழுமை-யாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

எனவே அரசின் அனுசரணை பெற்ற பொதுபலசேனவை ஹெல உறுமயவுக்கு எதிராக ஊக்குவித்தார்கள். இந்நிலையில் வெற்றிவாதத்துக்கு வாக்களிக்க விரும்பிய சிங்கள வாக்காளர்கள் தாய்க்கு வாக்களித்தால் போதும் குழந்தைக்கு வாக்களிக்கத் தேவையில்லை என்று முடிவெடுத்திருக்கக் கூடும். மேலும் சரத்பொன்சேகாவா? ராஜபக்ச சகோதரர்களா? என்று தெரிவு செய்ய வேண்டி வரும்பொழுது மேற்கின் ஆதரவைப் பெற்ற பொது எதிரணியோடு அடையாளம் காணப்பட்ட சரத்பொன்சேகாவைவிடவும் ராஜபக்சக்களைத் தெரிவு செய்வதையே அவர்கள் விரும்பியிருந்திருக்கக் கூடும்.

அதே சமயம் தனக்கென்று ஒரு கோட்பாட்டு அடித்தளத்தைக் கொண்டிருக்கும் ஜாதிகஹெல உறுமயவானது பொதுபல சேனவைப் போல முற்றாக மண் கவ்வவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஜே.வி.பி.யும் எதிர்பார்த்த வெற்றியை பெறத் தவறினும் முற்றாகத் தோற்கடிக்கப்படவில்லை. எனவே தென்னிலங்கை நிலவரங்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் விக்ரர் ஐவன் கூறுவது போல அங்கு அரைவாசிக்கும் குறையாத வாக்காளர்கள் இனவாதத்துக்கே வாக்களித்திருக்கிறார்கள். அதாவது இனவாதம் இப்பொழுதும் பலமாகத்தான் இருக்கிறது. இந்நிலையில் ரணிலும் மைத்திரியும் சந்திரிகாவும் இனவாதத்துக்கு எதிராக நல்லிணக்கவாதத்தை முன்வைப்பார்களா? அல்லது மனித முகத்துடன் கூடிய 2015 ஆம் ஆண்டுக்குரிய ஒரு புதிய இனவாதத்தை அல்லது மாற்றத்தைப் பலப்படுத்தும் நோக்கிலான ஒரு புதிய இனவாதத்தைக் கண்டுபிடிப்பார்களா? இது தென்னிலங்கை நிலவரம்.

இனி தமிழ்ப்பகுதிகளைப் பார்க்கலாம். மக்கள் முன்னணியின் தோல்வியை வைத்து ஒரு நாடு இரு தேசம் கோட்பாடு தோற்டிக்கப்பட்டு விட்டதாக வியாக்கியானம் செய்யப்படுகிறது. இது சரியா? ஒரு கட்சியின் தோல்வி ஒரு கோட்பாட்டின் தோல்வியாகுமா? தவிர ஒரு நாடு இரு தேசம் கோட்பாடு என்பது மக்கள் முன்னணியோடு தோன்றிய ஒரு கோட்பாடா? மக்கள் முன்னணிக்கு முன்பு அது இருக்கவில்லையா?

தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது கஜேந்திரகுமாருக்கு முன்னரே இருந்த ஒன்று. அது பிரபாகரனுக்கு முன்னரும் இருந்தது. காவலூர் நவரத்தினதுக்கு முன்னரும் இருந்தது. அது ஈழத் தமிழர்களின் நூற்றாண்டு காலக்கனவு. மிதவாதிகளும் ஆயுதப் போராளிகளும் அதற்கு அவ்வவ்போது தலைமை தாங்கினார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் அக்கனவின் பிரகாரம் ஒரு நடைமுறை அரசையே கட்டி எழுப்பியது. கூட்டமைப்பில் முதன்மைக் கட்சியாகக்காணப்படும் தமிழரசுக் கட்சியின் பெயரில் அந்தக் கனவு தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் கட்சிப் பெயரை பெடரல் பாட்டி – சமஸ்டிக் கட்சி என்று மொழி பெயர்த்த அக்கட்சியானது தனது சொந்த வாக்காளர்களுக்கு தமிழரசுக் கட்சியாகவே தோற்றம் காட்டியது.

எனவே ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு புதிய கோட்பாடு அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. இன்னொரு விதமாகச் சொன்னால் சிங்கள பௌத்த இனவாதத்தின் விளைவாக பலப்படுத்தி புதுப்பிக்கப்பட்ட ஒரு பழைய கனவு அது. கடந்த நூற்றாண்டில் சிங்களத் தலைவர்களால் திட்டமிட்டு ஏமாற்றப்படும் போதெல்லாம் அக்கனவு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இனக் கலவரத்தின் போதும் தமிழ் மக்கள் வடக்குக்கிழக்கை நோக்கி அகதிகளாக ஓடி வந்த போது அக்கனவு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. தார்ஸி விற்றார்ச்சி, ஜி.எச்.பார்மர் போன்ற அறிஞர்கள் அதை ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு எழுதியிருக்கிறார்கள்.

எனவே ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது இலங்கைத்தீவின் நவீன அரசியலைப் பொறுத்தவரை சிங்கள பௌத்த இனவாதத்தின் விளைவாக பலமடைந்த ஒரு தோற்றப்பாடுதான். தெற்கில் அரைவாசிக்கும் குறையாத வாக்காளர்கள் இனவாதத்திற்கே வாக்களித்திருக்கும் ஒரு அரசியல் சூழல் தொடர்ந்தும் இருக்கும் வரை தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் ஒரு தேசமாகச் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள்.

அக்கொள்கையை முன்வைத்த ஒரு கட்சி பெற்ற தோல்வி என்பது அக் கொள்கைக்கு கிடைத்த தோல்வியா? அல்லது அக்கொள்கையின் உண்மையான வாரிசு அக்கட்சிதான் என்று தமிழ் மக்களை நம்பச் செய்வதில் அக்கட்சி பெற்ற தோல்வியா?

இப்பொழுது கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும் மக்களாணையை மாற்றத்தைப் பலப்படுத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவானது என்று வியாக்கியானம் செய்யும் தரப்புக்கள் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் உள்நாட்டுப் பொறிமுறைகளை ஆதரித்து செயற்படத் தொடங்கியுள்ளன. அண்மையில் கொழும்புக்கு வந்து போன முன்னாள் பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் தனக்குப் பின் வரப்போகும் நிஷா பிஸ்வால் கூறப்போகும் கருத்துக்களுக்கு ஆதரவான தளத்தை முன்கூட்டியே தயாரிக்கும் விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். நல்லிணக்கத்துக்கான ஏழு கோட்பாடுகள் பற்றி அவர் அண்மையில் பேசியிருக்கிறார். இதில் ஏழாவது கோட்பாடு உள்நாட்டு விசாணைப் பொறிமுறையின் நோக்கத்தை ஓரளவுக்கு வெளிக்காட்டுகிறது. ரொனி பிளேயர் கூறுகிறார் வெற்றிகரமான நல்லிணக்கத்துக்காக இறந்தகாலத்தை அழிக்கவோ மறைக்கவோ முடியாது என்று... ஆனால் அவ்வாறு இறந்த காலத்தைப் பரிசோதிப்பது என்பது உண்மையை வெளிக்கொண்டு வருவதாக இருக்க வேண்டும் பழிவாங்கும் உணர்வோடு தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் ஒன்றாக அமையக் கூடாது என்ற பொருள்பட.

உலகின் வெற்றி பெற்ற எந்தவொரு போர்க்குற்ற விசாரணையிலும் சரி, அல்லது நல்லிணக்க முயற்சிகளின் போதும் சரி, ஒரு பொதுப் போக்கை அவதானிக்க முடியும். அதன்படி முதலில் விசாணைகளின் போது உண்மையை அச்சமின்றி வெளிப்படையாகப் பேசத்தக்க ஒரு சூழல் உறுதி செய்யப்படும். அவ்வாறு உண்மை வெளிவருமிடத்து அந்த உண்மையின் அடிப்படையில் வளங்கப்படும் நீதியே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர பரிகாரமாக அமைகிறது. பலராலும் முன்னுதாரணமாகக் காட்டப்படும் தென்னாபிரிக்க நல்லிணக்க முயற்சிகளில் இவ்வாறு உண்மை பகிரங்கமாகப் பேசப்படும் ஒரு சூழல் உறுதி செய்யப்பட்டது. உண்மை பகிரங்கமாகப் பேசப்படும் ஒரு விசாரணைச் சூழல் எனப்படுவது எல்லா விதத்திலும் ஓர் அரசியல் சூழல்தான். இறந்தவர்களையும் காணாமல் போனவர்களையும் கணக்கெடுப்பது இறந்தவர்களை நினைவு கூர்வது போன்றவை அனைத்தும் அவ்வாறான ஓர் அரசியல் சூழலில்தான் சாத்தியப்படும். அப்படி ஓர் அரசியல் சூழலை ஏற்படுத்துவது என்பது முழுக்க முழுக்க ஓர் அரசியல் தீர்மானம்தான். புதிய அரசாங்கத்திடம் அப்படி ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்கத் தேவையான அரசியல் திடசித்தம் உண்டா? அப்படி ஓர் அரசியல் சூழல் உருவாக்கப்படுமிடத்து வெளிவரும் உண்மையின் பிரகாரம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படுமா? அந்நீதியானது குற்றவாளிகளைத் தண்டிப்பதாக அமைந்தால் அது நிச்சயமாக சிங்கள பௌத்த கடும்போக்கு-வாதிகளைச் சீண்டுவதிலேயே போய் முடியும். அது மாற்றத்ததைப் பலப்படுத்தும் நிகழ்ச்சி நிரலைக் குழப்பிவிடும். என்பதால் தான் மேற்கு நாடுகளும் இலங்கை அரசாங்கமும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன.

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை தமிழ் மக்கள் சந்தேகத்தோடேயே பார்க்கிறார்கள் என்பது மேற்கு நாடுகளுக்குத் தெரியும் என்பதனால்தான் அனைத்துலக நிபுணத்துவ உதவி என்ற புனித நீரைத் தெளித்து உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை பாவ நீக்கம் செய்ய முற்படுகிறார்கள். ஆனால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் எவ்வாறு அமையக் கூடும் என்பதற்கு ஓர் ஆகப்பிந்திய ஒரு உதாரணத்தைச் இங்கு சுட்டிக்காட்டலாம். காணாமல் போனவர்களுக்கான ஜனாதிபதியின் ஆணைக்குழுவானது அண்மையில் கிழக்கில் விசாரணைகளை மேற்கொண்டது. இது தொடர்பான காணொளிப் பதிவுகள் இணையத்தில் பகிரப்பட்டன. அப்பதிவுகளை உற்றுக் கவனிக்கும் எவரும் மிக எளிமையான ஓர் உண்மையைப் பிரயத்தனமின்றிக் கண்டுபிடிப்பர். அதாவது அந்த விசாரணைகளின் போது மொழிபெயர்ப்பாளராக இருப்பவர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பது. அவருடைய குரலில் ஒரு வித அதிகாரம் தொனிக்கிறது. சில சமயங்களிலில் வேண்டா வெறுப்பாகவும் அல்லது சலிப்போடும் இதை நான் கடமைக்கே செய்கிறேன் என்று மற்றவர்கள் உணரத்தக்க விதத்திலும் மொழி பெயர்ப்பாளரின் குரல் அமைந்திருக்கிறது. இத்தகைய ஓர் விசாரணைச் சூழலானது கண்ணீரோடு வந்து நிற்கும் சாட்சிகளுக்கு உற்சாகமூட்டுமா அல்லது இடைஞ்சலாக இருக்குமா?

இப்பொழுது மட்டுமல்ல இனிமேலும் அப்படித்தான் இருக்கக் கூடும். ஏனெனில் இலங்கையில் உண்மை வெளிப்படையாக பேசப்படும் ஒரு விசாரணைச் சூழல் உறுதி செய்யப்பட்டால் அதில் வெளிவரும் உண்மையானது இனவாதிகளுக்கு எதிராகவே இருக்கும். அந்த உண்மையின் மீது கட்டி எழுப்பப்டும் நீதியானது போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவே அமைய முடியும். அது மாற்றத்தைப் பலப்படுத்தும் நிகழ்ச்சி நிரலையே குழப்பிவிடும். அதாவது இலங்கைத் தீவின் போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்கும் ஒரு பொறிமுறையும் மாற்றத்தைப் பலப்படுத்தும் ஒரு பொறிமுறையும் சமாந்திரமாகப் பயணிக்க முடியாத ஓர் அரசியல் சூழலே தற்பொழுதும் நிலவுகிறது. இனவாதிகளைப் பலப்படுத்தக் கூடாது என்று சொல்லிச் சொல்லியே தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நீதியும் மறுக்கப்படும். அப்பொழுது தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திப்பார்களா? அல்லது வேறெப்படியும் சிந்திப்பார்களா?

**நிலாந்தன்**

- www.nilanthan.net -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 69

# மகிழ்ச்சியின் இரகசியங்கள்



(வி.என்.சந்திரகாந்தி)



எம் அனைவரினதும் இலட்சியமே மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் தான். அதற்காகவே நாம் தினமும் பல பிரயத்தனங்களில் ஈடுபடுகின்றோம். பணம் சம்பாதித்தல் என்பது எமது முதன்மை இலக்காக உள்ளது. பணத்தால் மகிழ்ச்சியை வாங்கிவிடலாம் என்றுதான் பெரும்பான்மையோர் நம்புகின்றனர். புதிய மனை, புதிய கார், வீட்டு தளபாடங்கள், பதவி உயர்வு, புகழ் அனைத்தையுமே பணம் கொடுத்து பெற்றுவிடலாம். ஆனால் அவை தற்காலிக மகிழ்ச்சிக்கே வழிவகுக்கும். உண்மையான நிரந்தர மகிழ்ச்சியானது எமது மனச்சுத்தியிலேயே உள்ளது. சுத்தமான மனத்திலேயே இறைவன் குடிகொண்டிருக்கின்றான். அந்த மனம் அன்பு, கருணை, இரக்கம், நீதி என்ற வழிகளில் சிந்திக்கின்றது. தன்னைப்பற்றி மட்டும் எண்ணாது மற்றவர்களை பற்றியும் எண்ணுபவன் மனத்தில் மகிழ்ச்சியானது நிரந்தரமாக குடியேறி விடுகின்றது.

இயன்றவரை நாம் எமது வாழ்க்கையை சமூகத்துடன் பின்னிப்பிணைத்துக் கொள்ளல் வேண்டும். எமது சிந்தனை செயல் இரண்டுமே சமூக தொடர்பு கொண்டதாக இருந்தால் அது எமக்கு மகிழ்ச்சியை மட்டுமல்ல உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தரும். குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நாம் கொண்டிருக்கும் உறவானது எப்படி அன்பையும் ஒத்தாசையும், சுயநம்பிக்கையையும் வழங்குமோ அப்படியே சமூகத்துடன் நாம் கொண்டிருக்கக்கூடிய உறவு பரந்த அளவில் எமக்கு பலத்தையும் மகிழ்ச்சியையும் உண்டு பண்ணும்.

இன்னும் கூறப்போனால் சமூகத்துக்கு சேவை செய்வதை நாம் எமது இலட்சியமாக வரித்துக்கொண்டால் அதன் பின் எம் வாழ்வில் மகிழ்ச்சிக்கு குறைவே இருக்காது. உலகில் பல தரப்பினர் வாழ்கின்றனர். உணவுக்காக, கல்விக்காக மட்டுமன்றி ஆரோக்கியத்துக்காகவும் அவர்கள் யாசிக்கும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கெல்லாம் முழு மனத்துடன் எம்மால் சேவையாற்ற முடிந்தால் அது எமது உறவுகளை வலுப்படுத்தும். சமுகத்துடனான ஐக்கியம் பலப்படும். பண உதவி மட்டுமல்ல நாம் எமது நேரத்தை, சக்தியை, ஆலோசனைகளைக்கூட அவர்களது மேம்பாட்டுக்காக வழங்கலாம். எவ்வளவுக்கெவ்வளவு நாம் மற்றவர்களுக்கு நன்மைகளைச் செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது சிந்தனை தெளிவும் மகழ்ச்சியும் பெறும் என்பதில் ஐயமே இல்லை! கவலையுடன் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறுவது கூட அரும் பணியாகும். அவர்களுக்கு எமது அனுபவங்களை கூறி ஆற்றுப்படுத்தவதும் சிரிக்க வைப்பதும் அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் எமக்கு மகிழ்ச்சியைத் தரும். சிறு பிள்ளைகளை ஒன்று சேர்த்து பலர் முன்னிலையில் விளையாட வைப்பது அனைவர்க்கும் பெரும் குதூகலத்தை உண்டு பண்ணும்.

எமது உடலுக்கும் உள்ளத்துக்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. உடலை ஆரோக்கியமாக இருக்கும்படி பேணுவதில் தான் எமது அனைத்து முயற்சிகளுக்குமான வெற்றி தங்கியுள்ளது. உடலாரோக்கியத்தை பேணுவதில் முக்கிய பங்கு வகிப்பது திட்டமிடப்பட்ட சத்தான உணவு முறையேயாகும். எமது உடலுக்கு தேவையான உயிர்ச் சத்துக்களையும், புரதச்சத்துக்களையும் வழங்கக்கூடிய பழவகைகள், தானியங்கள், மரக்கறிவகைகளை நாம் தவறாமல் உண்ணுவது அவசியம். எமது நாவுக்கு சுவைதரும் உணவுகள் எமக்கு மகிழ்ச்சியை தரும். அவற்றை தேடிச் சாப்பிடுவதில் எந்த தவறும் இல்லை. அதே போன்று சிறு பயிற்சிகளும் உடலுக்கு மிக மிக அத்தியாவசியமானவை. நீச்சலடித்தல், ஈருருளி சவாரி, நடைப்பயிற்சி ஆகியன உடலுக்கு சுறுசுறுப்பையும் மகிழ்ச்சியையும் உண்டு பண்ணுவதுடன் ஆரோக்கித்திற்கும் அத்திவாரமாக அமைந்து "மன அழுத்தம்" எம்மை அண்டவிடாது காப்பாற்றும். அதனால் எமது உடல் போன்றே உள்ளமும் எப்போதும் திடகாத்திரமாகவும் தெளிவாகவும் இருக்கும்.

தவிர, வீட்டிற்குள்ளேயோ அலுவலகத்திலோ எப்போதும் முடங்கி கிடத்தல் மனச்சோர்வையே உண்டு பண்ணும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வெளியுலகில் நடமாட வேண்டும். காலை மற்றும் மாலை நேரங்கள் மனதுக்கும் உடலுக்கும் பெரும் மகிழ்ச்சியை தருவனவாகும். காலையில் பறவைகளும் கால்நடைகளும் இரை தேடும் ஆவலில் உற்சாகமாக புறப்படுகின்றன. பகல் பூராகவும் உணவை சேகரித்த பின்னர் மாலையில் தமது இருப்பிடங்களுக்கு செல்கின்றன. பறவைகளின் இன்னிசை மனதை குதூகலத்தில் ஆழ்த்துகின்றது. சூரியன் கிழக்கில் உதிப்பதும், மேற்கில் மறைவதும் வானத்தில் வர்ண ஓவியங்களைத் தீட்டுகின்றது. மரம் செடிகள் சூரிய ஒளியில் பிரகாசிக்கின்றன. பலவகை பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன. பாடசாலை செல்லும் சிறுவர்களின் குதூகலமும் சிரிப்பொலியும் எம்மையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது!

அடுத்து, வாசித்தல் எமக்கு பெரும் மகிழ்ச்சியையும் பயனையும் தரவல்லது. மனித மனம் பல சந்தர்ப்பங்களில் தனிமையை விரும்புகின்றது. அப்போதெல்லாம் நல்ல நூல்களை வாசித்தல் பிரயோசனமாக அமையும். வாசிப்பதன் மூலம் நாம் அறியாத பல விடயங்களை அறிய சந்தர்ப்பம் ஏற்படும். எமது அறிவு வளரச்சியடையும். எமது ஆற்றல் விருத்தி அடையும். நண்பர்களுடன் நாம் கற்ற விடங்களை பகிர்ந்து கொள்வது பெரும் தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் எமக்கு உண்டாக்கும். கற்பதன் மூலம் நாமும் எமது பிரச்சனைகள் பலவற்றுக்கான தீர்வை அறிந்து கொள்வதற்கான வழி பிறக்கும். கற்றலின் மூலம் நாம் சங்கீதம், ஓவியம் வரைதல் போன்ற கலைகளை தெரிந்து கொள்ளலாம். முடிந்தால் மேடையேறி பாடி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தவும் முடியும்!

நிற்க, நாம் அனைவருமே தூங்கும் போது கனவுகள் காண்கின்றோம். அவை சில சமயம் மகிழ்ச்சியையும், சில சமயம் துயரத்தையும் தரும். அவை எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் நாம் நிஜத்திலேயே எமது எதிர்காலம் பற்றி கனவு காண முடியும். அதை நாம் கற்பனை என்றோ, ஆர்வம் என்றோ கூட கூறலாம். அவற்றில் எம்மால் சாதனைகளை ஏற்படுத்த முடியும். அந்த எதிர்காலம் பற்றிய சிந்தனையே எமக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரவல்லது. எமது குறிக்கோள் மிகவும் சவாலானதாக இருக்கலாம். ஆனால் எம்மால் அதை நிறைவேற்றக்கூடியதாக இருக்க வேண்டும். எமது சக்தியையும் புரிந்து கொண்டு இலக்கை நிர்ணயித்தால் தான் நல்லது. அது எமக்கான பாதையை நல்லுணர்வை திருப்பதியை அளிக்கும். எமது எதிர்கால திட்டங்களை மற்றவர்களுக்கு கூறுவதால் மகிழ்ச்சியே உண்டாகும். அவர்களும் அத் திட்டம் பற்றிய தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ள முன்வருவதுடன் ஒத்துழைப்பும் வழங்கி உற்சாகப்படுத்துவர்.

எல்லோருக்கும் அழுத்தம், இழப்பு, தவறு என்பன வாழ்க்கையில் நேர்வதுண்டு. எங்களுக்கு என்ன நடக்கும் என்பதை எம்மால் தீர்மானிக்க முடியாதிருக்கலாம். ஆனால் எந்த ஒரு பிரச்சனைக்கும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு எம்மால் தீர்வை கண்டு பிடிக்க முடியும். எமது மகிழ்ச்சியை அந்த வழியில்தான் எம்மால் நிலை நாட்ட முடியும். எமக்கு ஒரு இழப்பு நேர்ந்து விட்டதென்பதற்காக நாம் பிறரில் பழியை போடுவதாக எண்ணி எந்த தவறான சங்கல்பத்தையும் எடுக்க கூடாது. எனக்கு தெரிந்த ஒரு பெண்மணி!. தனது மகன் காணாமல் போய்விட்டான் என்பதற்காக அவன் திரும்பும் வரை "சோறு" உண்பதில்லை என சங்கல்பம் செய்து கொண்டாள். பல வருடங்கள் கழிந்தும் அவளது மகன் திரும்பவில்லை. அவளது சங்கல்பம் பற்றி பலரும் அறிந்திருந்ததால் அவளால் சங்கல்பத்தை கைவிடவும் முடியவில்லை. அவளோ நன்றாக மெலிந்து ஆரோக்கியம் கெட்ட நிலைக்கு வந்து விட்டாள். இறைவன் எமது கவலைகளை நாளாவட்டத்தில் மறக்கும்படியே எமது மனதை படைத்திருக்கின்றான். மகனில் அன்பாய் இருப்பதென்பது இயற்கையே. ஆனால் அர்த்தமற்ற சங்கல்பத்தால் தன்னை அந்த தாய் அழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?

உண்மையில் எம்மை ஒரு கவலை வாட்டுமாக இருந்தால் தீர்வும் கிட்டுவதாக இல்லையென்றால், எமக்கு விருப்பமான ஒரு செயலில் ஈடுபடுவதே நல்ல வழி. மற்றவர்களை உதவி கேட்கலாம். அயலவர் உதவியை நாடலாம். நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்கலாம்.

எப்போதுமே நாம் அறிந்ததையே செய்ய வேண்டும். அது எம்மை மகிழ்விக்கும். மற்றவர்களைப் போல் இருக்க எண்ணி கவலைப்படாதே. உனது தவறுகளை உணர்ந்து திருந்து. மேலானவற்றறை சிந்தி. உனது நேரத்தை மற்றவர்களுக்காக செலவு செய். நட்சத்திரங்களின் எண்ணிக்கையையும் இந்த பிரபஞ்சத்தின் அகண்ட தன்மையையும் சிந்தித்துப்பார். எமக்கு மேல் ஒரு சக்தி இருப்பதை நம்பு.

தினமும் சிறிது நேரம் தனிமையில் தியானம் செய். எந்த எண்ணத்தையும் மனதில் எடுக்காதே. எவரினதும் வழிகாட்டலும் அவசியமில்லை. தொடர் தியானம் உன்னை சரியான இடத்துக்கு இட்டுச்செல்லும். அங்கு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீ மூழ்குவாய்!

# அது ஓர் இரவு




கால் தானாகவே ப்ரேக் போட்டது. ஏனெனில் அவர் தெய்வத்தன்மை பொறுந்திய ஒருவராக காணப்பட்டமையே ஆகும்.

தொடர்ச்சி . . .

அப் பெரியவர் தம்பி! ஏன் இப்பாதையில் செல்கின்றாய்? திரும்பிச் சென்றுவிடு என ஓர் அதட்டலுடன் சொன்னார். ஐயா நானாக வரவில்லை. என்னை அறியாமல் வாகனம் அதி வேகத்தில் திரும்பி விட்டது என்றான் சஞ்சு. ஆகட்டும் நான் ஏறிக் கொள்ளலாமா? என கேட்டார் பெரியவர். அப்பாடி ஒரு வழி தப்பித்துக் கொண்டேன் என எண்ணிய அவன் மனதிற்குள் புத்தி பேச ஆரம்பித்தது. வேணாம்! இவர் யாரோ? தெரியாத ஒருவரை எவ்வாறு நான் அனுமதிப்பது என்றது. அதற்குள் பெரியவர் ஏறி அமர்ந்தார். அவர் ஏறியவுடன் வானகத்திற்குள் வேறு ஒருவரும் இருப்பது போல் உணர்ந்தான் சஞ்சு. ஏசி வாகனத்திற்குள்ளும் வியர்த்துக் கொட்டியது அவனுக்கு

பின் பக்கம் பார்க்கும் கண்ணாடியால் தேடினான். ஓர் சிலந்தியைக் கண்டான். எனது வாகனத்தினுள் சிலந்தி....!

வாகனம் புறப்படத் தயாரானது. வாகனத்தை திருப்ப முற்பட்ட வேளையில் கியர் தானாகவே மாறி வாகனம் அதி வேகத்தில் செல்லத் தொடங்கியது. பக்கத்தில் இருக்கும் பெரியவரின் பக்கம் திரும்பக் கூட பயமாக இருந்தது அவனுக்கு. கவசம் இருந்த சிடி யை உள்ளே தள்ளினான். அது வேலை செய்ய மறுத்தது.

முடிவெடுத்தான். தான் சந்தேகித்தது சரியே. இனி என் மதியால் தான் வெல்ல வேண்டும்.

சற்றுத் தொலைவில் ஒரு பெண் நிற்பதைப் போல் உணர்ந்தேன். ஒரு ஓரத்தில் நின்று கை அசைத்தால். இருபுறமும் அடர்ந்த காடு. இக்காட்டினிடையே பெண்ணா நிற்க முடியும். நிச்சயம் வேறு ஏதோ தான். பெரியவர் பேசினார். வாகனத்தை நிறுத்த வேண்டாம் என்றார்.

மனதினுள் மீண்டும் குழப்பம். இவர் நல்லவர் தானா????

வாகனம் அளருகில் செல்ல செல்ல அவள் அசைந்து நடு வீதிக்கு வந்தாள். நிறுத்தாதே அடித்துச் செல் என்றார் பெரியவர். சஞ்சுவும் அக்ஸலேட்டரை அழுத்தினேன். [illegible] மோதியது வாகனம். வாகனம் மேல் பக்கம் முழுவதும் இரத்த வெள்ளமாகியதை உணர்ந்தான் சஞ்சு. பெரியவர் கதைத்தார், பின்னே பார்க்காதே. நேரே சென்று கொண்டிரு.

சற்று நேரத்தில் இரத்தம் காணாமல் போனது. பின் கண்ணாடியில் பார்த்தேன். சிலந்தி வலை பின்னுவதில் கருத்தாய் இருந்தது. அது ஓர் சிறிய சிலந்தி தான் ஆனால் மிகவும் மொத்தமான வலையை பின்னிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட சஞ்சுக்கருகில் வந்துவிட்டது.

சஞ்சுவிற்கு மீண்டும் வியர்க்கத் தொடங்கியது. மடியில் கை வைத்திருந்த பெரியவரின் கைகள் அசிங்கமாக மாறி வருவதை கண்டான் சஞ்சு.

அப்பெண்ணிடமிருந்து இவர் என்னைக் காப்பாற்றி விட்டார். ஆனால் இவரிடமிருந்து என்னை.....

என் வீடு மிக அருகில் வந்து விட்டது. இதன் பிறகு உனக்கு எந்த ஆபத்தும் நேராது. என்னை என் வீட்டில் இறக்கி விடு என்றார். எனக்கு ஓர் யோசனை தோன்றியது. மயானம் ஆரம்பிக்க முன் எப்படியும் ஓர் கோவில் காணப்படும்......

பெரியவர் என் நினைவை சிதறடிக்க ஏதேதோ கதைத்தார். சரியாக கோவில் வாசல் வர பெரியவர் முழுமையாக மாறியிருந்தார், சிலந்தி வலை அவன் தலை முடியை முட்டும் அளவிற்கு நெருங்கி விட்டது. வாகனத்தை எதிர்பாராத விதத்தில் வெட்டினான். வாசல் கதவை உடைத்துக் கொண்டு கோவிலினுள் சென்ற வாகனம் பிறண்டு போனது மட்டுமே சஞ்சுவிற்குத் தெரியும். கண் விழித்து பார்த்த போது விடிந்திருந்தது. சிறு சிறு காயங்களுடன் தான் கோவில் வளவினுள் கிடப்பதை உணர்ந்தான்.

முற்றும் . . .


(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "தாக்க தாக்க"

### சஞ்சீவனின் இயக்கத்தில் விக்கிராந்த், அபிநயா நடிக்கும்



தன் பிறப்பு ஒரு போர்க்களமாக இருந்தால், தன் வாழ்வும் கடைசி வரை ஒரு போர்க்களமாக தான் இருக்கும் என்பதே இப்படத்தின் ஒன் லைன். பாலியல் தொழிலாளிக்கு மகனாக பிறக்கும் விக்ராந்த், தன் தந்தையின் கஷ்டத்தை சிறு வயதில் பார்த்து வளர்கிறார். பின் அந்த தொழில் செய்யும் அருள் தாஸ் ஒரு தகராறில் விக்ராந்த் கண்முன்னே தன் அம்மாவை கொலை செய்ய, அங்கிருந்து சென்னைக்கு ஓடி வருகிறார் விக்ராந்த். அங்கு தளபதி ஸ்டைலில் அரவிந்த்சிங் பாசமிகு நண்பனாகிறார் இவருக்கு. அரவிந்த் சிங், அபிநயாவை விரும்புகிறார். அதேபோல் விக்ராந்த் அபிநயா தோழியாக வரும் லீமாவை விரும்ப சந்தோஷமாக செல்லும் இவர்கள் வாழ்க்கையில், அதே ஏரியாவின் கவுன்சிலர் மூலம் பிரச்சனை வெடிக்கின்றது.

இந்த பிரச்சனையில் இருந்து இவர்கள் மீண்டார்களா? இல்லை யார் யாரை இழந்தார்கள்? என்பதை மிகவும் கனத்த காட்சிகளால் கூறியிருக்கிறார் இயக்குனர் சஞ்சீவ். விக்ராந்த் எப்படியாவது வெற்றி பெற்றாக வேண்டும் என்று போராடும் குணம் கொண்டவர், பாண்டியநாடு கொஞ்சம் தூக்கிவிட இந்த படத்தில் தன் கதாபாத்திரத்தை மிக நிறைவாக செய்திருக்கிறார்.

படம் முழுவதும் ஒரு இடத்தில் கூட சிரிக்காமல் (முதல் பாடலை தவிர) கதையுடன் ஒன்றி போகிறார். அதேபோல் அரவிந்த் சிங் என்னதான் நடித்திருந்தாலும், கொஞ்சம் அந்நியமாகவே தெரிகிறார். லீமாவிற்கு வெறுமெனெ வந்து போகும் கதாபாத்திரம் தான், ஆனால், அபிநயா தான் படத்தின் ரியல் ஹீரோயின். ஒரு பக்கம் கருப்பு உலகம், மறு பக்கம் நட்பு என இயக்குனர் இரண்டையும் ஒரே திரைக்கதையில் கொண்ட வர முயற்சி செய்து கொஞ்சம் தடுமாறியுள்ளார்.

ஜேக்ஸின் பின்னணி இசை நன்றாக உள்ளது, பாடல்கள் ஏதும் நினைவில் நிற்கவில்லை, ஒளிப்பதிவு சுஜித் படத்திற்கு என்ன கலர் தேவையோ அதை மிகவும் நேர்த்தியாக செய்துள்ளார். இரண்டாம் பாதியில் அதுவும் கடைசி அரை மணி நேரம் யாருக்கு என்ன ஆகும் என சுவாரசியமாக செல்கின்றது.

படத்தின் கதைக்களம் தடையற தாக்க போல் இருந்தாலும் அந்த படம் அளவிற்கு விறுவிறுப்பு இல்லாமல் போகின்றது.

மொத்தத்தில் தாக்க தாக்க ஒருவேளை பார்க்க பார்க்க பிடிக்கும் ரகம் போல.



## "தல"க்கு வந்த தலைவலி



அஜித் தற்போது சிவா இயக்கத்தில் நடித்து வருவது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் இப்படம் கிளைமேக்ஸ் ாட்சிகள் தவிர மற்ற அனைத்து காட்சிகளும் எடுக்கப்பட்டு ிட்டது. தற்போது தயாரிப்பாளர் சங்கம் ஒன்றிணைந்து ல் திரையரங்குகளுக்கு எதிராக, தங்கள் எதிர்ப்பை ட்ட அக்டோபர் மாதம் 23ம் தேதியிலிருந்து சில நாட்கள் எந்த படங்களையும் ரிலிஸ் செய்யப்போவதில்லை என்று கூறியுள்ளனர். அந்த வகையில் அஜித் படம் தீபாவளிக்கு வருவது சந்தேகமே.

ராஜாவின் இயக்கத்தில் வெளியான "தனி ஒருவன்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## முன்னணியில் ஜெ.ரவி



தமிழ் சினிமாவில் அதிக ரசிகர்கள் பலத்தை வைத்திருப்பவர்கள் விஜய்- அஜித். இந்நிலையில் ஜெயம் ரவி நடித்த தனி ஒருவன் படம் கடந்த வாரம் திரைக்கு வந்தது. இப்படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வருகின்றது. இப்படத்தின் மூலம் ஜெயம் ரவியின் மார்க்கெட் பல மடங்கு உயர்ந்துள்ளது.

இதை தொடர்ந்து மிருதன் என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் டைட்டில் இன்று வெளியிட்ட சில நிமிடங்களிலேயே இந்திய அளவில் முதல் இடத்தில் ட்ரண்டானது.

## ப்ரூஸ்லீ நாயகியாக நயன்

பிரசாந்த் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் ப்ஷரூஸ் லீ படத்தில் நயன்தாரா நாயகியாக நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆதிக் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நாயகனாக நடித்திருக்கும் படம் "த்ரிஷா இல்லனா நயன்தாரா".

இப்படம் வரும் செப்டம்பர் 17ம் தேதி ரிலீசாகிறது. இந்தப் படத்தைத் தொடர்ந்து, பிரசாந்த் இயக்கத்தில் "ப்'ரூஸ் லீ", "கெட்ட பயடா இந்த கார்த்தி" மற்றும் சாம் ஆண்டன் இயக்கவிருக்கும் புதிய படம் ஆகியவற்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

நயன்தாராவிற்கு கதை பிடித்து விட்டதாகவும், எனவே விரைவில் அவர் நாயகியாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் படுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## தூங்கா வனம்

கமல்ஹாசன் நடிப்பில் உருவாகிக் கொண்டிருக்கும் தூங்காவனம் திரைப்படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. இதில் அசத்தலான லுக்கில் கமல் காட்சியளிக்கிறார். விரைவிலேயே டிரைலர் வெளியாகும் என்று திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தனது இணை இயக்குநர் ராஜேஷ் இயக்கத்தில் கமல் நடிக்கும் படத்துக்கு "தூங்காவனம்" என தலைப்பிட்டப் பட்டுள்ளது. திரிஷா, பிரகாஷ்ராஜ், ஆஷா சரத் உள்ளிட்டோர் நடிக்கும் இப்படம் திரில்லர் வகை கதையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## அதிக ஆயுட்கால மின்கலங்கள்

அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சம்சுங் நிறுவனத்துடன் இணைந்து நீண்ட ஆயுட்காலம் மற்றும் அதிக வினைத்திறன் கொண்ட மின்கலங்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இம் மின்கலங்கள் மில்லியன் கணக்கான தடவைகள் மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்யக்கூடிய வகையிலும், தற்போதுள்ள மின்கலங்களை விட 30 சதவீதம் அதிக சக்தியினை வெளியிடக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்படவுள்ளது.

மேலும் இவற்றில் Lithium, Germanium, Phosphorus, மற்றும் Sulphur ஆகியவற்றினால் ஆன Superionic Lithium-Ion குறை கடத்திகள் பயன்படுத்தப்படவுள்ளன.

## பெயரே இல்லாத Folder

Desktop இல் நியூ folder create செய்வது அனைவருக்கும் தெரிந்ததே....

ஆனால் நீங்கள் create செய்யும் folder க்கு பெயர் ஏதும் கொடுக்காமல் உருவாக்க முடியுமா ??

ஒரு வேளை அப்படி உருவாக்கினால் அது பார்பதற்கு எப்படி இருக்கும்? ஒரு folder பெயரே இல்லாமல் காட்சி அளிக்கும்..... இதோ இப்படி தான் அதற்கான வழிமுறை. முதலில் desktop இல் நியூ folder ஒன்றை create செய்யுங்கள்

அந்த folder காண பெயர் உடனே உங்களிடம் கேட்கப்படும் அப்போது அந்த இடத்தில் உள்ள New Folder என்ற பெயரை அழித்து விட்டு இதை type செய்யுங்கள்.

Alt + 255 உடனே ஒரு Empty Folder உங்களுக்கு காட்சி அளிக்கும்......

OTHER

## 23 Megapixel கேமராவுடன் Sony Xperia Z5



Sony நிறுவனம் Sony Xperia Z5, Sony Xperia Z5 Compact, மற்றும் Sony Xperia Z5 Premium எனும் ஸ்மார்ட் போன்களை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி உள்ளது.

இம் மூன்று ஸ்மார்ட் போன்களும் 23 Megapixel தெளிவுத்திறனில் அமைந்த கேமராவை கொண்டுள்ளன. இவைகள் கண் இமைக்கும் நேரத்தை விடவும் வேகமாக செயற்படக்கூடிய Autofocus வசதியை கொண்டுள்ளன.

இவற்றுள் Sony Xperia Z5 Premium ஸ்மார்ட் போன் ஆனது 4K திரையை கொண்ட உலகின் முதலாவது ஸ்மார்ட் போன் என்பதும் குறிப்பிடத்தக்கது..!

## சூரிய சக்தியில் கார்



மின்னல் வேகத்தில் பயணிக்கக்கூடிய Immortus எனப்படும் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத இந்தக் கார் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழு செக்கன்களில் மணிக்கு 100 கிலோமீற்றர்கள் எனும் வேகத்தை அடையக்கூடிய இக் காரானது சூரிய சக்தி மூலம் சேமிக்கப்படும் மின் சக்தியில் 85 km/h எனும் வேகத்தில் 550 கிலோமீற்றர்கள் வரை பயணம் செய்யக் கூடியதாக காணப்படுகின்றது.

## ஐடி சரியா!! ஆர்டர் வரும்..!

flipkart.com

ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனங்களான ப்ளிப்கார்ட் மற்றும் ஸ்னாப்டீல், ஆர்டர் செய்யப்பட்ட பொருளை ஷிப்பிங் செய்வதற்கு முன்பு வாடிக்கையாளர்களின் ஐடி (ஐனு) சார்ந்த தகவல்களை சேமிக்க திட்டமிட்டு கொண்டிருக்கின்றன. எவ்ளோ பெரிய கேவலம் தெரியுமா? - ஆன்லைன் ஷாப்பிங்..! பொய்யான பெயர்களில் மற்றும் பொய்யான இமெயில்கள் மூலம் ஆர்டர் செய்யப்படும் பொருள்கள் நிறுவனங்களுக்கே திரும்பி பெறப்படும் செலவானது பல கோடிகளை நோக்கி சென்று கொண்டிருப்பதால் ப்ளிப்கார்ட் மற்றும் ஸ்னாப்டீல் இந்த முடிவை எடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது..! ப்ளிப்கார்ட் : ஒரே நாளில் பணம் ரிட்டன்..! ஆர்டர் செய்தவரின் பெயரும், விலாசமும் போன் நம்பர் மற்றும் கிரெடிட் கார்ட் தகவல்கள் மூலம் சரி பார்க்கப்பட இருக்கிறது என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக ப்ளிப்கார்ட் மற்றும் ஸ்னாப்டீல் ஆகிய இரு நிறுவனங்களும் சில கம்பெனிகளோடு இணைந்து வேலை செய்ய இருக்கிறதாம்.

## கூகுள் லோகோ – ஒரு ப்ளாஷ்பேக்..!

Google

யார் யாரோ எதை எதையோ "அப்டேட்" செய்கிறார்கள், நாங்கள் உலகின் மிகப் பெரிய தேடுபொறி நிறுவனம் நாங்கள் கொஞ்சம் "அப்டேட்" செய்ய கூடாதா என்று யோசித்து மிகவும் அருமையான புதிய லோகோவை அறிமுகம் செய்துள்ளது கூகுள் நிறுவனம்..!

எதையும் தவற விடாமல் நினைவுப்படுத்தும், முக்கிய தினங்களை மற்றும் மனிதர்களை சிறப்பிக்கும் கூகுள் டூடுலில் தற்போது பரபரப்பாக ஓடி கொண்டிருப்பது கூகுளின் புதிய லோகோ சார்ந்த டூடுல் தான். அதே நேரத்தில் கூகுள் இதுபோன்று, தன் "லோகோ"வை மாற்றுவது ஒன்றும் முதல் முறை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது..!

## GOOGLE TRANSLATE





அமெரிக்காவை சேர்ந்த கியூஸ்ட் விஷுவல் என்ற நிறுவனம் இணைய வசதி இல்லாமலேயே ஒரு மொழியில் உள்ள வாசகங்களை மற்றொரு மொழிக்கு மாற்றும் மென்பொருளை கண்டுப்பிடித்தது.

பலகையில் எழுதப்பட்டுள்ள வாசகத்தை புகைப்படம் எடுத்து விரும்பிய மொழியில் அர்த்தத்தை கண்டுபிடிக்கலாம். அம் மென்பொருள் வோர்ட் லென்ஸ் ஆகும்.

இந்நிலையில் வேர்ட் லென்ஸ் மென்பொருளை தங்களுடன் இணைத்துகொள்வதற்காக கூகுள் நிறுவனம் கடந்த 2014ம் ஆண்டு கியூஸ்ட் விஷுவல் நிறுவனத்தை வாங்கியது. பின்னர் தனது கூகுள் மொழிமாற்றி (Google Translate) மென்பொருளில் வோர்ட் லென்சை இணைத்துகொண்டு பல்வேறு மொழிகளை இலவசமாக மாற்றிகொள்ளும் வசதியை வாடிக்கை-யாளர்களுக்கு தந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகமே அலுவலகமாக மாற வேண்டுமா!!

அலுவலகம், வீடு தவிர பணியாற்று-வதற்குப் பொருத்தமான கச்சிதமான இடத்தைத் தேடிக்கொண்டிருப்பவ-ர்களுக்கு வழி காட்டும் செயலியாக 'கியூப் ∴ப்ரி' உருவாகியிருக்கிறது.



உலகம் முழுவதும் உள்ள நகரங்களில் எங்கெல்லாம் பொதுப் பணியிடங்கள் அல்லது பகிர்வுப் பணியிடங்கள் இருக்கின்றன என்பதை இந்தச் செயலி வரைபடம் மூலம் சுட்டிக்காட்டுகிறது.

அந்த இடங்களின் தன்மை, அங்குள்ள வை-பை வசதியின் ஆற்றல் உள்ளிட்ட விவரங்களையும் தருகிறது. மேலும், அங்கு பணிபுரியும் சக பணியாளர்கள் பற்றிய விவரங்களையும் அளித்து அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வழி செய்கிறது.

## HTML தமிழில்....

**கடந்த வார தொடர்ச்சி ....**

நாம் எளிய தமிழில் HTML கற்றுக்கொள்ள என்னும் தொடர் பதிவின் மூலம் இரண்டு பதிவுகளை கடந்து வந்திருக்கிறோம். கற்றுக்கொண்டிருக்கிறோம். இப்பதிவில் HTML ஆவணத்தில் டேக்(Tag) என்று ஆங்கிலத்தில் அழைக்ககூடிய குறி ஒட்டுகளையும், HTML ஆவணம் உருவாக்க என்ன தேவை என்பதைப் பற்றியும் பார்க்கப்போகிறோம்.

கவனிக்க:

tag: குறிஒட்டு.

அதாவது <> இவ்வாறு இரு குறீயீடுகளும் சேர்ந்ததை ஆங்கிலத்தில் டேக் என்றும், தமிழில் குறிஒட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

எந்த ஒரு விஷயமானாலும் அ முதல் ∴ வரை தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் முழுவதுமாக கற்றுத் தேற முடியும். அந்த வகையில் எளிய தமிழில் HTML கற்றுக்கொள்ள பாடமும்.

இதற்கு முன்னரே இரண்டு பதிவுகள்

1. எளிய தமிழில் HTML கற்க,
2. HTML அடிப்படை விளக்கம்

என்ற பதிவுகளைப் பார்த்திருக்கிறோம். பதிவைத் தவறவிட்டவர்கள் இப்பதிவுகளைப் பார்த்துவிட்டு தொடரலாம். படித்தவர்கள் தொடர்ந்து வாசியுங்கள்.


HTML என்பது என்ன? என்பதற்குரிய விளக்கம் முந்தையப் பதிவிலேயே சொல்லியிருக்கிறேன் என்றாலும் ஒரு சில விளக்கங்களை சுருக்கமாகத் தெரிந்துகொள்வோமே..!!

HTML என்பதன் விரிவாக்கம் Hyper Text Markup Language என்பதன் குறுக்கம்.

வலையுலவியின் மூலம் இணையப்பக்கத்தைப் பார்க்க HTML பயன்படுகிறது.

வலைப்பக்கத்தின் பொருளடக்கத்தை HTML ஆனது குறி ஒட்டுக்களின் (Tags) மூலம் விளக்குகிறது.

குறி ஒட்டுகள் <> என்னும் குறியீடு மூலம் வரையறுக்கப்படுகின்றன.




இந்தக் குறிஒட்டு (<>) தொடக்கக் குறி என அழைக்கப்படுகிறது. (ஆங்கிலத்தில் சொல்வதெனில் Starting tag, ending tag)

குறியீட்டுக்கிடையில் குறுக்கு சாய்வுக் கோடு / சேர்த்து முடிவுக் குறிஒட்டு </, வரையறுக்கப்படுகிறது.

ஒரு முழு HTML ஆவணம் என்னும் தொடக்கக் குறி ஒட்டுடன் தொடங்கி, என்னும் முடிவுக் குறி ஒட்டுடன் முடிவடைய வேண்டும். (அதாவது ஒபனிங் டேக் தொடங்கி என்ற End Tag கொண்டு முடியவேண்டும்.)

ஹெச்.டி.எம்.எல் ஆவணமானது .html அல்லது .htm என்னும் விரிவைக்கொண்டிருக்கும்.

**நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலை

குட்டிக் கதை

**– திருமலை. வீ. என். சந்திரகாந்தி –**

எனக்குள்ளாக தொடர்ந்து இருக்கின்ற மன உழைச்சல்தான் அது... ஏன்தான் வெளிநாடு போகிறவர்கள் தாங்கள் தாங்கள் செய்கின்ற தொழிலை வெளியே சொல்வதற்கு தயக்கம் காட்டுகிறார்களோ தெரியாது! நான் மட்டும் வெளிநாடு போய் தொழில் புரிய நேரிடும் காலத்தில் எனது தொழில் விடயத்தில் உண்மை கூற பின்நிற்க மாட்டேன்.

என்னுடைய நண்பன் கண்ணனும் இதே உறுதிப்பாட்டோடு பிரான்ஸ் நாடு சென்று ஆறுமாத காலங்கள் ஆகிவிட்டன. அவனும் எனது நிலைப்பாட்டிலேயே உறுதியுள்ளவனாக இருப்பவன்.

கண்ணனும் நானும் உயர்தர பிரிவில் கணித பிரிவில் கல்வி பயின்றதனால் ஏற்பட்ட நட்பை காட்டிலும் அவன் கல்வி முயற்சிகளுக்காக தலைநகர் சென்ற பின்னரும் தொடர்ந்து எமது நட்பின் அன்னியோன்யம் தான் எனது பெற்றோர்கள் கூட அவன் மேல் பாசத்தை சொரியும் அளவிற்கு நெருக்கத்தை வளர்த்துவிட்டது.

இதன் காரணமாகவே நான் எனது பெற்றோருக்கு நெருக்குதலை கொடுத்து எங்கள் வீட்டுக்கு புதிய தொலைபேசி இணைப்பினை பெறக்கூடியதாகவும் இருந்தது.

எனது தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு நான் அவனுக்கு எழுதிய கடிதம் இது வரையில் அவனுக்கு கிடைத்திருக்க கூடும்....

அவனது தொலைபேசி அழைப்பு எந்நேரமும் வரக்கூடும்... இருளின் நிசப்தத்தை கலைத்த வண்ணம் தொலைபேசி அலாரித்தது. ஆனால் அது கண்ணனின் அழைப்பு அல்ல.

அம்மா இரவு ஆகாரத்தை மேசைக்கு எடுத்துவிட்டு அப்பாவையும் என்னையும் சாப்பிடும் படி வற்புறுத்தினார்.

சாப்பாட்டு மேசையிலிருந்த.... எனக்கு அதி விருப்பமான உணவுவகைகளில் கூட எனது மனம் இலயிக்கவில்லை....

கையலம்பிவிட்டு சோர்வுடன் படுக்கையறைக்கு சென்றேன். அரைத்தூக்கத்தில் ஆழ்ந்த சமயம், வீட்டில் ஏதோ பரபரப்பு...

"தம்பி கண்ணாவின் தொலைபேசி அழைப்பு" அம்மா என்னை துயில் எழுப்பினாள்.

ஆர்வத்துடன் ஓடிச்சென்று 'ரிஸீவரைப்' பெற்றுக்கொண்டேன். கண்ணனேதான்!

"என்னடாப்பா, எங்கே இருந்து பேசுகிறாய்?" வினவினேன்.

"நான் பாரீஸ் நகரில்.... 'ஈ.'பிள் டவருக்கு' அண்மையில் பிரதான வீதியொன்றின் 'பேவ்மென்ரில்' நின்ற வண்ணம் 'ஹான்ட்' போனில் கதைக்கிறேன்."

எனக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை! அமெரிக்க விண்கலம் சந்திரனில் தரைதட்டிய போது, அதில் பயணித்த விண்வெளி வீரர்கள் 'த ஈகிள் ஹாஸ் லாண்டட்' என்ற செய்தியை பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பியபோது அங்கிருந்திருக்க கூடிய விஞ்ஞானிகள் எப்படி குதுகலித்திருப்பார்களோ அப்படியானதொரு மகிழ்ச்சி வெள்ளத்தில் நான் திக்கு முக்காடினேன்.

"என்னுடைய கடிதம் உனக்கு எப்போ கிடைத்தது? இப்போ உங்கே என்ன செய்கிறாய்?" சந்தோஷ மிகுதியில் உரத்தே பேசினேன்.

அந்த சத்தத்தில் அப்பா தூக்கம் கலைந்து எழும்பி... "யார்... எங்களுடைய கண்ணனா?" என்று அம்மாவை நெருங்கி கேட்டபடி, தொலைகாட்சி பெட்டியை இயக்கி 'மியூட்டில்' வைத்து இரசிக்க தொடங்கினார். நேரம் சாமம் 12.30 மணி.

"உன்னுடைய கடிதம் போனகிழமையே கிடைத்துவிட்டது. 'பே .'.போன் காட்' வாங்க கையில் காசு இல்லை. அதுதான் சுணக்கம். இப்ப சம்பளம் கிடைத்துவிட்டது.....

சம்பளம் என்றவுடன் 'என்ன வேலை'? என்றுதானே நீ கேட்க முற்படுகிறாய். விபரமாக சொல்கிறேன் கேள்.

அதற்கு முன் நீ ஒரு முக்கியமான விடயத்தை தெரிந்து வைத்திருக்க வேணும். உன்னுடன் தொலைபேசியில் கதைத்துக்கொண்டிருக்கின்ற நான், இடையிடையே பிரெஞ்சு மொழியில் வேறொருவருடன் உரையாடுவேன். அப்போ நீ 'லைனை' கட்' பண்ணாமல் பேசாமல் இருக்கவேண்டியதுதான். நான் எனது உரையாடலை முடித்த பின்னர் திரும்பவும் உன்னோடு கதைப்பேன்."

இப்போ நான் பேசினேன்....

"சரியடாப்பா... இப்போ ' லைன்' தானாவே கட் ஆவதற்கு முன்பதாக நீ என்ன செய்கிறாய், சந்தோஷமாக இருக்கின்றாயா... அதெல்லாவற்றையும் சொல்லன்!"

மீண்டும் கண்ணன் பேசினான்....

"நான் இங்கு பத்துமாடி 'ஹோட்டல்' ஒன்றில் வேலை செய்கின்றேன். இதன் முதலாளி பாகிஸ்தான் நாட்டைச் சேர்த்தவர். மாலை ஆறுமணிக்கு பிந்தாமல் வேலைக்கு வந்துவிடவேண்டும். ஒன்பது மணி வரை வேலை செய்ய வேண்டும். மூன்று மணிக்கு பின்னர் வீதியோரங்களில் நின்று அந்த ஹோட்டலின் பற்றிய விளம்பரமடங்கிய 'பப்ளிஷ் மென் காட்' ஐ வீதியால் வருவோர் போவோருடன் பிரஞ்சு மொழியில் உரையாடி அவர்களுக்கு கொடுக்க வேணும். இதில் பிரச்சனை என்னவென்றால் இது ஒரு தடை செய்யப்பட்ட நடவடிக்கை. இதனால் காவல்துறையினரும் 'சி.ஐ.டி' காரரும் எப்பவும் என்மேல் பாயலாம். அந்த விடயத்தில் நான் கவனயீனமாக இருந்து பிடிபட்டால் அதற்குப் பொறுப்பு நான்தான். முதலாளி பொறுப்பு வகிக்க மாட்டார்...

'பப்ளிஷ்மென்ட் காட்' விநியோகிக்கின்ற கடமையில் தான் நான் இங்கே ஈடுபட்டிருக்கின்றேன். நான் ஏன் இடையிடையே பிரெஞ்சு மொழியில் உரையாடுகிறேன். என்பது இப்போ உனக்கு விளங்கியிருக்கும்...

இப்போ இங்கு எட்டுமணி. நான் வீதிக்கு மறுபுறத்தில் இருக்கின்ற 'ஹோட்டலுக்குப் போய்க்கொண்டிருக்கின்றேன். மணித்தியாலயத்திற்கு மணித்தியாலம் முதலாளியை போய் சந்திக்க வேணும். ஹோட்டலில் கிறவுட் சேர்ந்திருந்தால் மீண்டும் தெரு வீதிக்கு பப்ளிஷ்மென்ட் காட் விநியோகிக்கப் போகத்தேவை யில்லை. ஆனால் உணவு பரிமாறுகின்ற வேலையை பாரம் எடுக்க வேண்டும்....

இப்போ முதலாளிக்கு அண்மையில் வந்துவிட்டேன். தொடர்பை துண்டித்துவிட்டு மீண்டும் எடுக்க முயற்சி செய்கின்றேன்."

தொடர்பு துண்டிக்கப்பட்டதும் அம்மாவும் அப்பாவும் கண்ணனின் சுகம் பற்றி கவலை கொண்டு விசாரித்தார்கள்.

"பணிவும் பயந்த சுபாவமும் உள்ள பிள்ளை எப்படி சமாளிக்கப்போகுதோ தெரியாது. பாவம்!" அம்மா கவலையை வெளிப்படுத்தினாள்.

மீண்டும் தொடர்பு ஏற்பட்டது.

'இங்கு இப்போ சரியான குளிர் காற்று வீசி அடிக்கின்றது. உனக்கும் கேட்கக்கூடியதாக இருக்கும்..." ஒரு கட்டட மறைவில் நின்று பேசுவதால் உனக்கு நான் கதைப்பதை கேட்கக்கூடியதாக இருக்குது."

நான் கேட்டேன்... 'என்ன மச்சான் ஒரு அம்புலன்ஸ்' சத்தம் மாதிரி ஏதோ கேட்கின்றது?"

அவன் கூறினான்...

'அது அம்புலன்ஸ்' இல்லை. காவல்துறையினரின் வாகனம் ஒன்று நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது..... அது பரவாயில்லை. உன்னை நான் எப்படியும் .'.பிரான்சுக்கு எடுப்பேன். நீ யோசிக்காதை!.

திடீரென்று தொடர்பு துண்டிக்கப்பட்டது. நிமிடங்கள் மணித்தியாலமாகின... எனது அன்பு நண்பனுக்கு என்ன நேர்ந்திருக்க கூடும்? அறிமுகம் இல்லாத அன்னிய தேசம்... வேவு பார்க்கும் உளவு பிரிவு... துரத்தும் நகர் காவல் படை.

எனது நண்பனின் உற்சாகமான குரல் என்னை விட்டு ஆயிரமாயிரம் 'கிலோமீற்றர்' தூரம் விலகிச்சென்றது. எனது இதயம் கனக்கின்றது. கண்கள் பனிக்கின்றன.

அம்மா பரிவுடன் கேட்கிறார்.... ' கண்ணன் என்ன வேலையாம் தம்பி பார்க்கிறான்.?"

ஒரு கணம் யோசிக்கின்றேன். எவரும் எப்படியும் விமர்சிக்கலாம். ஆனால் அனுபவித்துப் பார்க்கும்போதுதான் தாக்கங்களை புரிந்து கொள்ளமுடியும்.!

நானும் வெளிநாடு செல்ல நேரிடலாம்..... மனச்சாட்சியை குழிதோண்டி புதைத்துவிட்டு தயக்கத்துடன் கூறுகின்றேன்...

"பிரபல நிறுவனமொன்றில் 'டிப்பட்டி மனேஜர்'....!"

---

# இப்படியும் மனிதர்கள்

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எங்கோ கேட்ட குரல்? எங்கு என்று நினைவுக்கு வரவில்லை. தனது கணனி இயங்க மறுக்கிறது உடனே வர முடியுமா என்றார். மாலை வருவதாகச் சொல்லி விலாசம் வாங்கிய போதுதான் அவரை நினைவு வந்தது. வயதானவர், சுகயீனமானவர், தனிமையில் வசிப்பவர், புகைத்தலையே தனது தொழிலாகக் கொண்டவர், நான் இது வரை காணாத ஒழுங்கீனமான, அழுக்கான வீட்டின் உரிமையாளர் என்று தான் நினைத்திருந்தேன் அவரைப் பற்றி இன்று அவரைச் சந்திக்கும் வரை.

மாலை 7 மணியிருக்கும், இலையுதிர்கால இருட்டும், மழையும், காற்றும் தங்களின் சுயத்தை வெளியே காட்டிக் கொண்டிருந்தன. நிலக்கீழ் ரயில் நிலையத்தில் இருந்து அவர் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். தொலைபேசியில் அழைத்தவரின் வீட்டு ஜன்னலில் தட்டினேன். கதவினூடாக எட்டிப் பார்த்தபடியே என்ன வேண்டும்? என்றார் முகத்தை கடுமையாக வைத்தபடியே.

"கணனி திருத்த" என்று இழுத்தேன். கண்ணைச் சுருக்கி பலமாய் யோசித்தார். பின்பு "அவனில்லையே நீ" என்றார். இல்லை, நான் தான் அவன். நான் தான் முன்பும் உங்கள் கணணி திருத்தியவன் என்றேன். சந்தேகத்துடன் உள்ளே அனுமதித்தார். வீடு எப்பவும் போலவே கிடந்தது. அவரோ தொலைக்காட்சிப் பெட்டியில் (T)டங்கோ நடனத்தில் மூழ்கிப் போயிருந்தார்.

செருமினேன். அவர் கண்டு கொள்ளவில்லை. ம்.. ம் என்று கனைத்தேன். அதற்கும் எவ்வித கவனத்தையும் அவர் காட்டவில்லை.

திரையில் வெள்ளைத் துடையழகிகள் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தார்கள். திடீர் என இசையின் தாளம் மாறியது. இது ஐரோப்பிய நாடோடிகளின் இசையாக்கும் என்று சொன்னார். என்னை அழைத்த காரணத்தை சொல்ல முடியுமா என்று அவரின் வெள்ளைத் துடையழகிகள் மீதான கவனத்தை கெடுக்காமல் மெதுவாய்க் கேட்டேன். உன்னை நான் எப்போ அழைத்தேன்? என்றார். வடிவேலுவின் ஆஹா என் காதுக்குள் கேட்டது. நீங்கள் என்னை கணணி திருத்த அழைத்தீர்கள் என்றேன். சில நிமிடங்களின் பின் நான் கூறியதை நம்பாதவர் போல் "அப்படியா"? என்ற போது எனக்கு இன்றைய நாள் நல்லதில்லை என்று உள் மனது சொல்லிக் கொண்டிருந்தது.

சில நிமிடங்களின் பின் ஆம் ஆம் எனது கணனி வேலை செய்யவில்லை அது தான் அழைத்தேன் என்றும், இது தான் அந்தக் கணனி என்றும் ஒரு புதிய கணனியைக் காட்டினார். நான் கணணியைத் இயக்குவதற்காக அதைத் திறந்த போது என்னை இடைமறித்து தான் கணணியை என்னைப் போல் திறந்து பின்பு தானியங்கிக் கருவியால் இயக்கியதாகவும் கூறினார். தானியங்கியா? கணணிக்கா என்று கேட்டேன். மேசையில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியின் தானியங்கியை எடுத்துக் காட்டினார். எனக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. மனக்கண்ணில்"ஒரு மனிசனுக்கு எத்தின கண்டம்டா" என்று வடிவேலு கூறும் டயலாக் கேட்டது.

அய்யா! அது உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கி. கணணியினுடையதல்ல என்றேன். மிகவும் நிதானமாக அப்படியா என்றார். கணணியை எவ்வாறு இயக்குவது என்று மிகவும் நிதானமாக விளக்கிக் கூறினேன். படம் கீறி விளக்கங்கள் எழுதிக் கொடுத்தேன். சரி நீங்களே இனி கணணியை இயக்குங்கள் என்றதும் அவர் மீண்டும் தொலைக் காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியை எடுத்த போது என் பொறுமையை சிரமப்படுத்தி வரவழைக்க வேண்டியதாயிற்று.

அவருக்கு படங்கள் மூலம் விளக்கிய ஆவணத்தைக் காட்டினேன். அதை பார்த்த பின்பும் அவருக்கு புரியவில்லை. அவரோ அந்த தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியை விடுவதாயில்லை. நாளை மாலை தனது கணனியை எடுத்துப் போக வேண்டும் எதை எதை எடுத்துப் போவது என்றார். மின்சார இணைப்பு, கணனி கொண்டு சென்றால் காணும் என்றேன். மின்சார இணைப்பை இப்போதே கழட்டி வை என்று கட்டளையிட்டார். அப்படியே செய்தேன்.

சற்று நேரம் அமைதியாய் கடந்து போனது. பின்பு ஏன் மின்சார இணைப்பை கழட்டினாய்? நான் எப்படி கணனியை இயக்குவது என்றார் என்னைப் பார்த்து. எனது பொறுமை எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தாலும் அவரின் நிலமை புரிந்ததால் அமைதியாக நீங்கள் தான் கழட்டி வைக்கச் சொன்னதாகச் சொன்னேன். அதை அவர் நம்புவதாக இல்லை. நீ பொய் சொல்கிறாய் என்று சினந்தார்.

மீண்டும் மின்சார இணைப்பை பொருத்தி வைத்தேன். திருப்தி என்று தலையாட்டினார். அதன் பின் தனது கணனி இயங்கவில்லை அதை இயக்கித் தர முடியுமா என்று ஆரம்பத்தில் கூறிய பிரச்சனையையே மீண்டும் கூறினார். அய்யோ! என்று கத்த வேண்டும் போலிருந்தது எனக்கு. மெதுவாய் மீண்டும் அரம்பத்தில் இருந்து விளக்கிக் கூறினேன். அவரின் கண்கள் என்னை நோக்கியிருந்தாலும் மனது எங்கோ சஞ்சரித்திருந்தது. இடையிடையே என்னை இடைமறித்து ஐரோப்பிய நாடோடிகளின் இசை பற்றி ஏதேதோ கூறினார். இசையைப் பற்றி எதுவுமறியாத ஞானசூனியம் நான். எனக்கு அவர் கூறிய எதுவுமே புரியவில்லை. மரியாதைக்காக புரிந்தது என்று தலையாட்டிக் கொண்டிருந்தேன். நான் புறப்படுவதற்காக எனது உடைகளை அணிந்து கொண்டு தொப்பியை போட்டுக் கொண்டதன் பின்பும் அவர் என்னைக் கவனிப்பதாய் இல்லை.

அய்யா! நான் புறப்படுகிறேன் என்றேன். எங்கே போகிறாய் என்றார் தொலைக்காட்சிப் பெட்டியில் இருந்து கண்களை அகற்றாமலே. எனது வீட்டுக்குத் தான் என்றேன். சரி என்பது போல தலையாட்டினார். மீண்டும் தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியால் கணனியை இயக்க முயற்சிக்கத் தொடங்கினார்.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# - தமிழர்களுக்கு எதிரான தமிழ் அரசியல் தலைமை -

- வலம்புரி -

- www.tamilkingdom.org-

பாராளுமன்றத் தேர்தலின் போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக பிரசாரம் செய்யாததன் காரணமாக அவர் மீது கூட்டமைப்பு கடும் கோபம் கொண்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மறுப்புத் தெரிவித்தது தொடர்பில் லண்டன் பி.பி.சி தமிழ் சேவைக்கு செவ்வி வழங்கிய இரா.சம்பந்தர், தேர்தல் முடிந்த பின் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றித் தீர்மானிப்போம் என்று கூறியிருந்தார்.

ஆக, வடக்கின் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரை வீட்டுக்கு அனுப்புவதில் சிலர் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை அறிய முடிகிறது.இதேவேளை முதல்வரின் கதிரை மீது ஆசை கொண்டவர்களும் ஆலாய்ப் பறந்து திரிவதாகத் தக வல்கள் வெளிவருகின்றன. எதுவாயினும் வடக் கின் முதலமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்தக் கட்சி முற்பட்டாலும் அதற்கு எதிராக வட பகுதித் தமிழ் மக்கள் கிளந்தெழுவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

வட மாகாண சபைத் தேர்தலில் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் போட்டியிட்ட தனாலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளை அவரால் பெற முடிந்தது. எனவே எச் சந்தர்ப்பத்திலும் வட பகுதி மக்கள் நம்பி அளித்த வாக்குகளுக்கு வடக் கின் முதல்வர் நிச்சயம் மதிப்பளிப்பார் என்பதால்,எந்தக் கொம்பர்கள் வந்தாலும் அவர்களை எதிர் கொண்டு, மக்களிடம் இருக்கக்கூடிய தனது செல்வாக்கை முதல்வர் நிஷரூபிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் பேரவா.இது ஒரு புறம் இருக்க, இன்றைய சூழ்நிலை தமிழ் மக்களுக்கு மிகவும் பாதகமானது என்பது உணரப்படவேண்டும்.

வன்னிப் போரில் நடந்த இன அழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோருவதற்கு தமிழர் தரப்பில் எவருமில்லை. அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஸா பிஸ்வால் இலங்கைக்கு வருகை தந்து அரசுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் சந்திப்பு நடத்திய போது, சர்வதேச விசாரணை என்ற விடயம் முக்கியத்துவம் பெறாமல் இருந்ததை அவதானிக்க முடிகின் றது. இதில் இருந்து புதிய அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச விசாரணையை ஓரம் கட்டு வதற்கு உடன்பட்டுள்ளமை புலனாகிறது.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் தலைமை யிலான தேசிய அரசைத் தமிழ் மக்கள் வரவேற்பதன் பின்னணி, முன்னைய அரசில் தமிழ் மக்களுக்கு நடந்த கொடூரத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதாலாகும்.வன்னிப்போரில் தமிழர்களுக்கு நடந்த நிட்டூரத் திற்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி சர்வதேச விசாரணை ஆகும்.

எனவே சர்வதேச விசாரணையை நடத்தாமல் அதனைக் கிடப்பில் போடுவதற்கு யார் முயற்சித்தாலும் அவர்களை தமிழ் அன்னை ஒருபோதும் மன்னிக்கமாட்டாள். எதுவாயினும் சர்வதேச விசாரணை மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை என்பதன் மறுபக்கம் இலங்கைத் தமிழர்கள் அமெரிக்கா மீது கொண்ட நம்பிக்கையாகும். இழப்புகளைச் சந்தித்த ஓர் இனத்தின் நம்பிக்கையை, அந்த இனம் சார்ந்த அரசியல் தலைமை தூக்கி எறிந்தாலும் அமெரிக்கா நிச்சயம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கையாகும்.



# இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 - இந்தியா அமெரிக்கா ஆதரவு

**மஹிந்த ராஜபக்ச**வினால் நியமிக்கப்பட்ட காணாமல்போவோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு, எல்எல்ஆர்சி என்று அழைக்கப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகளையும் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க ஏற்பாடு-

இறுதிக்கட்ட போரில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை விசாரணை செய்ய சர்வதேச விசாரணை நடாத்தப்படும் என்றுதான் கடந்த ஐந்து ஆண்டுகளாக பேசப்பட்டு வந்தன. இந்த நிலையில் அது உள்ளக விசாரணையாக மாற்றப்பட்டுள்ளது. அமெரிக்காவும் அதனை உறுதி செய்துள்ளது. ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வந்து விட்டது என்பதையே இது எடுக்காட்டுகின்றது.

### மாற்றங்களை எற்படுத்தினார்களா?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடனான உறவிலும் மாற்றங்களை எற்படுத்தியிருந்தன. குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் உறவை பகைத்துக்கொண்டு சீனா மற்றும் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளுடன் மஹிந்த ராஜபக்ச உறவை பேணி வந்தார் என்றும் கூறலாம். ஆகவே இந்த நிலைமைதான் அப்போதைய இலங்கை அரசாங்கம் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணையை தீவிரப்படுத்தியது எனலாம்.

அவ்வாறு நோக்குமிடத்து மஹிந்த ராஜபக்ச தனது பதவிக் காலத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தினாரா? அல்லது ஏற்கனவே இருந்த நடைமுறைகளுக்கு மாறாக செயற்பட்டாரா என்ற கேள்வி எழுகின்றது. பொதுவாக இலங்கையில் வெளியுறவுக் கொள்கை என்பது பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப செயற்படுத்தப்பட்டு வருதையே காணமுடிந்தது. அவ்வாறு நோக்குமிடத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான புதிய அரசாங்கமும் தமது வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

### சொல்வதைக் கேட்கும் பண்பு

ஆனால் நிலைமை அதுவல்ல மஹிந்த ராஜபக்சவோ மைத்திபால சிறிசேனவோ வெளியுறவுக் கொள்கை-யில் மாற்றங்களை எற்படுத்தினார்கள் என்று கூற முடியாது. ஐரோப்பிய நாடுகள் இந்தியாவைப் போன்று எழுதப்பட்ட வெளியுறவுக் கொள்கை என ஒன்று இலங்கையில் இல்லை. வல்லரசு நாடுகளின் போக்குக்கு ஏற்ப தமது வெளியுறவுக் கொள்கைகளை வடிவமைத்துக் கொள்கின்ற பண்பு இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு உள்ளது. அப்படி பார்க்குமிடத்து மஹிந்த ராஜபக்ச சீன சார்புத் தன்மையை கொண்டிருந்ததால் அந்த நாட்டின் நலன்களுக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையை பின்பற்றினார்.

அதன் காரணமாக சீன அரசின் கொள்கைக்கு ஏற்ப அமெரிக்க எதிர்ப்புவாத நாடுகளுடன் உறவையும் அவர் பேணினார். இங்கு இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மாற்றியமைக்க-ப்பட்டது என்று கூற முடியாது. நாடாளுமன்றத்தில் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய அப்போதைய வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்கவில்லை. தேவைக்கு ஏற்ப செயற்படுத்தி வருவதாக கூறினார். அப்படியானால் சர்வதேச விசாரணைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கின்றது. ஆகவே அதனை மாற்றியமைக்க அமெரிக்க சார்புத் தன்மையை பின்பற்றுங்கள் என்று அப்போது எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தார்.

### ரணில் விக்கிரமசிங்கவின் அழுத்தம்

அதற்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை-யை வகுப்பதற்கு நாடாளுமன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றுவதில்லை. ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் வைத்திருக்கும் உறவில் அது தங்கியுள்ளது என்று கூறினார். மீண்டும் குறுக்கிட்ட ரணில் விக்கிரமசிங்க அப்படியானல் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி சர்வதேச விசாரணையை தடுக்கக்கூடிய புதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுப்போம் என்று யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார். ஆகவே இந்த விவாதத்தை நோக்கும் போது இலங்கைக்கு என்று எழுதப்பட்ட வெளியுறவுக் கொள்கை இல்லை என்பதை அறிய முடிகின்றது.

இலங்கை அரசாங்கத்தினுடைய இந்த பலவீனங்கள் இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அறிந்திருக்-கின்றன. பொதுவாகவே சிறிய அரசுகளை பெரிய நாடுகள் மிரட்டுகின்ற போக்கு ஒன்றும் உள்ளது. அந்த அடிப்படையில் நோக்கும் போது மஹிந்த ராஜபக்சவையும் அவரது அரசாங்கத்தையும் அமெரிக்கா இந்தியா போன்ற பெரிய நாடுகளினால் மிரட்டமுடியாத நிலை ஏற்பட்டிருந்ததை உணர முடிகின்றது.

### அமெரிக்க சார்புத் தன்மை

இந்த இடத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை அமெரிக்கா மிரட்டியது என்று சொல்வதைவிட இந்த அரசாங்கம் இயல்பாகவே அமெரிக்க இந்திய சார்புத் தன்மையை பின்பற்ற ஆரம்பித்துள்ளது என்று கூறலாம். அதன் காரணமாகவே சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்ற வேண்டும் என்ற ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் நோக்கங்களுக்கு ஏற்ப அமெரிக்கா செயற்படுகின்றது என்ற முடிவுக்கு வரலாம். ஆக இது இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் எற்பட்ட மாற்றம் அல்ல. இயலாமையின் நிமித்தம் பெரிய வல்லரசு நாடுகளுடன் சேர்ந்து போகின்ற இயல்பு என்றும் சொல்லாம்.

இந்த தமிழர் இன அழிப்பு விவகாரம் சர்வதேச மயப்பட்டு விடக்கூடாது என்ற எண்ணக்கரு ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரம் அல்ல ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜனாதிக ஹெல உறுமய போன்ற அனைத்து சிங்கள கட்சிகளிடம் அந்த எண்ணக்கரு உள்ளது. அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மையப்படுத்திய மஹிந்த ராஜபக்ச அணி தமிழர் இன அழிப்பு விவகாரத்தை சர்வதேச மயப்படுத்த விரும்பியது என்று கூற முடியாது. சீனா மற்றும் அமெரிக்க எதிர்ப்புவாத நாடுகளின் உதவியுடன் அதனை முடிந்தவரை தடுப்பதற்கு முயற்சி எடுத்திருந்தார்கள் என்று கூறலாம்.

### மஹிந்த அணியை சமாதானப்படுத்தல்

எவ்வாறாயினும் இந்த இரண்டு தரப்பும் அதாவது மஹிந்த அணியும் ரணில் விக்கிரமசிங்க அணியும் தமிழர் இன அழிப்பு விவகாரத்தை மூடிமறைக்கவே முற்படுகின்றன என்பது தற்போது வெளிச்சமாகியுள்ளது. ஆனால் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள்தான் வேறாக அமைகின்றன. தற்போது உள்ளக விசாரணை என்று கூறி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அப்போது மஹிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட காணாமல்போவோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு, எல்எல்ஆர்சி என்று அழைக்கப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகளையும் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க ஏற்பாடுகளை செய்வதாக அறிய முடிகின்றது.

ஆக உள்ளக விசாரணை இடம்பெறும்-போது தங்கள் அரசாங்கம் மீது மஹிந்த அணி இனவாதமாக குற்றம் சுமத்துவதை தவிர்ப்பதற்கு ஏற்ப ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான முயற்சியை கையாளுகின்றார் என்று கூறலாம். இந்த இடத்தில் உள்ளக விசாரணை என்றால் என்ன என்று அரசியல் விஞ்ஞான மாணவன் ஒருவன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த விரிவுரையாளர், கடந்த 30 ஆண்டுகளாக ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சி செய்த போது நடத்தப்பட்ட தமிழ் இன அழிப்பை மூடிமறைத்தல் என்று கூறினார். அத்துடன் 1987 இல் இந்திய இராணுவம் புரிந்த படுகொலைகள், இறுதிப் போருக்கு அமெரிக்காவும் இந்தியாவும் வழங்கிய உதவிகள் உள்ளிட்ட அனைத்து இரகசியங்களையும் பாதுகாத்தல் என்று கூறினாலும் பொருந்தும் என அந்த விரிவுரையாளர் பதிலளித்தார்.

அப்படியானால் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு உள்ளக விசாரணை என்றால் என்ன என்பது குறித்து ஒரு விரிவுரை நடத்துங்கள் என்று அந்த மாணவன் நகைச்சுவையாக சொன்னார்.

அ.நிக்ஸன்

- www.ibctamil.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழப்பங்களின் போது ஒரு முஃமின்



புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே! அவனது அருளும் சாந்தியும் அருளும் அவனது இறுதித்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழி நடந்தோர் அனைவர் மீதும் நிலையாக உண்டாகட்டுமாக!

குழப்பங்கள் பற்றி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அது பற்றி முன்கூட்டியே முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். அவை ஏற்படுகின்றபோது அதற்கான தீர்வையும் வழிகாட்டலையும் இஸ்லாமிய ஷரீஆ தெளிவாக்கியுள்ளது.

மனிதப் படுகொலைகள், இஸ்லாமியர்கள் மீதான விரோதிகளின் ஆதிக்கம், முஸ்லிம் சமூகம் அல்லோலகலப்படும் அமைதி அற்ற சூழ்நிலை, முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்கள் அழிக்கப்படுதல், (காட்டிக் கொடுப்பு, அதிகாரப் போட்டி) தஜ்ஜாலின் குழப்பம், மனிதர்கள் மத்தியில் காணப்படும் குழப்பங்கள், தீய ஆட்சியாளர்கள், போர்கள், வரட்சி, எண்ணற்ற மரணங்கள், கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதி, வட்டி, மது, பொய், விபச்சாரம் போன்ற அநாச்சாரங்கள் பெருகுதல், அறியாமை அதிகரித்தல், அறிவற்றோரை தலைவர்களாக எடுத்தல், குடும்பம் அண்டை அயலவர் சண்டை போன்ற இன்னோரென்ன முன்னறவிப்புக்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அவற்றில் காலத்திற்கு தேவையானது என நாம் கண்டதை இங்கு சுருக்கமாகப் பதிவு செய்கின்றோம்.

குழப்பங்களை எதிர்கொள்ளும் ஒரு மு.்.மின் அதைக் காணும்போது எனது கதை இத்தோடு முடிவடைந்து விட்டது என்று எண்ணும் அளவும், சமூகத்தை விட்டும் ஒதுங்கி துறவறத்தைக் கடைப்பிடிக்கும் அளவும் பிரச்சினைகளை சந்தித்தபோது அதற்கு தற்கொலை தீர்வல்ல என்பதை உணர வேண்டும்.

தனது சகோதரன் ஒருவனின் மண்ணறையில் புரண்டு கொண்டு இவனது மண்ணறையில் நான் இருக்கக் கூடாதா? என ஏங்கி தவிக்கும் காலத்தையும் முஸ்லிம் சமூகம் சந்திக்க இருக்கின்றது.

தொடரும் .. ..

– எம்.ஜே.எம். றிஷ்வான் –

# திருச்சபையின் வரலாறு

கடந்தவார தொடர்ச்சி .. ..



பிளினி. ஒழுக்கம் மிகவும் சீரழிந்து காணப்பட்ட ரோம ராஜ்யத்தில் இத்தகைய உயர்ந்த ஒழுக்க நடவடிக்கைகள் பிளினிக்கு பிரமிப் பேற் படுத் தியதில் வியப்பில்லை. இந்தக் கிறிஸ்தவர்களை என்ன செய்வது? என்று பிளினி டிராஜானுடன் கலந்தாலோசித்தார். இதுபற்றி டிராஜானுக்கு பிளினி எழுதிய கடிதத்தில் தமது நடவடிக்கைகளைப் பற்றி விபரித்திருந்தார். முதலில் தான் அவர்களைப் பார்த்து நீங்கள் கிறிஸ்தவர்களா? என்று கேட்பது வழக்கம் என்றும், அதற்கு அவர்கள் ஆம்! என்று பதிலளித்தால் இரண்டு மூன்று முறை மீண்டும் அதே கேள்வியை வற்புறுத்திக் கேட்பதோடு அவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டிவரும் என்றும் பயமுறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன் என்றும் பிளினி எழுதினார்.

இதற்குப் பதிலாக டிராஜான், பிளினியின் முறைகளை ஆதரித்து எழுதியதோடு, கிறிஸ்தவர்கள் மீது கொண்டுவரப்படும் அநாவசியமான குற்றச்சாட்டுகளைக் கண்டு கொள்ள வேண்டாம் என்றும் பதில் எழுதினார். அத்தோடு வேண்டுமென்றே கிறிஸ்தவர்களைத் தண்டிக்க முயற்சிக்க வேண்டாம் என்றும், அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டாலொழிய அவர்களைத் தண்டிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்து வேற்றுக் கடவுளரை ஆராதிக்க முன்வந்தால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எழுதினார்.

டிராஜான் பிளினிக்கு எழுதிய இந்தப் பதிலால் கிறிஸ்தவர்களுக்கு பெரும் நன்மையொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கிறிஸ்தவர்களை இது ஓரளவுக்கு உயர்த்தி அவர்கள்மேல் தேவையற்ற குற்றஞ்சாட்டும் வழக்கத்தைப் பெருமளவில் குறைத்தது.

இக்காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தை ஆதரித்து எழுதப்பட்ட ஆக்கங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் எதிர்த்தும், பழித்தும் அநேகர் பேசியும், குற்றஞ்சாட்டியும், எழுதியும் வந்ததால் கிறிஸ்தவம் என்றால் என்ன? என்று விளக்கி எழுதப்பட்ட நூல்கள் இக்காலத்தில் தோன்றின.

தொடரும் .. ..

www.bible.me

# புகைப்பிடிப்பிலிருந்து விடுபட புரதம்

சரியான அளவில் புரத உணவுகளை உள்ளெடுப்பதனால் ஆரோக்கியமாக வாழ முடியும் என இதுவரை காலமும் பல ஆய்வு முடிவுகள் மூலம் எடுத்துக்காட்டப்பட்டன.

ஆனால் புதிய ஆய்வு ஒன்றில் அதிகமான புரதச் சத்தினைக் கொண்ட உணவுகளை உட்கொள்வதன் மூலம் புகைப்பழக்கத்திலிருந்து வெளியேற முடிவதுடன், உடலுக்கு அவசியமான அமினோ அசிட்டும் அதிகளவில் கிடைக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள East Anglயை பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இந்த முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது.



அமினோ அமில அதிகரிப்பானது இருதய ஆரோக்கியத்தை மேம்படச் செய்வதாகவும், புகைப்பிடித்தல் பழக்கத்திலிருந்து விடுபடல் போன்ற செயன்முறைகளால் வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அதிக புரதச் சத்தினை உள்ளெடுப்பதனால் Lower Blood Pressure ஏற்படும் வாய்ப்புக்கள் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




*டாக்டர் : உங்க மாமியாரைக் காப்பாத்துறது கஷ்டம்*

மருமகள் : நீங்க ரொம்ப நல்ல டாக்டர்னு எல்லாரும் சொன்னது இப்பத்தான் புரியுது

*டாக்டர் : ? ? ? ? ?*

*காதலன் : அன்பே நாம் மோதிரம் மாற்றிக்கொள்வோமா ?*

காதலி : நான் போட்டிருப்பது தங்கம். நீ போட்டிருப்பது டுப்ளிக்கேட்
நீங்களும் தங்க மோதிரம் போட்டுவாங்க, மாத்திக்குவோம்.

*காதலன் : ? ? ? ? ?*



# பிரிவு – சேர்வு

பிரிவு இல்லை என்றால் காதலில் சுவாரசியம் இருக்காது. அதாவது, ஒருவரையொருவர் மனதார காதலிக்கும்போது, இடையில் சிறு பிரிவினையை சந்தித்தால் அந்த பிரிவானது அவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்துவதை விட, அதிகளவு இன்பத்தையே ஏற்படுத்தும்.

காதலர்கள் ஒன்றாக இருக்கும்போது ஒருவரையொருவர் அதிகம் புரிந்துகொள்வதை விட, பிரிந்து இருக்கும்போது பல மடங்கு அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஒன்றாக இருக்கும் போது, நாம் பல சமயங்களில் திட்டமிடுதலைப் பற்றி யோசிப்பதே இல்லை. ஆனால் தூரம் தள்ளி இருக்கும் போது, நம் வாழ்க்கையிலும், எதிர்காலம் பற்றிய பயம் நமக்கு திட்டமிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்தும். இத்தகைய பயம் நல்லதே ஆகும்.

தொடரும் .. ..

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : உறவினர் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் சுபவிஷயம் குறித்த பேச்சு நடக்கும். ஆரோக்கியம் மேம்படும்.



**ரிஷபம்** : சிந்தனையில் புதுமை பிறக்கும். புதிய முயற்சிகளில் துணிவுடன் ஈடுபடுவீர்கள். சகோதரர்களின் பாசம் கண்டு நெகிழ்வீர்கள்.



**மிதுனம்** : பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் வளரும்.



**கடகம்** :அவமதித்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. குடும்பச் செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். சொத்து பிரச்னைக்கு பேச்சின் மூலம் சுமுகத் தீர்வு கிடைக்கும்.



**சிம்மம்**: மனதில் துணிச்சல் பிறக்கும். கடந்த கால உழைப்புக்கான பலனை தற்போது அனுபவிப்பீர்கள். வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.



**கன்னி** :குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த நல்ல யோகம் கை கூடி வரும். புதியவர்களிடம் நெருக்கமாகப் பழக வேண்டாம். அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாக நேரிடும்.



**துலாம்** : எதிரி தொல்லை மறையும். புதிய முயற்சியிலால் வெற்றி கிட்டும். பூர்வீக சொத்தினால் வருமானம் அதிகரிக்கும். உறவினரிடையே செல்வாக்கு காணப்படும்.



**விருச்சிகம்** :சமூக மதிப்பு உயரும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். பொதுப்பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள்.



**தனுசு** :குடும்ப கருத்து வேறுபாடு நீங்கி ஒற்றுமை சிறக்கும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சாதுர்யமாகப் பேசி தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பங்குதாரர் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்** : எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம்.



**கும்பம்** : கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புதிய முயற்சி வெற்றி பெறும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாறுதல் உண்டாகும்.



**மீனம்** : நண்பர் உதவிகரமாக செயல்படுவர். திட்டமிட்டு செயல்பட்டு இலக்கை எளிதில் அடைவீர்கள். பூர்வீகச் சொத்தில் வருமானம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமையல் சமையல்

## பூண்டு சூப்

### தேவையான பொருட்கள்

பூண்டுப் பற்கள் - 6, அரிசி மாவு - 1 மே.க, வெங்காயம் - 1 சிறியது, இஞ்சி - ஒரு சிறு துண்டு, பச்சை மிளகாய் - 1, கொத்தமல்லி இலை – சிறிது, புதினா – சிறிது, எலுமிச்சை சாறு – 1-2 தே.க, எண்ணெய் - 1 தே.க, உப்பு, மிளகுத்தூள் - தேவைக்கேற்றவாறு

### செய்முறை

வெங்காயம், இஞ்சி, கொத்தமல்லி, புதினாவை பொடியாக நறுக்கி வைக்கவும். பின் பச்சை மிளகாயை நீளவாக்கில் இரண்டாகக் கீறிக் கொள்ளவும். ஒருகம்பியில் (வடை கம்பி அல்லது கூரான ஏதாவது கம்பி) பூண்டு பற்களை வரிசையாகக் குத்தி (தோல் நீக்கத் தேவையில்லை), அடுப்பு தீயில் காட்டி நன்றாக சுட்டெடுக்கவும். சற்று ஆறியவுடன், தோலை நீக்கி விட்டு தனியாக வைத்துக் கொள்ளவும்.

ஒரு சுத்தமான மெல்லிய துணியில் நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, கொத்தமல்லி, புதினா ஆகியவற்றை வைத்து, ஒரு சிறு மூட்டையாகக் கட்டிக் கொள்ளவும். பின்னர் ஒரு தாச்சியில் எண்ணெய் விட்டு அதில் வெங்காயத்தைப் போட்டு சற்று வதக்கவும். பின்னர் அதில் சுட்ட பூண்டு, 2 கப் தண்ணீர் சேர்த்து, கட்டி வைத்துள்ள துணி முடிச்சை அதன் நடுவில் வைத்து, மூடி போட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும். பின்னர், துணி மூட்டையை வெளியே எடுத்து, சூப்பிலேயே பிழிந்து விடவும். அரிசி மாவை சிறிது தண்ணீரில் கரைத்து சூப்பில் ஊற்றி மிதமான தீயில் கொதிக்க விடவும். தேவையான அளவிற்கு சூப் திக்கானதும், இறக்கி வைத்து, எலுமிச்சை சாற்றை சேர்க்கவும். கடைசியாக உப்பு, மிளகுத்தூள், சிறிது புதினா இலையை சூப்பின் மீது தூவி பருகவும்.


## தலைசுற்றுக்கு கறிவேப்பிலை தைலம்



பெரியோர் முதல் சிறியோர் வரை தலை வலியை உணராதவங்களே இருக்க முடியாது.. அத்தோடு தலைச்சுற்று வந்தால் சொல்லவே வேணாம்.. இதிலிருந்து விடுதலை பெற இயற்கையின் வரப்பிரசாதமான கறிவேப்பிலை நமக்கு பெரிதும் உதவுகின்றது. தலைச்சுற்றை அடியோடு விரட்டும் கறிவேப்பிலைத் தைலம் இதோ......

கறிவேப்பிலை - 200 கிராம், பச்சை கொத்தமல்லி - 50 கிராம், சீரகம் - 50 கிராம், நல்லெண்ணை - 600 கிராம், பசுப் பால் - 200 மில்லி லீற்றர்,

கறிவேப்பிலையை காம்புகள் நீக்கி நன்றாக அரைத்துக் கொள்ளவும். பச்சை கொத்தமல்லியையும் மையாக அரைத்துக் கொள்ளவும். சீரகத்தை சுத்தம் செய்து மண் சட்டியில் போட்டு 200 மில்லி லீற்றர் பாலை ஊற்றி ஆறு மணி நேரம் மூடி வைத்திருந்து சீரகத்தை எடுத்து நன்றாக அரைத்துக் கொள்ளவும். ஒரு மண்பானையில் நல்லெண்ணையை ஊற்றி அடுப்பில் வைத்து சிறிது சூடேரியப் பிறகு பச்சை கொத்தமல்லியைப் போடவும். ஐந்து நிமிடங்களின் பின் சீரகத்தையும் போட்டு தைலப்பதம் வந்ததும் இறக்கி ஆறவிடவும் ஆறியதும் மெல்லிய துணியில் வடிகட்டி கொள்ளவும். 4 நாட்களுக்கு ஒரு முறை நல்லெண்ணைக்கு பதிலாக கறிவேபிலை தைலத்தை தேய்த்து குளிக்கலாம் . அத்துடன் அன்றைய நாளில் குளிர்வகை உணவுகளை தவிர்க்க வேண்டும்.



## எப்போதும் பொலிவாக இருக்க...

அழகு குறிப்பு



பெண்கள் மட்டுமில்லாது ஆண்களுக்கும் ஏற்படும் பொதுவான கவலை முகம் கறுத்துவிட்டது என்பதுதான்.

வெயில், மாசு போன்றவற்றால் நமது முகம் கருமையடையக்கூடும். எனினும் ஒரு சில முறைகளை நாம் தொடர்ந்து செய்து வந்தால் நமது முகத்தை எப்போதும் பொலிவுடன் வைத்திருக்கலாம்.

மலைகளில் கிடைக்கும் தேனுடன் பால் கலந்து முகத்தில் பூச வேண்டும். பின்னர் சிறிது நேரம் கழித்து கழுவினால், முகம் பொலிவுடன் காணப்படும்.

இதேபோல் பச்சை உருளைக்கிழங்கின் சாறை முகத்தில் தடவிவந்தால் வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் கருமை நிறும் மறையும்.

மேலும் வாழைப்பழத்தை மசித்து பால், தேனுடன் சேர்த்து தினமும் முகத்தில் தடவி வந்தால் கண்டிப்பாக பொலிவு பெறும்.

நாட்டுமருந்து கடைகளில் முல்தானிமட்டி கிடைக்கும். அதனுடன் சந்தனம். பண்ணீர் , எலுமிச்சை சாறு மற்றும் முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றை கலந்து உபயோகித்துவந்தால், முகம் எப்போதும் பிரகாசமாக மின்னும்.

இதுபோல் முகத்தில் கரும்புள்ளி இருப்பவர்கள் வெள்ளரி, புதினா மற்றும் எலுமிச்சை ஆகியவற்றை சாறை சம அளவு கலந்து கரும்புள்ளிகளின் மீது தடவி வந்தால் கரும்புள்ளிகள் காணாமல் போய்விடும்.

உங்கள் சருமம் கடினமாக இருந்தால் கடலை மாவுடன் சிறிது மஞ்சள் தூள், பால் ஒரு தேக்கரண்டி மற்றும் எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து முகத்தில் தடவவும்.பின்னர் மிதமாக சூட்டில் உள்ள தண்ணீரை கொண்டு முகத்தை கழுவவேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து செய்துவந்தால், முகம் எப்போது மென்மையாகவே இருக்கும்..

## டிசைன்ஸ்



- உங்களுடைய சைஸில் எல்லா பிராண்டட் ஜீன்ஸ்-களிலும் இருக்காது. ஒவ்வொரு பிராண்டுக்கும் சைஸ் அளவு மாறுபடும். ஆதலால் ஜீன்ஸ் வாங்கும் போது... அணிந்து பார்த்து வாங்குவது நல்லது.
- ஜீன்ஸ் பின்பகுதியில் பாக்கெட் பெரிதாக இருந்தால் வாங்க வேண்டாம். இதனால் அந்த ஜீன்ஸ் அணிந்தவரின் பின்பகுதி பெரிதாக தெரியும். சின்ன பாக்கெட் இருந்தாலும் பரவாயில்லை... பாக்கெட் இல்லாத ஜீன்ஸ் மிகவும் நல்லது. அதே போல், கீழே தள்ளியும் பாக்கட் இருக்கக் கூடாது.
- ஜீன்ஸ் கடைசி பகுதி பாதங்களைத் தொட்டு இருக்கலாம். ஆனால் மிகவும் நீளமாக இருக்க கூடாது.



# சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## மருத்துவரை அழைத்தவன்

ஓர் ஊரிலே செல்வன் ஒருவன் இருந்தான். திடீரென்று அவன் மனைவி வயிற்று வலியால் துடித்தாள்.

தன் கணவனைப் பார்த்து, “ஐயோ! வலி தாங்க முடியவில்லையே. உயிர் போகிறது. உடனே சென்று மருத்துவரை அழைத்து வாருங்கள்” என்று அலறினாள்.

மருத்துவரை அழைத்து வரப் புறப்பட்டான் சிறிது தூரம் சென்றிருப்பான். மனைவியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சன்னல் அருகே நின்றிருந்த அவள், “இப்போது வலி பரவாயில்லை. நீங்கள் மருத்துவரை அழைத்து வர வேண்டாம்” என்று கத்தினாள்.

“சரி” என்ற அவன், நேராக மருத்துவரின் வீட்டிற்குச் சென்றான். அங்கே நிறைய நோயாளிகள் காத்திருந்தனர்.

தன்முறை வந்ததும் மருத்துவரைச் சந்தித்தான் அவன்.

“உன் உடம்புக்கு என்ன?” என்று கேட்டர் மருத்துவர்.

“என் உடம்புக்கு ஒன்றும் இல்லை. என் மனைவிக்குத் தான் வயிற்று வலி. உங்களை வீட்டிற்கு அழைத்து வரச் சொன்னாள். அதற்காக வந்தேன்” என்றான் அவன்.



“இங்கே இருக்கும் நோயாளிகளைப் பார்த்து விட்டு உன் வீட்டிற்கு வருகிறேன்” என்றார் மருத்துவர்.

அவனும் காத்திருந்தான். எல்லோரையும் பார்த்து முடித்ததும் மருத்துவர் அவன் வீட்டிற்கு புறப்பட தயாரானார்.

அவனைப்பார்த்து, “உன் வீடு எங்கே உள்ளது? செல்வோமா?” என்று கேட்டார்.

அதற்கு அவன், “உங்களை உடனே வீட்டிற்கு அழைத்து வருமாறு என் மனைவி சொன்னாள். அப்படியே அதை முதலில் உங்களிடம் சொன்னேன் . நான் வெளியே வந்ததும் அவள் தன் உடல்நிலை சரியாகி விட்டதாகச் சொன்னாள். இதை அறியாமல் நீங்கள் என் வீட்டிற்கு வந்து விட்டால் என்ன செய்வது? நீங்கள் வர வேண்டாம் என்று சொல்வதற்காகவே இவ்வளவு நேரம் காத்திருந்தேன். என் மனைவி சொன்னதை வரிசை முறை தவறாமல் உங்களிடம் சொல்லி விட்டேன்” என்றான்.

மருத்துவர் அவனது வெகுளித்தனம் கண்டு கவலை கொண்டவர், அவனைப் பார்த்து மீண்டும் உன் மனைவிக்கு வலி அதிகரித்திருக்கலாம் அவளருகே சென்று இரு என கூறி தன் வேலைக்குத் திரும்பினார்.

சிந்திக்க .. ..


வெற்றி பெற்றவுடன் தன்னை அடக்கிக் கொள்கின்றவன் இருமுறை வென்றவனாகின்றான்.

## எனது நாய்க் குட்டி

என்னிடம் ஓர் நாய்க்குட்டி உள்ளது. அதற்கு ஜானி என பெயர் வைத்துள்ளேன். நானும் அவனும் சேர்ந்தே விளையாடுவோம். கடற்கரைக்குச் செல்லும் போது அவனையும் என் கூடவே அழைத்துச் செல்வேன். ஒரு நாள் என் தம்பி எனது நாய்க்குட்டியை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துவிட்டான். நான் பாடசாலை முடிந்து வந்து ஜானியை தேடி தேடி அழுதேன். பின் அம்மா தண்ணீர் எடுக்கச் சென்று பார்த்த போது தான் அவன் அதற்குள் இருப்பது தெரிந்தது. உடன் மருத்துவரிடம் எடுத்து சென்று சிகிச்சை கொடுத்தோம். எனக்கு எனது ஜானியை மிகவும் பிடிக்கும்.

சீ. விதுர்ஷிஹா
தரம் – 3ஏ

செல்வன். எஸ். கவிளன்,
தரம் – 8, வாழைத்தோட்டம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. சூத்திரம் $T=a+(n-1)d$ யில் n ஐ எழுவாயாக்குக.
02. சுருக்குக : $4a+3b-2a$
03. சமனிலி $2x+1<6$ திருப்தியாக்கப்படுமாறு x எடுக்கத்தக்க நேர் நிறைவெண்கள் யாவை?
04. 1.25 மீற்றரை சென்றி மீற்றரில் தருக?
05. $A=\{a,e,i,o,u\}$ எனின் $n(A)$ யாது?
06. சுருக்குக. $0.1\times0.1$
07. 8 பேனைகளின் விலை ரூ. 72 எனின் ஒரு பேனையின் விலை யாது ?
08. உருவில் 10செ.மீ ஐ ஆரையாகக் கொண்ட ஒரு வட்டத்தின் ஓர் ஆரைச்சிறை காணப்படுகின்றது. OP = 8cm எனின், செவ்வகம் OPQR இன் பரப்பளவைக் காண்க.




09. 3, 6, 12, 24 என்னும் பெருக்கல் விருத்தியில் 28ம் உறுப்பை m/36 எனும் வடிவத்தில் எழுதிக் காட்டுக.
10. கமால் தனது இலாபத்தின் அரைப்பங்கை 14வீத எளிய வட்டி தரும் நிரந்தர வைப்பில் இருவார் எனின், 2 வருட முடிவில் அவருக்கு கிடைக்கும் வட்டி எவ்வளவு?

**பகுதி 02**

(01) முகுந்தன் தனது சம்பளத்தில் 1/3 ஐ உணவிற்கும், 1/6 ஐ போக்குவரத்திற்கும் செலவு செய்கிறார். மீதிப்பணத்தில் 1/5 ஐ புத்தகங்கள் வாங்க செலவு செய்கிறார்.

01. போக்குவரத்து, உணவு ஆகிய இரண்டிற்கும் முகுந்தன் தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்கிறார்?
02. புத்தகங்களை வாங்குவதற்கு முகுந்தன் தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்கிறார்?
03. இவ்வாறு அவர் தம்மிடம் உள்ள மீதிப் பணத்தில் 1/4 ஐ ஒரு வங்கி கணக்கில் வைப்பு செய்கிறார். அவ்வாறு வைப்பு செய்யும் பணம் ரூ. 3000 எனின்,

## பாடம் : வரலாறு

01. பின்வருவனவற்றுள் எவை துட்டகாமினி அரசனின் பத்து மகாபலாசாலிகள் பற்றிக் குறிப்பிடும் சாசனங்களைக் கொண்ட தலங்களாகும்?
    (1) கடலாதெனிய, மிகிந்தெலை
    (2) சிதுல்பவ்வ, சங்கபால விகாரை
    (3) தோணிகல, வெஸ்ஸகிரி
    (4) நிற்றிகல, கொடவாய

02. இந்தியாவிலே குடியிருப்புகளை ஏற்படுத்திய ஆரம்பகால ஆரியர்களின் நிர்வாக முறையிலுள்ள சிறப்பியல்புகள்.
    (1) அவர்கள் பல ஜனக்குழுக்களாக இருந்தமை
    (2) இயற்கையினை தெய்வீக மயப்படுத்தியமை
    (3) விவசாயத்துக்கு முதன்மை வழங்கியமை
    (4) இராணுவ அல்லது படைபலம் கொண்டு நிருவாகம் செய்தமை.

03. அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் இலங்கையின் சர்வதேச வாணிபத்தில் குறிப்பிடதக்க அம்சம்.
    (1) பரவலான பணப்புழக்கம்
    (2) அயல் நாடுகளோடு மட்டும் வாணிப நடவடிக்கைகளை ஏற்படுத்தல்
    (3) கீழைத்தேய, மேலைத்தேய வாணிபப் பொருள்களின் பரிமாற்றம்
    (4) இந்த நாட்டில் அராபிய வணிகர் வியாபாரம் செய்தமை

04. இறுதி இராப்போசனம் என்ற உலகப் பிரசித்தி பெற்ற ஓவியத்தை உருவாக்கியவர் யார்?
    (1) ரபியேல் (2) டான்றே (3) லியானாடோ டாவின்சி (4) பொற்றி செல்லி

05. சூரிய மையக் கொள்கையை முதன்முதலாக அறிமுகம் செய்தவராக கருதப்படும் விஞ்ஞானி யார்?
    (1) கலிலியோகலிலி (2) ஜொகான்னஸ் கெப்ளர்
    (3) ஐசாக் நியூட்டன் (4) நிக்கலேயஸ் கொப்பர்நிக்கஸ்

06. கோணநதியின் ஆற்றுமுகத்தில் அமைந்திருந்த பண்டைய துறைமுகம்
    (1) உருவெல (2) மகாதித்த (3) கொடவாயா (4) கோகண்ண

07. இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்
    1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்
    3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

## பாடம் : விஞ்ஞானம்

01. காற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் பூவில் காணத்தக்க ஒரு சிறப்பியல்பு.
    (1) அமுதச் சுரப்பி கலம் இருத்தல்
    (2) ஒட்டும் பெரிய மகரந்தங்கள் காணப்படுதல்
    (3) குறிநார்களுடன் கிளை கொண்டிருத்தல்.
    (4) பூக்கள் பூந்துணர்களாக இருத்தல்

02. சுகதேகியான ஒருவருடைய சிறுநீரில் பின்வரும் எக் கூறுகள் இருக்கும்?
    (1) யூரியா, குளுக்கோசு, கொழுப்பமிலங்கள், நீர்
    (2) யூரியா, யூரிக்கமிலம், நீர், உப்புகள்
    (3) யூரியா, குளுக்கோசு, நீர், உப்புகள்
    (4) யூரியா, காபனீரொட்சைட்டு, நீர், உப்புகள்

03. உட்சுவாசத்தின் போது.
    (1) பழுவுக்கிடைத் தசைகள் சுருங்கி பிரிமென்றகட்டுத் தசைகள் தளரும்
    (2) பழுவுக்கிடைத் தசைகள் சுருங்கி பிரிமென்றகட்டுத் தசைகள் சுருங்கும்
    (3) பழுவுக்கிடைத் தசைகள் தளர்ந்து பிரிமென்றகட்டுத் தசைகள் சுருங்கும்
    (4) பழுவுக்கிடைத் தசைகள் தளர்ந்து பிரிமென்றகட்டுத் தசைகள் தளரும்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் இலக்கணத் தொடர்

**இரட்டைக்கிளவி**

மேலும் சில இரட்டைக் கிளவிகள்.......

ஒரு சொல் இரட்டித்து வருவது இரட்டைக்கிளவி இரட்டைக்கிளவி இசை பற்றியும்,பண்பு பற்றியும்,குறிப்புப் பற்றியும் வரும். கசகச, பரபர, முணுமுணு, கலகல, மடமட, கிணுகிணு, கடுகடு, கணகண, கிளுகிளு, குறுகுறு, வழவழ, பளபள, குடுகுடு, தளதள, கிடுகிடு, நெறுநெறு, தகதக, படபட, சலசல, கிசுகிசு, கலீர்கலீர், வளவள, மொழுமொழு, கணீர்கணீர், மினுமினு, கறகற.

**அடுக்குத்தொடர்**

எடுத்துக் கொண்ட பொருளை அழுத்தமாகச் சொல்வதற்கு அடுக்குத் தொடர் பயன்படுகிறது. ஒரு சொல்லே அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும்.

உ-ம் தந்தையார் சுளை சுளையாக பணத்தைச் செலவு செய்தார். வேலை அற்ற இளைஞர் தெருத்தெருவாக அலைகின்றனர்.

1. வீதி வீதியாக
2. பெரிய பெரிய
3. பக்கம் பக்கம்
4. விடிய விடிய
5. மெல்ல மெல்ல
6. வழி வழியாக
7. வாழையடி வாழையாக
8. நேர் நேராக
9. மேலே மேலே
10. ஐயோ ஐயோ
11. போ போ
12. ஊர் ஊர்
13. முகத்தை முகத்தை
14. காலைக் காலை
15. சின்னச் சின்ன
16. ஏறிஏறி
17. கெட்டேன் கெட்டேன்
18. சிரித்து சிரித்து
19. அள்ளி அள்ளி
20. பாளம் பாளம்
21. ஓடஓட
22. தேடித் தேடி
23. அழுது அழுது
24. பாடிப் பாடி
25. அணு அணு
26. மணி மணி
27. கரிய கரிய
28. குழறிக் குழறி
29. ஆடி ஆடி
30. பாம்பு பாம்பு
31. விடிய விடிய
32. திக்கித் திக்கி
33. கீழே கீழே
34. சுடச் சுட
35. விழுந்து விழுந்து
36. குமுறிக் குமுறிக்
37. உயர உயர
38. அழுதழுது



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

*Fill in the blanks with the correct forms of 'be' in the following passage. you may have to use a word more than once.* **the first one is done for you.**

I (1)........ a butterfly. can you guess who my friend is ? He (2).......... also a butterfly. We fly from flower to flower. They (3)........ our source of food. Although we (4)....... butterflies now, at an earlier stage we (5)....... caterpillar on the same plant. At that time, my friend (6)....... a little longer than I He (7)........ very proud of it. He once laughed at me and said, "Look at yourself. you (8)....... shorter than I" I (9)....... a bit hurt.
"No, I (10)........ not short", I argued.

Forms of 'be' :- am, is, are, was, were

04. தொல்பொருள் அமைவிடம் ஒன்றில் வெள்ளிக் கைப்பிடி பொருத்தப்பட்ட இரும்பினாலான ஒரு புராதன வாள் கண்டுபிடிக்கப்பட்டது. நுண் சிற்பங்கள் உள்ள வெள்ளிக் கைப்பிடி நன்றாக பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும் வாளின் எஞ்சிய பகுதி கடும் அரிப்புக்கு உட்பட்டிருந்தது. இந்த அவதானிப்பை மிகவும் நன்றாக விளக்கும் கூற்று யாது?
    (1) வாளை செய்வதற்குத் தரங்குறைந்த இரும்பு பயன் படுத்தப்பட்டுள்ளது.
    (2) வெள்ளிக் கைப்பிடி பிற்காலத்தில் வாளுடன் பொருத்தப்பட்டுள்ளது
    (3) இரும்பு கதோட்டாகச் செய்யப்பட்டுள்ளது.
    (4) இரும்பு அரப்பணிப்பு உலோகமாகச் செய்யப்பட்டுள்ளது.

05. தன்வெப்பக் கொள்ளளவி வேறுபட்ட திரவியங்களினால் ஆக்கப்பட்ட சம திணிவுகளைக் கொண்ட இரு பொருட்களுக்குச் சம அளவு வெப்பம் வழங்கப்படுகின்றது. அப்பொருள்கள் அடையும் இறுதி வெப்பநிலை பற்றிய பின்வரும் கூற்றுகளில் உண்மையானது.
    (1) கூடிய தன் வெப்பக் கொள்ளளவு உள்ள திரவியத்தினாலான பொருளின் வெப்பநிலை மிக உயர்ந்த பெறுமானத்தை எடுக்கும்.
    (2) குறைசந்த தன் வெப்பக் கொள்ளளவு உள்ள திரவியத்தினாலான பொருளின் வெப்பநிலை மிக உயர்ந்த பெறுமானத்தை எடுக்கும்
    (3) இரு பொருள்களினதும் இறுதி வெப்பநிலைகள் சமம்
    (4) பொருள்களின் கனவளவுகளை அறியாமல் ஒன்றும் கூறமுடியாது.

06. மின்னோட்டம் பாயும் கடத்தி மீது காந்தப் புலத்தின் மூலம் உண்டாக்கப்படும் விசை பற்றி பின்வரும் எக் கூற்று உண்மையானது.
    (1) காந்தப்புலத்தின் திசையில் கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்கு செங்குத்தாக விசை தாக்குகின்றது.
    (2) காந்தபுலத்தின் திசைக்கு எதிராகக் கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்கு செங்குத்தாக விசை தாக்குகிறது.
    (3) காந்தப்புலத்திற்குச் செங்குத்தாகக் கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்கு செங்குத்தாக விசை தாக்குகின்றது.
    (4) காந்தபுலத்திற்கு செங்குத்தாகக் கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது காந்த புலம், கடத்தி ஆகிய இரண்டுக்கும் செங்குத்தாக விசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயாதீனச் சர்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவால் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வெளிப்படுத்தப்படவுள்ள அறிக்கையில் போர்க்குற்றங்கள் நிகழ்ந்தமையானது நிரூபிக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் வேண்டப்படுமிடத்து அவ் விசாரணையினை மேற்கொள்ளும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டு உள்ளகப் பொறிமுறையின் ஊடாக நிகழ்த்தப்படும் சாத்தியம் அதிகமாகிக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கான முதற்கட்ட முயற்சியாகவே இக்கையெழுத்துப் போர் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட பல உள்ளகப் பொறிமுறை விசாரணைகள் எவ்விதமான பெறுபேற்றையும் தமிழ் மக்களுக்கு இன்றுவரை வழங்கவில்லை என்பதன் அடிப்படையில் உள்ளக விசாரணைப் பொறிமுறையினை ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக இல்லை என்பதை உலகறியச் செய்யும் நடவடிக்கையாகவே இக் கையெழுத்தப் போர் ஆரம்பிக்கப்பட்டள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழவின் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் இக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாகத் தெரிவித்த போது இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு மற்றும் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச நீதி விசாரணையினை கோருவதற்கான மக்கள் போராட்ட குழு ஒன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்க - மைப்பில் உருவாக்கப் பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் மீது இடம்பெற்ற இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச நீதி விசாரணையினை தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் உள்ளக விசாரண பொறி முறையினை உருவாக்குவதற்கான சமிக்ஞைகள் அண்மைக்காலமாக காண்பிக்கப் படுவதுடன், அண்மையில் இலங்கை வந்த அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வாலும், உள்ளக விசாரணைக்கான சமிக்ஞையினையே காண்பித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு உள்ளக விசாரணை ஊடாக தீர்வு கிடைக்கப்போவதில்லை, குற்றத்தை இழைத்தவர்களிடமே நீதியை வழங்கும் பொறுப்பை கொடுக்க முடியாது என்ற குரல் வடகிழக்கு தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் எழ ஆரம்பித்திருக்கின்றது.

இந்த நிலையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, சர்வதேச நீதி விசாரணையே நடத்தப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தவும், சர்வதேச நீதி விசாரணையினைக்கோரி வடகிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குமான மக்கள் போராட்ட இயக்கம் உருவாகியுள்ளது என தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து நடவடிக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மற்றும் ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கையெழுத்திட்டடிருந்தனர்.

## அரசியல....

செவ்வியிலேயே மேற்கண்ட விடயத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு மிகமுக்கிய சிங்கள அரசியல் கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ள நிலையில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை தயாரித்து அதன் மூலம் தமிழ் மக்களுக்கு பொருந்தத் தக்க தீர்வொன்றை முன் மொழியும் நிகழ்ச்சி நிரலும் அத் திருத்தத்தின் போது உள்வாங்கப்படும் என அவர் தெரிவித்-துள்ளார்.

அவ்வாறான தீர்வு நிகழ்ச்சி நிரலில் இலங்கையிலுள்ள ஒற்றையாட்சிமுறை நீக்கப்படும் என்றும் அதன் பின்னர் தமிழர்களுக்குச் சமஸ்டி முறையிலா அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய தீர்வொன்று மன்மொழியப்படும் என்றும் தமது கட்சி எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர் அவ்வாறு பரவலாக்கப்படும் அதிகாரங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாத வகையில் சட்டமியற்றப்படும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதாவது மத்திய அரசியனால் எச்சந்தர்ப்பத்திலும் பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறமுடியாதவாறு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படும் என்றும் அதற்கு காத்திரமானதும் உறுதியானதுமான பங்களிப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தங்கரூபனின்...

கையடக்கத் தொலைபேசிக் குறுந்தகவல் தன்னை சில இனந்தெரியாதவர்கள் சுற்றிவளைப்-பதாகத் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து காணாமல் போய்விட்ட அந்த இளைஞன் தொடர்பான தகவல்கள் எவையும் தற்போதுவரை வெளிவராதுள்ள நிலையில் அவர் வேறு நாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளைக் காவல்துறையினர் முன்னெடுத் துள்ளனர்.

இக் காணாமல் போனமையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மையில் கைது செய்யப்பட்ட ஒருவருடன் தங்கரூபன் மேற்கொண்டிருந்த தொடர்பாடல்களை அடிப்படையாகக் கொண்டே காவல்துறையினர் இவ்வாறானதொரு சந்தேகத்தை எழுப்பியுள்ளதாகத் தெரிகின்றது.

இவ்வாறு சந்தேகம் எழுந்ததை அடுத்து தங்கரூபனின் சகோதரரிடம் தங்கரூபன் அவுஸ்திரேலிய நாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் அதற்கு குறித்த சகோதரனும் உடந்தையாக இருந்ததாகவும் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிகின்றது.

தங்கரூபனின் கையடக்கத் தொலைபேசியில் இருந்து இறுதி நேரத்தில் அனுப்பப்பட்ட இரண்டு குறுஞ்செய்திகளில் குறித்த நபரொருவரின் பெயர் காணப்படுவ-தாகத் தெரிவித்துள்ள மக்கள் காவல்துறையினர் இவ்விசாரணை - களைத் திசைதிருப்ப முயல்வதாகச் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தங்கரூபன் வேறு நாட்டுக்குத் தப்பிச் செல்லும் எண்ணம் கொண்டிருக்க வில்லை என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

## மத்தியஸ்த....

உட்பட்ட அலுவலர்கள் அதிகாரிகளுக்கிடையே பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றது. அவற்றுக்கு தீர்வுகளையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாகாணசபை அதிகாரிகள் நடவடிக்கை மேற் கொள்ளும் போது பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வெகுவாக பாதிக்கின்றது.

மேலும் முரண்பாடுகள் தொடர்பாக தாபனக் கோவை விதிமுறையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முற்படும் போது பாரிய செலவுகளும் காலதாமதங்களும் ஏற்பட்டு நியாயமான தீர்வுகளை சில சமயம் எட்ட முடியாமலும் போகின்றது..

எனவே எமது நிறுவனத்தின் ஆய்வின் படி வினைத்திறன் உடைய பொதுச் சேவையை வழங்குவதற்கு கிழக்கு மாகாணத்தில் மத்தியஸ்த சபைக்கான நிதியச்சட்டத்தை உருவாக்குவதன் மூலம் அவற்றை மத்“தியஸ்த சபைகளிடம் ஒப்படைக்கும் போது பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் பொது மக்களுக்கு சீரான சேவையை வழங்கவும் முடியும் என்ற ஆலோசனையை முன் வைக்கின்றோம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்காக....

இணைந்துள்ளனர்.

கொக்கிளாயில் ஆரம்பமாகியுள்ள இப்பயிற்சியானது எதிர்வரும் 23ம் திகதி புன்னைக்குடாவில் நிறைவுறுத்தப் படவுள்ளது.

கடலிறக்கத்தாக்குதல்கள் மற்றும் வானிலிருந்து இறங்கி மேற்கொள்ளும் தாக்குதல்கள், போலியான எதிரிகளில் உறுதியான தடுப்பிடங்களைத் தாக்கியழித்தல் போன்ற பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா இராணுவம் 2009ம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான மக்கள் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட இலங்கயின் முப்படைகளினதும் அனுபவங்களை பன்னாநாட்டுப் படையணிகளுடன் பகிரவும் இப்பயிற்சி வாய்ப்பாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## கே.பிக்கு ....

குறிப்பிட்டுள்ளார்.

கே.பி, விடுதலைப் புலிகளுடன் பேணி வந்த தொடர்பு, நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் அழக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான ஓர் பின்னணியில் சட்ட மா அதிபரினால், கே.பிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1991 மே மாதம் 21ஆம் திகதி சென்னை, ஸ்ரீ பெரும்புதூரில் இடம்பெற்ற குறித்த தற்கொலை தாக்குதலில் ராஜிவ் காந்தி உட்பட 14 பேர் கொல்லப்பட்டமைக் குறிப்பிடத்தக்கது.

## பிராந்தியங்க...

“ மத்தியில் அதிகளவான அமைச்சர்களை வைத்திருப்பதை விட மக்களுக்குச் சிறந்த சேவையாற்றக்-கூடிய வகையில் மூன்று அல்லது ஐந்து பிராந்தியங்களை ஸ்ரீலங்காவில் உருவாக்கி அப்பிராந்தியங்களுக்கு அதிகளவிலான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கலாம். இந்தியாவை எடுத்துக்கொண்டால் அங்கு 28 மாநிலங்கள் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கின்றன என்றாலும் இந்தியா என்ற ஒருமைப்பாட்டுக்குள் அவை இருக்கின்றன.

மக்களின் மொழி. கலாசாரம் மற்றும் சமயம் போன்ற விசேட பண்புகளுக்கு மதிப்பளிப்பதன் ஊடாக உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப் - பினாலேயே இந்தியா ஒன்றுபட்டுள்ளது.

ஸ்ரீலங்கா தேசத்திற்கும் அதன் மக்களுக்கும் விசுவாசமுள்ளவர்களாக நாம் எப்போதுமே இருப்போம். தேவையேற்படும்போது ஆளுங்கட்சிக்கு ஆதரவளிப்பது போலவே தேசிய விடயங்கள் தொடர்பான அக்கறைக்கு எதிராக அரசு செயற்படும்போது நாங்கள் அதனை எதிப்போம்” என எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச அனுசர...

முயற்சியிலும் சாட்சிகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட விடயங்களில் சர்வதேச உதவி தேவை என்று ஆலன் குறிப்பிட்டார்.

‘‘குற்றங்களுக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும் எந்த ஒரு முயற்சியிலும் நம்பகத்தன்மை இருக்க வேண்டுமானல், சாட்சிகளின் பாதுகாப்பு, புலனாய்வு, விசாரணை, ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவில் சர்வதேச தலையீடு தேவை என்று நினைக்கிறோம்” என ஆலன் தெரிவித்தார்.

இலங்கையில் காவல்துறை, நீதித்துறை போன்றவற்றில் திறமையானவர்கள் இருந்தாலும் கடந்த 30 - 40 ஆண்டுகளில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் வெகுகுறைவாகவே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆலன் சுட்டிக்காட்டினார்.

”கடந்த 30-40 ஆண்டுகளில் மனித உரிமை மீறலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை நீங்கள் விரல்விட்டு எண்ணிவிடலாம். பெரும்பாலும் கீழ்நிலை வீரர்களும் காவல் துறையினருமே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆணையிட்டவர்கள் தண்டிக்கப்படுவதில்லை” என்கிறார் ஆலன்.

அதனால், சர்வதேச உதவியின்றி போர்க் குற்றம்போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை விசாரிப்பதற்கு இலங்கையால் முடியுமா என்ற சந்தேகம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

## வட்டாரத் தேர்தல்...

அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதோடு, இறுதி அனுமதிக்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அனுமதி கிடைத்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட எண்ணியுள்ளதாக அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா மேலும் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

ஆனால் அந்த நாட்களில் இந்த பிரித்தானியா, ஜப்பான் ஜெர்மன் போன்ற பேரரசுகள், நாடுகளையும் நிலங்களையும் ஆக்கிரமித்து பெரிய நிலப்பரப்பாக தம்மை விரிவுபடுத்தவுமே விரும்பியிருந்தார்கள்.

2 ம் உலக யுத்தத்திற்கு முன்னர், சீனா அப்பொழுது இராணுவ பொருளாதார அடிப்படையில் பெரிதாக வளர்ச்சி கண்டிராத நிலையில், பசுபிக் கடல் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளை, தன்வசப் படுத்தலில் ஏற்பட்ட போட்டியே மிகப்பெரும் பகையாக அமெரிக்க ஜப்பான் நாடுகளுக்கிடையில் சாம்பல் பூத்த அனலாக புகைந்து கொண்டு இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நாளில் ஜப்பானின் துரித பொருளாதார இராணுவ வளர்ச்சி அமெரிக்காவை மிகவும் சங்கடமான நிலைக்குள் தள்ளியதும் உண்மையே. ஆனாலும் உலகப் போர்களுக்கு முன்பிருந்தே இந்த இரு நாடுகளும் மிகவும் நட்புடனேயே பழகியிருக்கின்றன. முதலாம் உலகப்போரில் கூட ஜப்பான் நேச நாடுகளின் அணியிலேயே ஜெர்மனுக்கு எதிராக போர் செய்திருந்தது என்றால் பாருங்கள்.! இடையில் சின்ன முறுகல் என்றாலும் ஜப்பானை வளர்த்து செல்லப் பிள்ளையாகவே இன்று வரை வைத்திருக்கிறது அமேரிக்கா.

எடுத்துக் காட்டாக கடந்த சமாதான காலங்களில் யசூசி அகாசி இலங்கைக்கு பலமுறை வந்தார், கொழும்பிலே ஆலோசனை' கூட்டம் நடத்தினார், (அதிலும் இந்திய இராஜதந்திரிகள் கலந்து கொண்டது எமக்கு தெரியாது. சத்தியமாக நாம் காணவில்லை) பின்னர் உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி போவார். அங்கே அவர்கள் எதோ சொல்ல தலையை தலையை ஆட்டி ஆட்டி கேட்பது போல கேட்டுக் கொள்வார். அவருக்கு அவர்கள் சிங்க இராலுடன், ஜப்பான் மீன் ஸ்பெஷல் உம் செய்து கொடுக்க சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடுவார். பின்னர் கொழும்பு வந்து அள்ளிவைத்து பற்றவைத்துவிட்டு நல்ல பிள்ளையாக ஒரு அறிக்கையும் கட்டுநாயகாவில் விட்டு விட்டு சமத்தாக ஜப்பான் கிளம்பிப் போவார். இவர்கள் எல்லாம் வந்தது ஜப்பானிய நிகழ்ச்சி-நிரலுக்கேட்ப அல்ல. அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கமைவாகவே என்பது உலகறிந்த உண்மை. அவ்வளவு ஏன் இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாடு கூட 2003 இல் டோக்கியோவில் தலைமை தாங்கி கொண்டு நடத்தியதும் ஜப்பான் தான். பின்னுக்கு நின்றது அமெரிக்காதான்.

என்றைக்குமே அமெரிக்கா சொல்வதை ஜப்பான் தட்டியதும் இல்லை. ஜப்பான் சொல்வதை அமெரிக்கா காது கொடுத்து கேட்காமல் இருந்ததும் இல்லை. அணுகுண்டு போட்டு விளையாடிக் கொண்டது எல்லாம் சும்மா... என்று சொல்கிற அளவுக்கு அவர்களின் நெருக்கம் உலகப் போரின் பின் அடுத்த சில ஆண்டுகளிலேயே தொடங்கிவிட்டது.

பிரித்தானியா, இரசியா, ஜெர்மன், ஜப்பான், பிரான்ஸ் என்று அமெரிக்காவிற்குப் போட்டியாக பலநாடுகள் தடையாக நின்றன. 2ம் உலகப்போரில் பங்கு பற்றிய நாடுகள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் சமநிலைத் தகுதிகளுடனேயே காணப்பட்டன. அவை எல்லாம் கடந்து அந்த நிலையை அடைய அமேரிக்கா சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தது.

2ம் உலகப்போர் முடிவுக்கு வந்த சமயம், அதாவது ஜெர்மன் வீழ்ந்த பின்னரும் ஜப்பான் வீழவில்லை. அது பசிபிக் கடல் ஆதிக்கத்திற்காக போர் செய்து கொண்டே இருந்தது. அனைத்தையும் நிறைவுக்கு கொண்டு வர உலகம் விரும்பியது. ஆனால் அந்த நிறைவிற்காக அப்படியொரு அநியாயம் ஜப்பானுக்கு செய்திருக்கக் கூடாது, என்று பின்னாளில் உலகமே கண்ணீர் விட்டு அழுதது என்றால் மிகையில்லை. தவறு செய்த பிள்ளைக்கு அடித்த தந்தை, பிள்ளை அழுத பின்னர் தானும் அழும் தந்தை போல உலகம் அழுதது. அழுதென்ன செய்வது போட்ட குண்டுகளை திருப்பி எடுக்கவா முடியும்? சரி... ஜப்பான் அந்த அடி வாங்கக் காரணம் என்ன? அவர்களின் பலம், அவர்களின் தொழில் நுட்பம் மற்றும் இராணுவ வளர்ச்சி, அவர்களின் பேரரசு விரிவாக்கம், பசுபிக் கடல் ஆதிக்கம், ஜெர்மனுடனான கூட்டு என்று எல்லாம் பார்த்தோம். அதனையும் விட ஜப்பானிடம் இருந்த ஒன்று அதற்கும் உலகம் பயந்துதான் இருந்தது. அது என்ன? என்று கேட்பதனை விட, அது யார்? என்று கேட்பது பொருத்தமாகும்.

ஆம், கடந்த தசாப்தங்களில் தமிழரின் தற்கொடை அவதாரங்களைக் கண்டு இலங்கை இந்தியா உட்பட இந்த உலகமே பயந்தது போல, 2ம் உலகப்போரில் ஜப்பானின் தற்கொடை விமானிகள் (kamikaze - கமிக்காஸ்) இவர்களின் வீரத்திற்கும், தியாகத்திற்கும், துணிவிற்கும் அன்றைய உலகம் அதிகம் பயந்தது. அவர்களின் சாகசங்கள், வெற்றிகள் போன்றன மெய்சிலிர்க்கும் வரலாறுகள் ஆகும். முடிந்தால் தேடி வாசித்துப் பாருங்கள். February 20, 2009 தமிழர் தரப்பால் கொழும்பில் இருவேறு இடங்களில் நிகழ்த்தப்பட்ட அந்த இரு விமான தற்கொடைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்ட உடனேயே ஊடகங்கள் "kamikaze வழியில் தமிழர்" என்று செய்திகள் வெளியிட்டு விட்டன. வரலாறு சில பக்கங்களை திருப்பி திருப்பி எழுதிக் கொண்டே இருக்கும். காலமும் இடமும்தான் மாறுபடும் போல. 2 ம் உலக யுத்தத்தில் மட்டும் 3,860 kamikaze pilots தமது தாய் நாட்டிற்காக சாவை விரும்பி ஏற்றார்கள் என்று வராலாறு பதிந்து வைத்திருக்கிறது உறவுகளே. வரலாற்றில் அவர்கள் மீண்டும் பிறந்து கொண்டே இருப்பார்கள் போல.

இதனையும் விட, கடந்த மார்ச் மாதம் ஒரு செய்தி வந்தது. அது என்ன வென்றால் 2ம் உலகயுத்த காலத்தின் பொழுது ஜப்பான் தான் உலகிலே மிகப்பெரிய "முசிசி" என்ற நாமமுடைய போர்க்கப்பலை வைத்திருந்தது என்றும், நேச நாட்டு படைகளுக்கு அது மிகப் பெரிய இழப்புகளைக் கொடுத்தது என்றும் சொல்கிறார்கள். 1944 அக்டோபர் 24ம் திகதி பிலிப்பைன்ஸ் க்கு அருகில் சென்று கொண்டு இருக்கும் பொழுது அமெரிக்காவால் அந்த போர்க்கப்பல் கண்காணிக்கப்பட்டு, குண்டு வீசி மூழ்கடித்தார்கள். இது நடந்து 71 வருடங்களுக்குப் பிறகு அதாவது இந்த வருடம், அந்த கப்பலை கடலுக்கடியில் இருந்து கண்டு பிடித்த அமெரிக்க ஆய்வாளர்கள், அதனை வெளியில் எடுப்பதற்கான பணிகளை செய்து வருவதாக அந்த செய்தி சொன்னது. இந்த செய்தி ஒன்று போதும் அன்றைய ஜப்பானை விபரிக்க அல்லவா?

இன்னுமொரு விடயத்தை இங்கே சொல்லியே ஆகவேண்டும். 2ம் உலக யுத்த காலப்பகுதியில் இலங்கை பிரித்தானிய ஆட்சிக்குள் இருந்தது உண்மை. இலங்கையின் முக்கிய துறைமுகங்களான கொழும்பு, திருக்கோணமலை துறைமுகங்களை பிரித்தானியா 2ம் உலகயுத்தத்தில் முக்கிய தளமாக பயன்படுத்திக் கொண்டது. இதனை அறிந்த ஜப்பான் அவற்றை தாக்கியழிக்க புறப்பட்டது. 5 April 1942 அன்று ஜப்பானின் தாக்குதலில் கொழும்பு துறைமுகம் பலத்த சேதங்களுக்குள்ளானது.




வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

## பாலியல் லஞ்சத்தைக் கூடுதல் குற்றமாக்கிய காவல்துறை

அமெரிக்காவில் மூன்று காவல்துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும்படி வந்த காரை சோதனை செய்துள்ளனர்.

அதில் காரை ஓட்டி வந்த பெண் மது குடித்திருந்ததும், காரினுள் சிறிதளவு போதை பொருள் வைத்திருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவர் மீது குடித்துவிட்டு வாகனம் ஓட்டியது மற்றும் போதை பொருள் வைத்திருந்தது ஆகிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் தன் மீது வழக்கு போடாமல் தப்பிக்க வைக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் லஞ்சமாக உங்களுடன் பாலியல் உறவு வைத்துகொள்ள சம்மதம் என்றும் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு மறுத்த காவல்துறையினர் அவர் மீது கூடுதலாக லஞ்சம் தர முயன்றதாகவும் வழக்கு பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விநோதங்கள்

### ஓரின தம்பதிகளின் திருமண சான்று மறுப்புக்குத் தண்டனை

அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் கடந்த யூலை மாதம் ஓரினச்சேர்க்கையாளர்கள் திருமணத்தை சட்டப்பூர்வமாக அங்கீகரித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில் கெண்டாக்கி பகுதியை சேர்ந்த கிம் டேவிஸ் என்ற பெண் அதிகாரி ஓரின தம்பதிகளுக்கு திருமண சான்று வழங்குவது தனது மதத்துக்கு எதிரானது என கூறி மறுத்ததாக அவர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது. இந்நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி டேவிட் பன்னிங் கிம்முக்கு சிறை தண்டனை விதித்தார்.

மேலும் ஓரினத்தம்பதிகளுக்கு திருமணச்-சான்று வழங்குவதற்கு சம்மதித்தால் சிறை தண்டனையை ரத்து செய்வதாகவும் கூறினார்.

எனினும் கிம் இந்த சலுகையை ஏற்க மறுத்ததோடு தனக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு நன்றி என்றும் தெரிவித்தார்.

இப்படியும் நடக்கலாம்

### செல்பி எடுத்த பரிதாப உயிர்



டெலிடனிற்கு தினந்தோறும் விதவிதமாக செல்பி புகைப்படங்கள் எடுத்து அவற்றை இன்ஸ்டாகிராம் என்ற சமூக வலைதளத்தில் பதிவேற்றுவதில் மிக ஆர்வம் அதிகம்.

இந்நிலையில், கிடைத்த கைத்துப்பாக்கியில் குண்டுகள் நிரப்பப்படவில்லை என தவறாக நினைத்த அவர், அதனை தனது கழுத்திற்கு நேராக வைத்துக்கொண்டு குறிப்பார்ப்பது போல செல்பி எடுக்க முயன்றுள்ளார்.

அப்போது எதிர்பாராத தருணத்தில் துப்பாக்கியிலிருந்து வெளியான குண்டு அவரது கழுத்திற்குள் பாய்ந்தது. முதலுதவி சிகிச்சைகள் கொடுத்தும் பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.


- பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சமூக இணையத்தள உரிமையாளர் ஒருவரின் வீட்டிற்கு வந்த 6 சுற்றுலா பயணிகள் குளிப்பதை அவர் ரகசியமாக படம் பிடித்தமை குற்றமாகத் தீர்த்த நீதிமன்றம் அவருக்கு 6 மாத சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது.
- பிரித்தானிய இளவரசியான கேட் மிடில்டன் 3-வது முறையாக கர்ப்பமாக இருப்பது உண்மை என வாரப்பத்திரிகை செய்தியை வெளியிட்டுள்ளது.
- சக கைதிகளை கொன்று அவர்களது மாமிசங்களை சாப்பிடும் கொடுமை ருவாண்டாவில் உள்ள சிறையில் அரங்கேறி வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
- ஜேர்மனி நாட்டில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள சென்ற தாய் மற்றும் மகளை வன்புணர முயன்றவரின் நாக்கை கடித்து துப்பிய தாயாரின் துணிகர செயலுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

## கிண்ணத்தை கைப்பற்றியது - சி.ஆர் அன்ட் எப்ஸ்



ஹவலொக் பார்க்கில் இடம்பெற்ற நூற்றாண்டுக் கிண்ணமான ஆதர் றேமொன்ட் கிண்ணத்தை 26-8 என்ற புள்ளிகள் கணக்கில் ஹவலொக் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து, சி.ஆர் அன்ட் எ.்.ப்.சி கைப்பற்றியது.

போட்டியின் ஆரம்பத்தில் ஹவலொக் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் மத்திய கள வீரருமான சதுன் ஹேரத்தே முயற்சியொன்றை மேற்கொண்டு புள்ளிகள் பட்டியலை ஆரம்பித்து வைத்தார். இருப்பினும் இடைவேளையை தொடர்ந்து ஹவலொக் விளையாட்டுக் கழகத்தின் டுலாஜ் பெரேரா இலகுவாக கோலாக்க அவ்வணி 8 புள்ளிகளை அடைந்தது. இறுதியில் அவ்வணியின் முன்கள வீரர் நிபுன தவிந்த முயற்சியொன்றை பெற அவ்வணி 26-8 என புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

## அரச அதிபர் வெற்றிக் கிண்ண போட்டிகள் ஆரம்பம்

யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகின.

முதலாவது போட்டியாக கரம் போட்டி யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பமானது. நேற்றும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. பூப்பந்தாட்டம் எதிர்வரும் 7 மற்றும் 8ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் யாழ். இராணுவ நீதிமன்ற மைதானத்திலும், கால்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் யாழ். குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்திலும் பாசையூர் சென். அன்டனி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

வலைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 22ம் திகதி நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டு ைமதானத்தில் இடம்பெறவுள்ளதுடன் கயிறு இழுத்தல் போட்டி எதிர்வரும் 24ம் திகதி யாழ். ஸ்டான்லி கல்லூரியில் நடைபெறுகிறது.

மேலும் சதுரங்கப்போட்டி யாழ். மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 20ம் திகதி இடம்பெறவுள்ளது. அதேவேளை கிரிக்கெட் போட்டிகள் அக்டோபர் மாதம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இங்கிலாந்தை முந்தியது வேல்ஸ்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிதாக வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலின் பிரகாரம் முதல்முறையாக இங்கிலாந்தை விட வேல்ஸ் அணி முன்னிலை பெற்றுள்ளது.

யூரோ 2016 கால்பந்தாட்ட தொடருக்கான தகுதிகாண் சுற்றில் சைபிரஸ் அணியை எதிர்கொள்ளவதற்கான தயார்படுத்தல்களை வேல்ஸ் அணி மேற்கொள்ளும் நிலையில் இந்த புதிய தரப்படுத்தல் வெளியாகியுள்ளது.

புதிய தரப்படுத்தலில் பிரகாரம் 7ம் இடத்தில் இருந்த இங்கிலாந்து 10ம் இடத்திற்கு பின்தள்ளப்பட்ட அதேவேளை 10ம் இடத்தில் இருந்த சிலி 8ம் இடத்திற்கு முன்னேற்றியுள்ளது. 1146 புள்ளிகளுடன் வேல்ஸ் அணி தொடர்ந்தும் ஒன்பதாம் இடத்தைப் பெற்றுள்ளது.

புதிய தரப்படுத்தல் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்ட வேல்ஸ் அணியின் முகாமையாளர் கொலிமன், யுரோ கிண்ணப் போட்டிகளில் பிரகாசிக்க வேண்டும் என சுட்டிக்காட்டினார்.



## குத்துச்சண்டை போட்டியில் வெல்வாரா புரூக்



சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தின் 63.5கி.கி 67கி.கி இடைப்பட்டவர்களுக்கான பட்டத்தை மூன்றாவது தடவை தக்க வைக்கும் பொருட்டு பெரிய பிரித்தானியாவின் கெல் புருக் எதிர்வரும் ஒக்டோபர் 24ஆம் திகதி ஆர்ஜென்டினாவின் டியகோ சாவேஸுடன் மோதவுள்ளார்.

லண்டனில் சக நாட்டவரான பிராங்கி கவினை 29 வயதான புருக் தோற்கடித்த ஷெபீல்டில் உள்ள மோட்டார்பொயிண்ட் அரங்கிலேயே இந்தப்போட்டி நடைபெறவுள்ளது.

சாவேஸ் முரட்டுத்தனமான, கடினமான, நீண்ட நேரம் நிலைக்ககூடிய போட்டியாளராக இருப்பதால் கடும் போட்டியாக விளங்குவார் என புரூக் தெரிவித்துள்ளார். இடைப்பட்ட உலக குத்துச்சண்டை கூட்டமைப்பு பட்டத்தை கொண்டிருக்கும் சாவேஸ், தனது 26 தொழில் முறையான போட்டிகளில் 23ஐ வெற்றி கொண்டு, புரூக்ஸின் 35 போட்டிகளில் 35 என்ற சாதனையை முறியடிக்க நம்பிக்கை கொண்டுள்ளார்.

## பிரையன் சகோதரர்கள் அதிர்ச்சித் தோல்வி

இடம்பெற்றுவரும் ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில், ஒற்றையர் போட்டிகளில் முன்னணி வீர, வீராங்கனைகள் வெற்றிபெற்ற போதிலும், இரட்டையர் போட்டிகளில் அதிர்ச்சி முடிவுகள் கிடைக்கப்பெற்றன. ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆம் சுற்றில், முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச், ஒஸ்திரியாவின் அன்ட்ரியாஸ் ஹெய்டர்-மௌரெரை வெற்றிகொண்டார். பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆம் சுற்றில், முதல்நிலை வீராங்கனையான செரினா வில்லியம்ஸ், நெதர்லாந்தின் கிகி பேர்ட்டென்ஸை 7-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில், முதல்நிலை ஜோடியும் 5 தடவை அமெரிக்க பகிரங்க இரட்டையர் பட்டம் வென்றவர்களுமான பிரையன் சகோதரர்கள் (பொப் பிரையன், மைக் பிரையன்), சக அமெரிக்க ஜோடியான ஸ்டீவன் ஜோன்சன், சாம் குவாரே ஜோடியிடம் தோல்வியடைந்தனர்.





## காயத்தினால் போட்டியிலிருந்து விலகல்

**அமெரிக்க ஓப்பன் டெனிஸில்** ஷரபோவா காயத்தால் விலகியுள்ளார். கிராண்ட்ஸிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் டெனிஸ் போட்டி நியூயோர்க்கில் தொடங்கியது. இந்தப் போட்டியிலிருந்து முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான மரியா ஷரபோவா (ரஷ்யா) விலகியுள்ளார்.

வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் விலகியுள்ளதாக போட்டி அமைப்பாளர் டேவிட் புருவர் தெரிவித்துள்ளார். ஷரபோவாவின் விலகல் செரீனாவுக்கு கூடுதல் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. உலக தரவரிசையில் 2ஆவது இடத்திலிருக்கும் அவர், 2006ம் ஆண்டு அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ். வெற்றி


மும்முனைக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணிக்கெதிரான சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சௌத்அம்டனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட்டங்களைப் பெற்றது.

306 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.3 ஓவர்களில் 246 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

மிச்சேல் ஸ்டாக், நெதன் கொட்லர் நீலி, பட் கமிங்ஸ் மற்றும் ஷேன் வொட்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## 2022 பொதுநலவாயப் போட்டிகள் டேர்பனில்




2022 பொதுநலவாயப் போட்டிகளை நடத்துவதற்கு தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுநலவாயப் போட்டிகளை நடத்துவதற்கு தகுதிபெற்ற முதலாவது ஆபிரிக்க நகராக டேர்பன் பதிவாகியுள்ளது.

நிதிப் பிரச்சினைகள் காரணமாக பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கான போட்டியில் இருந்த கனடாவின் எட்மவுண்டன் நகரம் விலகியிருந்தது.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினமான ஜுலை மாதம் 18 ஆம் திகதி பொதுநலவாயப் போட்டிகள் ஆரம்பித்து ஜுலை மாதம் 30ம் திகதி நிறைவடையவுள்ளன. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தடைபெறும் பொதுநலவாயப் போட்டிகளின் 22 ஆவது தடவையாக தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் சாதனையாளர் விருது வென்றார் "நந்தினி சேவியர்"

## "கொடகே" சாகித்திய விருது



17வது கொடகேயின் சாகித்திய விருது விழாவில் வாழ்நாள் சாதனையாளருக்கான விருதை திருகோணமலையின் நந்தினி சேவியர் அவர்கள் வென்றுள்ளார்கள்.

வருடாந்தம் எழுத்தத்துறையில் சிறந்த படைப்புக்களை வெளியிடும் எழுத்தாளர் களுக்கான தனிப்பட்ட சாகித்திய விருதுகளை இலங்கையின் மிகப்பெரும் பதிப்பக நிறுவனமான கொடகே நிறுவனம் வழங்கி வருகின்றது.

தமிழ் மற்றும் சிங்கள மொழியில் வெளியாகும் புத்தகங்களுக்கே சாகித்தியப் பரிசுகளை வழங்கிவரும் கொடகே நிறுவனம் பதிப்பிலக்கியத்திற்கு நீண்டகாலமாகச் சேவையாற்றும் எழுத்தாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் 17வது வருடமாகத் தொடரும் சாகித்திய விழாவில் அவ் வாழ்நாள் சாதனையாளர் விருதை திருவாளர் நந்தினிசேவியர் அவர்கள் வென்றுள்ளார்.

சிறுகதைக்கான இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சாகித்திய விருதையும், நந்தினி சேவியர் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### கே.பி.க்கு ஆப்பு!

## இந்தியா கோரினால் இலங்கை கையளிக்கும்



விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளரும், ஆயுதக் கொள்வனவாள -ருமான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனை இந்தியா கையளிக்குமாறு கோரினால் கையளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஸ்ரீலங்காவிற்கு உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், கே.பியை விசாரணைகளுக்காக ஒப்படைக்குமாறு இந்தியா உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தால், அதன் அடிப்படையில் குமரன் பத்மநாதனை ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுவதாகவும் அவர் 17

### வட்டாரத் தேர்தல் முறை

## உள்ளூராட்சிமன்ற எல்லைகள் தொடர்பான வர்த்தமானி தயார்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயங்களை வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்வதற்காக அரச அச்சகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக அரச நிர்வாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஜனநாயக ஆட்சிக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பொருட்டு எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, அதுகுறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே குறிப்பிடுகின்றார்.

அந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்ததன் பின்னரே வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளதாக

-தேசத்தை அங்கீகரிக்கச் செய்வதன் ஊடாக அதிகாரங்களை அத்தேசத்தவர் தாமே பெற்றுக்கொள்வர். யாரும் அதனைப் பகிரத் தேவையில்லை -
"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

## எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு சுலோகங்கள் காட்சிக்கு!

சர்வதேச எழுத்தறிவு தினம் எதிர்வரும் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு கடந்த 4ம் திகதி (வெள்ளிக்கிழமை) கிழக்கு மாகாண சபையில் அதற்கான சுலோக அட்டைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

"எழுத்தறிவையும், வாசிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்துவோம்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட சுலோக அட்டையினை, கிழக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் சமந்த அபேவிக்ரமவிடம் கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பளர் ஏ.விஜயானந்தமூர்த்தி கையளித்தார்.

இந்நிகழ்வில் விசேட கல்வி அதிகாரி டபிள்யூ.டரானசிர், முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.ஸரூஜ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.




## "சர்வதேச உதவியுடன் விசாரணை" - இன்ரநெசனல் கிரைசிஸ் குரூப் அறிவிப்பு




இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையானது சர்வதேச உதவியுடன் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச அழுத்தக் குழுவான இன்டர்நேசனல் க்ரைசிஸ் க்ரூப்பின் இலங்கைத் திட்ட இயக்குனர் ஆலன் கீனன் கூறியிருக்கிறார்.

பிபிசிக்கு அவர் அளித்த பிரத்யேகப் பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சிலில் இலங்கையுடன் இணைந்து தீர்மானத்தைக் கொண்டுவரப் போவதாக அமெரிக்கா கூறியிருப்பது குறித்துப் பேசிய ஆலன், போர்க்குற்றம் குறித்த எந்த ஒரு 17

## சைவசமயப் போட்டிப் பரிசளிப்பு

திருகோணமலை சிவநயனி நற்பணி மன்றம் நடாத்திய சைவசமய வினாவிடைப் போட்டியின் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும், மன்றத்தின் உத்தியோகப்பூர்வ அங்குரார்ப்பன நிகழ்வும் 08.09.2015 செவ்வாய்கிழமை மாலை 5.30 மணிக்கு திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் மன்றத்தின் தலைவர் சி.ராம்கார்த்திவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்வாக திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் க. அருள்சுப்ரமணியம் சிறப்புரையாற்றுவதோடு மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆலயபரிபாலன சபையினர், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.




இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 05.09.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org